701

தாருல் இஸ்லாம்

பிப்ரவரி 1953

701
1-53.

1 MAR 1953
MADRAS





DARUL ISLAM

விலை 6 அணா

O7m211, N22D1
N53.32.2
199009

ஐந்து நக்ஷத்திர மார்க்

உயர்ந்த கைத்தறி

கைக்குட்டைகள்.......



TRADE MARK

REGD

பி. அஹமது & ஸன்ஸ்

"ALEE"

№ 2/70, நைனியப்பன் தெரு... மண்ணடி, சென்னை-1

DARUL ISLAM ✦ TAMIL MONTHLY ✦

தாருல் இஸ்லாம்

ESTD - 1919

வருட சந்தா உள்நாடு, சிலோன் ரூ. 4-8-0 பர்மா மலேயாவுக்கு ரூ. 6-0-0

நிர்வாக ஆசிரியர்: அல்ஹாஜ், பா. தாவூத்ஷா, பீ. ஏ.

மலர் 32	ஹிஜ்ரீ 1372, ஜமாதுல் அவ்வல் மீ — 1953, பிப்ரவரி மீ	இதழ் 2

199069

“ஏழு ரஸ்தாக்கள்”

விஞ்ஞானமும் வான சாஸ்திரமும் இன்று அடைந்திருக்கும் முற்போக்கு மிகவும் பாராட்டற்குரியதாகும். ஆனால், சென்ற சில நூற்றாண்டுகட்கு முன்னே வாழ்ந்த விஞ்ஞானிகள் அப்போது அவர்களுக்கிருந்த ஞானத்தைக் கொண்டு தங்களுக்கு தெரிந்த விவரங்களை வெளியிட்டார்கள். காலம் செல்லச் செல்ல, நவீன யந்திர சாதனங்கள் ஏற்பட ஏற்பட அந்த விவரங்கள் மாறுதலைப் பெற்று, இன்றைய நிலைமைக்கேற்ற வண்ணம் அமைக்கப்பட்டு வருகின்றன. எனவே, அந்தக் கால சூழ்நிலையில் குர்ஆன் ஷரீபின் வார்த்தைகளைப் படித்தவர்கள் அக்கால விஞ்ஞான அறிவுக்கும் ரசாயன அறிவுக்கும் வானசாஸ்திர அறிவுக்கும் தக்கபடியே அந்த ஆயாத்களுக்கு வியாக்யானங்களை வரைந்து வைத்தார்கள். எனவேதான், குர்ஆனில் குறிப்பிடப்படும் “ஏழு வானங்கள்” என்னும் தொடர், ஒன்றுக்குமேலொன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஏழு ஆகாய லோகங்கள் என்று பொருள்படுமென்று அவர்கள் எழுதிச் சென்றார்கள். ஆனால், ஆண்டவன் அப்படி ஏழு வானங்களென்று குறிப்பிடுவது, வான வெளியில் ஏழு முக்கிய கிரஹங்கள் சஞ்சரித்துச் செல்லும் பாதையையே யாகுமென்று இக்கால வானசாஸ்திர மறிந்த வியாக்யானிகள் வரைகின்றார்கள். அந்தக் காலத்து “இமாம்”கள் எழுதி வைத்திருக்கும் வியாக்யானங்களுக்கு இந்த வியாக்யானம் முரண்படுவதால், சில அறியாத பேர்வழிகள் தற்கால விஞ்ஞான மறிந்தவர்களை வழி கெடுப்பவர்களென்று ஏசத் துவக்கி விடுகிறார்கள்.

குற்றம் யாருடையது? அந்தக் காலத்திலிருந்த வியாக்யான கர்த்தாக்கள் அக்கால அறிவுத்திறனுக்கேற்றபடி குர்ஆனுக்கு வியாக்யான மெழுதினார்கள். எல்லாமறிந்த இறைவனின் வாசகங்கள் மட்டுமே எக்காலத்தும் மாற்றமுடியாதவையாய்த் திகழுமன்றி, குறுகிய அறிவு

(30-ஆம் பக்கம் பார்க்க)

DARUL ISLAM TAMIL MONTHLY
தாருல் இஸ்லாம்
ESTD 1919

பிப்ரவரி 1953, சென்னை - 5

பஞ்சு மூட்டைக்குள் தீப்பொறி

பம்பாய் நகரத்தில் சென்ற ஜனவரி மாதம் 9-ஆம் தேதி திரையிடப்பட்ட "சத்ரபதி சிவாஜி" என்னும் ஸினிமாப் படம் இலவம் பஞ்சு மூட்டைக்குள் தீப்பொறியை வைத்துக் கட்டிய கதையாகப் போய் முடிந்துவிட்டதென்பதை நாம் வருத்தத்துடனே குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஏனென்றால், மிகப் பொல்லாத வகுப்புவாத துவேஷ மனப்பான்மை கொண்ட எப்படிப்பட்ட ஹிந்து மஹா ஸபா அங்கத்தினரோ அல்லது ரா. சு. சே. சங்க அங்கத்தினரோ கூட இந் நாடெங்கும் மூட்டிவிட முடியாத அவ்வளவு பெரிய கொடிய துவேஷத்தை இந்தச் "சத்ரபதி சிவாஜி" என்னும் திரைப்படம் உண்டு பண்ணிவிட்டிருக்கிறதென்று எமக்குப் பம்பாயிலிருந்து தகவல்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. இவ்வளவு பொல்லாத தீமையைச் சமூகத்திடையே உண்டுபண்ணக் கூடிய விஷ வித்துக்கள் நிறைந்த ஒரு படத்தை ஸென்ஸார் போர்டுக்காரர்கள் எப்படி அங்கீகரித்தார்களென்பதையே எம்மால் யூகிக்க முடியவில்லை.

ஒரு பெயர்போன பம்பாய் ஆங்கில வாரப் பத்திரிகை தன்னுடைய ஸினிமா விமர்சனப் பகுதியில் இப் படத்தைப் பற்றிக் குறிப்பிடும் நற்சாட்சியை அப்படியே மொழிபெயர்த்துத் தருகிறோம்:—

> "கீழ்த்தரமான வகுப்புவாத உணர்ச்சியையும் பிரிவு மனப்பான்மையையும் உண்டு பண்ணிவிடக் கூடிய மிகமிகக் கேவலமான விஷயமொன்று இப்போது வெளிக் கிளம்பியிருக்கிறது. சென்றவாரம் இந்த நகரில் திரையிடப்பட்ட ஒரு படத்தை முதன் முதலாக ஸென்ஸார்கள் அங்கீகரித்தே இருக்கக் கூடாது. ஏனென்றால், சத்ரபதி சிவாஜி என்னும் அந்த பிலிம் இந்தியாவின் தேசபக்தி மிக்க வீரதீரரும், இந்நாட்டு மக்களனைவராலும் போற்றிப் பெருமைப்படுத்தப்பட்டு வருபவரும், பராக்கிரம சூரருமாகிய சிவாஜிக்கு எந்த விதத்திலும் பெருமையை உண்டு பண்ணி விடவில்லை...இப் படத்தை நாம் பார்ப்பதற்கு முன் இது நம் நாட்டிலுள்ள இரு பெரும் (ஹிந்து முஸ்லிம்) வகுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள பிளவைச் சமன் செய்து, சிவாஜியே அடிக்கடி உபதேசித்து வந்த சமாதானத்தையும் சகோதர வாஞ்சையையும் அவர்களுக்கிடையே உண்டு பண்ணி வைக்கத் தக்க விதமாக விளங்கக் கூடுமென்று ஆவலுடன் எதிர்பார்த்தோம். ஆனால், இதைப் பார்த்த பிறகு அக்கொள்கைகளெல்லாம் தலைகீழாய்ப் புரட்டப்பட்டுக் கிடப்பதைக் கண்டுகொண்டோம். இந்தப் படத்தைத் தயாரித்தவர்கள் அந்தப் பெரிய வீரரை ஒரு குறுகிய மதி படைத்த மனிதனாகவும், மதவெறி பிடித்துக் கரிந்துவிழும் பொல்லாதவனாகவும், எப்போது பார்த்தாலும் 'ஹிந்து ராஜ்' என்றும், 'ஹிந்து இது'வென்றும் 'ஹிந்து அது'வென்றும் கதறிப் பதறுகிற சிறுமதியாளனாகவும் கேலிச் சித்திரமாகச் சித்திரித்திருக்கிறார்கள். இப் படத்தில் ஒவ்வொரு சுருளும், ஒவ்வோர் அடியும் அந்தப் பெரிய சிவாஜியை ஒரு பரிதபிக்கத் தக்க அதிகார வெறிபிடித்த, சிந்தையைப் பறிகொடுத்த அரசியல் வாதியாகவே செய்துவிட்டிருக்கின்றன......சிவாஜியின் எல்லாச் சம்பாஷணைகளிலும் 'ஹிந்து தர்மம்,' 'ஹிந்து சாம்ராஜ்யம்' என்னும் சொற்களே திரும்பத் திரும்ப முழங்கப்படுகின்றன. இச் சம்பாஷணைகள் எவ்வளவு இழிவான உணர்ச்சியைக் கிளப்பி விட்டு விடக் கூடியவை யென்றால், இன்றைய ஹிந்து மஹா ஸபாவின் பற்றுதல் மிக்க அங்கத்தினனும், ரா. சு. சே. சங்கத்தின் விஷமூட்டப்பட்ட பொல்லாதவனுங் கூட இவற்றைக் கண்டு வெட்கித் தலை குனியத் தக்க முறையிலே அமைந்து கிடக்கின்றன."

எனவே, இந்தப் படத்தைப் பற்றி நாமொன்றும் அதிகமாக எம் சொந்த விமரிசனத்தை எழுத விரும்பவில்லை: ஆனால், இந்த விஷமமிக்க விஷத்துளிகளை உண்டுபண்ணிவிட்டவர்களைப் பற்றியும், இதை அரசாங்கம் தடை செய்யாது அனுமதித்து விட்டது 'நியாயந்தானா என்பதைப் பற்றியும் மட்டுமே ஈண்டுச் சிறிது குறிப்பிட விழைகிறோம்.

இந்தக் குறும்புச் சேஷ்டை மிக்க படத்தைத் தயாரித்தவர் பால் ஜீ. பெண்டர்க்கர் என்பவராவார். இவர் பாபுராவ் பெண்டர்க்கரின் சகோதரராகவும், சாந்தாராமின் ஒன்றுவிட்ட சகோதர

ராகவும் விளங்கி வருகிருர். மராத்தி பாஷையில் நிபுணரான இந்த பால்ஜீ சென்ற முப்பதாண்டுகளாகவே திரைப் பட வுலகிலும், நாடகமேடை யரங்கிலும் நற்கியாதி பெற்று வருபவர். இவர் நல்ல நல்ல கதைகளை யெல்லாம் எழுதி நடிக்கச் செய்து பெரிய கீர்த்தியைப் பெற்றுக்கொண் டிருக்கிருர். இறைவன், தேசம், மதம் என்னும் முப் பிரச்சினைகளின் மீதே இவர் கதைகளை அமைத்து, பொது மக்களின் உள்ளத்துள் கவர்ச்சியையும் வசீகரத்தையும் உண்டு பண்ணி விடுவார். எனவேதான், இவர் தயாரித்த சில மராத்தி சமூகப் படங்கள் (குறிப்பாக, மருமகள் என்னும் பொருளுள்ள "ஸோன்பாய்" என்னும் படமும், உப்பும் ரொட்டியும் என்னும் அர்த்தமுள்ள "மீட் பாக்கர்" என்னும் படமும்) பம்பாய் மாகாணவாசிகள் பலரின் உள்ளத்திடையே அழியாத கீர்த்தியைப் பெற்றுக்கொண்டு விட்டன.

ஆனல், இவரிடம் சில தோஷங்கள் குடிபுக ஆரம்பித்தன. இவருக்குப் பல மனைவிக ளுண்டு. பல மனைவிகளை வைத்துக் குடும்பத்தை நடத்தும் பொறுப்பு இவருடைய சொந்த விவகாரமென்று வைத்துக் கொள்வோம். ஆனல், இவருடைய எல்லா மனைவிகளுள்ளும் லீலா என்னும் நாமம் படைத்தவளே இவர் எடுக்கும் எல்லாப் படங்களிலும் பிரதம கதாநாயகியாக நடித்து, பிரபாத் ஸ்டுடியோவின் புகழ்மிக்க 'நக்ஷத்திரமாக' உயர்ந்து விட்டாள். சென்ற சுமார் 15 ஆண்டுகளாகவே இந்த லீலா என்னும் 'நக்ஷத்திரம்' திரைவானில் சுடர் வீசிக்கொண்டுதா னிருக்கிறது. இந்த 'நக்ஷத்திரம்' முற்குறிப்பிட்ட "சத்ரபதி சிவாஜி"யிலும் இடம் பெற்றிருக்கிறது.

இந்தப் புகழ் வாய்ந்த முக்கிய மனைவியைத் துணைவியாகக் கொண்ட பால்ஜீ அரசியல் விஷயத்தில் ரா. சு. சே. சங்கத்தின் கொள்கைகளையும், ஹிந்து மஹா ஸபாவின் குறுகிய மனப்பான்மைகளையும் முற்றமுற்ற ஏற்று நடக்க ஆரம்பித்தார். எனவே, இவருக்கு முஸ்லிம்கள்மீது சொல்லொணு எரிச்சலும் பகைமையும் துவேஷ உணர்ச்சியும் சுயமாகவே உற்பத்தியாகி விட்டன. மற்ற ஹிந்து மஹா ஸபாக்காரர்களும் ரா. சு. சே. பேர்வழிகளும் மேடைகளிலும் பொதுக் கூட்டங்களிலும் தங்கள் விஷம பிரசாரத்தைக் குறுகிய அளவில் புரிந்து வரும்போது, இந்த பால்ஜீக்குத் தம் மனத்துள் அடங்கிக் கிடக்கும் விஷத்தைக் கக்கி வெளிப்படுத்துவதற்கு ஒரு கீர்த்தி மிக்க நடிகையும், ஒரு பெரிய சினிமா ஸ்டுடியோவும், திரைப்பட உலகும் மிகப் பரந்த பிரசார வெளியை உண்டு பண்ணித் தந்துவிட்டன. எனவே, நாட் செல்லச் செல்ல இவருடைய குணவிசேஷங்கள் விபரீதமாக மாறிக் கொண்டே சென்றதுடன், இந்திய-பாக்கிஸ்தான் பிரிவினைக் கிப்பால் முகடு முட்டியும் விட்டன.

எனவே, 30-1-48 அன்று காந்திஜீ பரிதாபகரமாய் ஒரு ரா. சு. சே. சங்க வெறியனின் கைத்துப்பாக்கி ரவைகளுக்குப் பலியானதை யடுத்துப் பொதுமக்கள் ரா. சு. சே. சங்கத்தின் மீதும் ஹிந்து மஹா சபாவின் மீதும் சொல்லொணு ஆத்திரங் கொண்டு முனிந்தெழுந்து கலகங்கள் பல விளைக்க முற்பட்டபோது, இந்த பால்ஜீ என்னும் வகுப்புவாதியும் அந்தப் பொது மக்களின் கோபக் கனல்களுக்கு இலக்காகி விட்டார். ஆகவே, கட்டுப்பாட்டுக்கு அடங்காத அந்த ஜனங்கள் இவருடைய "மஹாராஷ்ட்ரா பிலிம் கம்பெனி" என்னும் ஸ்டுடியோவை லங்காதகனம் செய்து சுட்டெரித்துச் சாம்பல்மேடாகக் குவித்து விட்டார்கள். இதனல் இவர் நற்புத்தி பெற்றுக்கொள்வதற்கு மாருக, பின்னெரு சமயம் வாய்த்தால் தம்முடைய "கைவரிசை"யைக் காட்டிக் கொள்ளலாம் என்று சும்மா இருந்து விட்டார்.

காந்திஜீ படுகொலை புரியப் பட்டதைப் பற்றி ஜனங்கள் சீக்கிரம் மறந்து விட்டார்கள். ரா. சு. சே. சங்கமும் ஹிந்து மஹா ஸபாவும் மீண்டும் "நல்ல பிள்ளை"கள் போல், பதுங்கி யொளிந்து மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிக் கிளம்பி விட்டன. அரசாங்கங்கூட

அச்சங்கத்தையும் ஸபாவையும் அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனங்களென்றே ஏற்றுக் கொண்டு விட்டது. இப்படிப்பட்ட சரியான சந்தர்ப்பத்தையே நம் பால்ஜீயும் எதிர்பார்த்திருந்தார்.

இவருக்கிருக்கிற செல்வாக்கைக் கொண்டு பம்பாய் அரசாங்கத்திடம் முறையிட்டு, தம்முடைய ஸ்டூடியோவை-கலாநிலயத்தை — ஸினிமாப் படங்களை மக்களின் கலைவாழ்வுக்காக உற்பத்தி செய்யும் ஸ்தாபனத்தை எவரோ சில குண்டர்கள் அநியாயமாகவும் அக்கிரமமாகவும் வீணே சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டார்களாகையால், அதை மீண்டும் நிர்மாணிக்கக் காருண்ய மிக்க அரசாங்கம் தமக்கொரு தொகையைக் கடனாக ஈந்து காப்பாற்ற வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார். வழக்கப்படி, காந்திஜீயை அடியோடு மறந்துவிட்ட பம்பாய்க் காங்கிரஸ் அரசாங்கம் இந்த ஸினிமா உற்பத்தியாளராகிய பால்ஜீக்குக் கடனாகக் கொஞ்சம் நிதி வழங்கிற்று. அந்த நிதியை வைத்துக் கொண்டே இவர் தம்முடைய ஸ்டூடியோவைப் புனர் நிர்மாணம் செய்து கொண்டு, தாம் 1948-இல் பெற்றுக் கொண்ட தண்டனைக்குப் பழிதீர்த்துக் கொள்ளு முறையிலே இந்த 1953-இலே "சத்ரபதி சிவாஜி" யென்னும் விஷந்தோய்ந்த அம்பை எய்ய ஆரம்பித்திருக்கிறார்.

இதில் விசேஷம் என்னவென்றால், இவர் எழுதித் தயாரித்துள்ள இந்த வகுப்புவாத துவேஷ மனப்பான்மை மிக்க கொடிய சிருஷ்டியைக் கண்டு மீண்டும் சில புத்திசாலித் தனமான மக்கள் தம்மீது பாய்ந்து வீழாம விருப்பதற்காக, எப்போதுமே ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபடத் தக்க நல்ல படங்களைத் தயாரித்து மக்களிடையே புகழைச் சம்பாதித்துக்கொண்டிருக்கும் பிரதிவிராஜ் போன்றவர்களைத் துணையாகக் கொண்டே இந்தச் சிவாஜி என்னும் படத்தைத் தயாரித்திருக்கிறார். ஏனென்றால், இரு வகுப்பினர்களின் சமூக வாழ்வுக்காகப் பாடுபடும் பிரிதிவிராஜ்கூட இந்தச் சிவாஜிப் படத்தை உற்பத்தி செய்ய உதவியிருப்பதால், தாமொன்றும் விஷம எண்ணத்துடன் இந்தச் சிருஷ்டி செய்யவில்லையென்று கபடத்தனமாக மக்களின் எண்ணத்தை வேறு பக்கம் திருப்பலாமென்று இந்த பால்ஜீ கருதிவிட்டார். ஓரளவுக்கு அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். பொது மக்களைச் சுலபமாக ஏமாற்றிவிட முடியுமென்னும் உண்மையை இவர் தம்முடைய முப்பது வருஷ திரைப்பட வுலக அனுபவத்தில் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார். எனவே, குற்றம் இவர்மீதில்லை.

ஆனால், இவருடைய ஸ்டூடியோவைப் புனர் நிர்மாணஞ் செய்வதற்காக பம்பாய் அரசாங்கத்திடம் இவர் நிதியுதவி வேண்டி நின்றபோது, இவர் இனிமேல் வகுப்புத் துவேஷத்தை மக்களிடையே உண்டு பண்ணக் கூடாதென்னும் வாக்குறுதியையாவது அவ்வரசாங்கம் பெற்றுக் கொண்டதா? இல்லை. இவர் உற்பத்தி செய்கிற "சத்ரபதி சிவாஜி" என்னும் கதை நம்பகமான சரித்திர பூர்வமாக, உண்மைக்கு மாற்றமில்லாமல் எந்த ஒரு சாராரின் மனத்தையும் கிஞ்சித்தும் புண்படுத்தாத வகையில் அமைந்திருக்கிறதா என்று பொதுமக்கள் நலத்தின் மீது கருத்துக் கொண்டதாக அழைக்கப்படும் மோரார்ஜீ தேஸாயின் அரசாங்கம் கிஞ்சித்தாவது கவலை எடுத்துக் கொண்டதா?— [இந்த மோரார்ஜீ தேஸாய் என்னும் காங்கிரஸ் பக்த சிகாமணியே காந்திஜீ கொலையுண்ட போது பம்பாய் மாகாண அரசாங்கத்தின் உள்நாட்டிலாகாவை ஏற்று நடத்திய மந்திரியாக விளங்கி வந்தாரென்பதையும், இந்த தேஸாய் காந்திஜீ கொலை வழக்கில் பிரதானமான பிராஸிகூஷன் சாட்சியாக விசாரிக்கப்பட்டாரென்பதையும், குற்றவாளியாகக் கைதிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த திரு ஸவர்க்கார் என்னும் மாஜீ ஹிந்து மஹா ஸபாத் தலைவருக்கு எதிராக இவரளித்த சாக்ஷியத்தின் போது அந்த ஸபாவைப் பற்றியும், அதன் அங்கத்தினர்களின் விபரீதக் கூற்றுக்களே காந்திஜீயின் படுகொலைக்குக் காரணங்களாய் அமைந்துவிட்டன என்பதைப் பற்றியும் உருக்க

மாக எடுத்துக் கூறிய புண்ணிய புருஷ ராவார் என்பதையும் உங்களுக்கு ஞாபக மூட்டுகிறோம்.] அல்லது இந்தப் படம் எடுத்து முடிந்து ஸென்ஸார்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதாவது அந்தப் பொறுப்புமிக்க கண்ணிய வான்கள் இந்த நெருப்புப் பொறியை இலவம் பஞ்சு மூட்டைக்குள் வைப்பது தகாத காரியமாகு மென்பதை உணர்ந்தார்களா? இல்லை. பால்ஜீ என்பவர் தயாரித்த அணுக்குண்டுக்குப் பொருத்தப்பட்ட திரிமீது அந்த ஸென்ஸார்கள் நெருப்பு வைத்துவிட்டார்க ளென்றே சொல்ல வேண்டும்.

இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சி க்ஷீண தசையை யெட்டிக்கொண்டிருந்த போது மஹாராஷ்ட்ரர்களின் ஆட்சி உச்சத்துக்குப் போயிற்று. அப்போதிருந்த இரு வம்ச சரித்திராசிரியர்களுமே ஒருவர்மீது மற்றொருவர் அகாரணமாகவும், பொறாமையினாலும் தத்தம் மனம்போனபடி எழுதிவைத்துக்கொண்டார்கள். இடைநடுவே புகுந்த பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் அவ்விரு சாராரையும் பிரித்தாளுவதற்காகத் தன்னுடைய கைவரிசையையும் அச் சரித்திர நிகழ்ச்சிகளுக்குள் நுழைத்து வைத்து விட்டது. முடிவு என்னவென்றால், மெய் எது? பொய் எது? என்று தெள்ளிப் புடைத்து எடுக்க முடியாதபடி ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பலமான முடிச்சை பிரிட்டிஷார் போட்டுவிட்டனர். இப்படியிருக்க, சிவாஜியின் சரித்திரத்தையோ அவ்ரங்கஜேபின் சரித்திரத்தையோ இந்தக் காலத்தில் படம் பிடித்துக் காட்ட வேண்டு மென்றால், படமெடுப்பவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்? அவரவரும் தத்தம் மனம் போனபடி படமெடுக்க முற்படுவ தென்றால், ஏற்கெனவே பல தலைமுறைகளாக நம் நாட்டு ஹிந்து-முஸ்லிம் சமூகத்திடையே வேரூன்றி நிற்கும் வேற்றுமை யுணர்ச்சி விபரீதமான முடிவை உண்டுபண்ணி விடுமன்றோ? இப்படிப்பட்ட பொல்லாத விபரீதம் விளையாமல் தடுக்க வேண்டிய மகத்தான பொறுப்பு நம் அரசாங்கத்தைச் சேர்ந்ததல்லவோ! ஒரே ஒரு மனிதனை வழிகெடுக்கத் தக்க அம்சம் நிறைந்த ஸினிமா பிலிமைப் பொதுமக்கள் பார்க்கத் தக்கதென்று அங்கீகரிப்பது தவறென்று கூறும் ஸென்ஸார் போர்டு, இப்படி ஒரு சமூக மக்களையே தவறான பாதையில் கொண்டு சேர்க்கத்தக்க முறையி லமைந்த “சத்ரபதி சிவாஜி” என்னும் படத்தை அங்கீகரித்தது நியாயமா?

அரசாங்கம் உடனே கண்விழித்து அப்படத்தைத் தடை செய்யு மென்று எதிர்பார்க்கிறோம். பம்பாய் ராஜ்ய அரசாங்கம் கவனிக்கவில்லை யென்றாலும், நம் சென்னை யரசாங்கமாவது உடனே விழிப்படையு மென்று நம்புகிறோம்.

வீட்டுக்குள் ஜும்ஆ தொழலாமா?

இரங்கூன் நகரிலே “மா இலை மாஹாத்மிய” த்தைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும் புண்ணியாத் மாக்கள் சிலர் வேறொரு வினோதத்தையும் அந்நகரில் உண்டுபண்ணிவிட்டிருப்பது மிகவின்னியாசமா யிருக்கிறது. என்னவென்றால், அந் நகரிலே யாரோ ஓர் “ஆலிம்” பெண்களுக்கு “முரீது” கொடுத்து வருகிறாராம். அவர் தம்முடைய சிஷ்யைகளின் சௌகரியத்தைக் கருதி, ஒரு வீட்டுக்குள்ளே, வெறும் முஸ்லிம் மாதர்களே நிறைந்த கூட்டத்திலே வெள்ளிக்கிழமைப் பிற்பகல் ஜும்ஆ நேரத்திலே குத்பா ஓதுகிறாராம். பிறகு அவரே முன்னின்று தொழுகையை நடத்துகிறாராம். அவருடைய இந் நடக்கையைப்பற்றி எவரும் வினவத் துணிந்தால், “வீட்டுக்குள் ஜும்ஆ தொழக் கூடாதென்று என்ன ஆதாரம் இருக்

கிறது? பெண்கள் இமாமைப் பின் தொடர்ந்து ஜும்ஆ தொழுவதில் குற்ற மென்ன இருக்கிறது?'' என்று வினவு கிருராம். எனவே, இது விஷயத்தில் எமது அபிப்பிராயம் என்ன வென்று தினம் பல விமானக் கடிதங்கள் பர்மாவி லிருந்து எமக்கு வந்துகொண்டே யிருக் கின்றன.

புகாரீ ஷரீப் என்னும் பிரதானமான ஹதீது நூலின் 11-ஆவது அத்தியாயத் தின் 11-ஆவது ஹதீதைக் கவனித்தால், ரசூலுல்லா(ஹ்) (சல்அம்) அவர்கள் நிகழ்த்திய முதல் ஜும்ஆத் தொழுகை எப்படி ஒரு மஸ்ஜிதில் நிகழ்வுற்றதோ அங்ஙனமே அடுத்த ஜும்ஆத் தொழு கை, பஹ்ரைன் என்னும் பகுதியிலுள்ள ஜுவாதா என்னு மிடத்திலுள்ள மஸ் ஜிதிலேதான் நிகழ்ந்ததென்று தெரிய வருகிறது. பிறகு அதே ஹதீதின் மற் ருெரு பகுதியிலே, ஜலா என்னும் பிர தேசத்திலுள்ள ஒரு வயல் வெளியிலே, அவ் வயல்களைக் கண்காணித்து வந்த ருஜய்க் என்பவர் ஜும்ஆவை நடத்திய தாகவும் தெரிய வருகிறது. எனவே, மஸ்ஜிதிலும் திறந்த வெளிகளிலும் சாதாரணமாக ஜும்ஆத் தொழுகை நடைபெறலா மென்று பெறப்படுகிறது. இதை அந்த இரங்கூன் "ஆலிம்" தம் கூற்றுக்கு ஆதாரமாகக் கொண்டு வீட் டுக்குள்ளே ஜும்ஆ நடத்துகிருர் போலும்!

இரங்கூன் போன்ற பெரிய நகரத்தில் பல மஸ்ஜிதுகளில் ஜும்ஆ நடக்கும் போது, பிரத்தியேகமாக ஒரு வீட்டுக் குள் அதை நடத்துவது மூளைக்குப் பொருத்தமாகப் படவில்லை. ஆனல், இப்படிப் பிரத்தியேகமாக வீட்டுக்குள் குத்பாவையும் தொழுகையையும் நடத்து வதால் ஸ்திரீகள் பயனடைவார்களன் ருே? என்று கேட்கலாம். வாஸ்தவந் தான்! ஆனல், அதே புகாரீ ஷரீபின் அதே 11-ஆம் அத்தியாயத்திலுள்ள 12-ஆவது ஹதீதில் உள்ள, "அல்லாஹ்வின் பள்ளிகளுக்கு விஜயம் செய்வதினின்று அல்லாஹ்வின் அடியாள்களைத் தடை செய்யாதீர்கள்!'' என்னும் ரசூலுல் லாஹ்வின் நல்லுபதேசங்களை ஏன் நாம் காற்றில் பறக்கவிட்டோம்? அந்த ஹதீது பூர்வமாகப் பார்க்கப்புகின், தொழுகைக் காகப் பள்ளிகளுக்குள் செல்லும் பெண் களை எவரும் தடை செய்யக்கூடா தென்றுதானே அர்த்தம்? அப்படி அவர் கள் பள்ளிகளுக்குச் செல்வதாயிருந்தால், வீட்டுக்குள் அவர்களுக்காகத் தனி குத் பாவும் தனித் தொழுகையும் தேவை யில்லை யல்லவா? இரும்பைத் தின்றுவிட் டுச் சுக்குக் கஷாயம் குடித்த கதையாக, பள்ளிகளுக்குச் செல்லும் பெண்களைத் தடுக்கக்கூடா தென்று நபிகள் திலகம் (சல்) கடுமையாய்க் கட்டளையிட் டிருக்க, அவ் வுபதேசத்தைக் கைவிட்டோம். பெண்களை வீட்டுள் போட்டுப் பூட்டி வைத்தோம். ஆண்களுக்கு மட்டுமே ஜும்ஆ ஏகபோகமாய்ச் சொந்தமென இழி வழக்குப் பேசினேம். இப்போது வீட்டுள் அடைபட்டுக் கிடக்கும் பெண் களுக்காக இரங்கூனிலே தனி ஜும்ஆ நடத்துகிருர்கள். நன்று, நன்று!

62 : 9-இல் ஆண்டவன் எடுத்த எடுப்பி லேயே "ஏ ஈமான் கொண்டவர்காள்!... அல்லாஹ்வின் ஞாபகத்தின் பக்கல் நீங்கள் விரைந்தேகுங்கள்!'' என்று தான் கட்டளையிட் டிருக்கிருனே யன்றி, "ஏ ஈமான் கொண்ட ஆண்பிள்ளைகாள்!'' என்று விளித்து, ஆண்களுக்கு மட்டும் ஜும்ஆவைக் கடமையாக்க வில்லை. எனவே, இரங்கூனிலுள்ள நண்பர்கள் அந்த "ஆலிமை" அண்மி, பெண்களை வீட்டுக்குள் போட்டு அடைத்து வைக்க வேண்டா மென்றும், அவர்களைத் தாரா ளமாக மஸ்ஜிதுக்கு அனுப்பி வைக்க உபதேசிக்க வேண்டுமென்றும் நயமா கக் கேட்டுக் கொள்வதுடன், இப்படிச் செய்வதால் ஹதீதுக்கோ குர்ஆனுக் கோ மாற்றம் விளையா தென்பதையும் விளக்கிக் காட்டி, இனிமேல் அப்படித் திரைமறைவு ஜும்ஆவை நடத்த வேண் டாமென்றும் விண்ணப்பித்துக் கொள் வார்களாக! மிகவும் படித்து ஓதியவ வராகத் தம்மை யழைத்துக் கொள்ளும் அந்த "ஆலிமும்" எந்த ஹதீதின் இடுக்கு வழியாகவாவது தம் தவருன செயலைச் சரியென்று நிரூபிக்க முடி யாதா? என்று வேலையற்றுத் துருவித்

தேடுவதை விடுத்து, பெண்களுக் குரிய நியாயமான உரிமையை அவர்களுக்கு மீட்பித்துக் கொடுப்பதில் கொஞ்சம் கவனம் செலுத்துவாராக! எல்லாவற்றுக்கும் மேலாக அல்லாஹு—த்தஆலா நம் மனைவரையும் காத்து ரக்ஷிப்பானாக!

"நாகூர் ஆண்டவர் கந்தூரி"

என்று ஒரு முஸ்லிம் காலண்டரின் பிப்ரவரி ஏட்டில், 25-ஆம் தேதியில் சிவப்புமையால் பொறிககப்பட்டிருக்கிறது. அன்று, ஜமாதுல் ஆகிர் பிறை 10 என்று பச்சை மையால் தீற்றப் பெற்றிருக்கிறது. அன்று அந்த "ஆண்டவர்" பேரால் வெகு விமரிசையான சந்தனக்கூடு கிளப்பப்படும்; பற்பல ஊர்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும் ஆங்குச் சென்று குழுமுவார்கள். எவ்வாண்டையும்விட இவ்வாண்டில் அதிக ஜனங்கள் கூடுவார்களென்றும், அதிகபணம் வசூலாகுமென்றும் சோதிடம் சொல்லப்படுகிறது. என்னெனின், இவ்வாண்டில், நாகூர் நாகபட்டினம் காரைக்கால் தரங்கம்பாடி முதலிய கரையோர நகரங்களிலும், அவற்றையடுத்து மேற்கே தஞ்சை திருச்சி ஜில்லாவிலுள்ள ஒரு சில பகுதிகளிலும் கடும் புயலாலும் பெருமழையாலும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டது, "நாகூர் ஆண்டவ"ருக்கு ஜனங்கள் அபசாரம் (குற்றம்) செய்து விட்டமையால், "ஆண்டவ"ரது கோபப்பார்வையாலேயே நேர்ந்ததென்றும், அதற்காக "ஆண்டவ"ருக்குப் பிராயச் சித்தம் கோபப் பார்வை நீங்கச் செய்யப்பட வேண்டுமென்றும், அதற்காக அதிக பணம் வேண்டுமென்றும் ஒரு புறம் பிரசாரம் புரியப் பட்டு வருகிறதாம்.

மற்றொருபுறம் இவ்வாறு கூறப்பெறுகிறதாம்: "நாகூர் ஆண்டவர்களது அற்புதக் கராமத்தாலேதான் இவ்வளவோடு அந்தப் புயல் பெருமழை நஷ்டம் நின்று விட்டன. ஆகலால், அநேக மக்கள் வந்து இவ் வருட கந்தூரியைச் சிறப்பித்தல் வேண்டும். மினாரத் தங்கக் கலசம் காணமற்போய் அகப்பட்டது ஆண்டவர்களின் அற்புத சக்தியல்லவா?" இவ்வாறெல்லாம் "ஆண்டவர்" சார்பிலே பிரசாரம் வெகு தடபுடலாய்ப் புரியப்பட்டு வருகிறதெனக் கேள்வி யுறுகிறோம்.

ஏற்கெனவே வேண்டியதற்கு அதிகமாகவே அவ்வூர் தர்காவில் அந்த "ஆண்டவர்" பேரால ஷிர்க்கு பித்அத்தெல்லாம் நன்கு நடைபெற்று வருகின்றன. அவற்றுடனே இவ்வாண்டில் இந்தப் புயல் "அற்புதமும்" சேர்ந்து கொண்டு விட்டபடியால், அங்கு நடைபெறப் போகும் மகா ஷிர்க்குகளை மதிப்பிட்டுக்கூற முடியுமோ? இவ்வாறெல்லாம் "ஆண்டவர்" பேரால் பிரசாரம் புரியப் படுவதனாலேயே ஆண்டவன் (அல்லாவின்) ஏகதெய்வத் தவ்ஹீத் இந் நாட்டில் இணையில்லாப் பிற்போக் கடைந்து வருகிறது. வேலியே பயிரை மேய்வதேபோல், படித்த மௌலானாக்களும் மௌலவீகளும் கூடி, கந்தூரி ஷிர்க்கு பித்அத்களைப் பார்த்துக் கொண்டு வாளா விலகி நிற்பதோடு போகாது, அவுலியாக்கள் பேரால் நடை பெற்று வரும் சகலவித ஷிர்க்கு பித்அத்களையும் ஆதரித்தும் வருகிறார்கள். தென்னாட்டு படேபடே மௌலானா மௌலவீகளின் கைச்சாத்துடன் கூடிய "**ஹிதாயத்துல் அனும் இலா ஜியாரத்தில் ஔலியா யில்கிரும்**" என்னும் ஆபாச, வழிகெடுக்கும் நூலொன்று எமக்கு எட்டியுள்ளது; இதன் சார்பாயுள்ள தனி விமர்சனம் மார்ச்சு தா. இ. த்தில் வெளிவரும். ஆவலுடனே எதிர்பாருங்கள்.

படே படே பண்டிட்ஜீகளும், சாஸ்திரிகளும் ஒருமிக்கத் திரண்டு, "விக்கிரக ஆராதனை ஆகும்," என்று பத்வா விடுத்தால், அவ் விக்ரகிகத்தொழும்பு "ஆகுமானதாக" ஆய்விடமாட்டாது. சமாதி (கப்ர்) வணக்கமும் அப்படித்தானே! எனினும், முற்குறிப்பிட்ட பரம ஆபாசமான வழி கெடுக்கும் நூலில் கையொப்பமிட்டிருக்கும் பெரிய பெரிய மௌலானா மௌலவீகள் தங்கள் ஈமானை யாருக்கோ அடகு வைத்துவிட்டு, நாகூர் போன்ற தர்காக்களில் நடக்கும் அழிச்சாட்டியங்களை நல்வரவேற்று நற்சாட்சியளித்துள்ளார்கள்!

ஹிந்தி உருப்படாத பாஷை யென்று நாம் சொல்லவில்லை. சென்னை கவர்னரே சாட்சியம் பகர்கிறார்!

தமிழும் ஹிந்தியும்

நாம்பரம் ஹிந்தி வித்தியாலயாவின் நான்காவது ஆண்டுவிழா சென்ற 27-1-53 அன்று நடந்தது. அதற்குச் சென்னை கவர்னர் ஸ்ரீபிரகாசா தலைமை வகித்தார். அவர் அப்போது புரிந்த சொற் பெருக்கின் முக்கிய பகுதியைக் கீழே பிரசுரிக்கிறோம். சகலவற்றையும் அவரே மிக நன்றாய் விளக்கிவிட் டிருப்பதால், நாமொன்றும் மேலதிகமாக விமர்சன மெழுத விரும்பவில்லை.

கவர்னரின் பிரசங்கம்

ஸ்ரீ பிரகாசா கூறினார்:—இந்த நாட்டிலுள்ள வேறு பிரதேச பாஷைகளுக்குக் குந்தகம் விளைக்கத் தக்க முறையிலே ஹிந்தி பரத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறவர்களுள் நானொருவன் அல்லேன். என்னைப் பொருத்த மட்டில், நான் என்றைக்குமே ஹிந்தியை நம் நாட்டின் தேசிய பாஷையாக ஆக்கவேண்டு மென்று நான் எப்போதுமே சம்மதித்தது கிடையாது; இன்றைக்குங்கூட நான் கொஞ்சமும் தயக்கமின்றி அதே உண்மையைத் தான் எடுத்துரைப்பேன். இதற்கு என்ன காரணமென்றால், நம் நாட்டு மக்கள் எல்லோரிடையேயும் இந்தி பாஷையைப் பரத்துவதனால் அந்தப் பாஷை தான் குட்டிச் சுவராய்ப் போய்விடுகிறது. எவனெவன் தன் தன்னிஷ்டத்துக்குத் தன்தன் மனம் போன போக்கில் பேசுகிறானோ அதைத்தான் இந்தி பாஷை யென்று பெயரிட் டழைக்கிறார்கள். ஒவ்வொருவனும் கண்ட கண்ட மாதிரியாக அந்தப் பாஷையைப் பேசுவதையும், அவன் அப்படிப் பேசுகிறதற்குத்தான் இந்தி யென்று பெயர் என்று கூறுவதையும் நான் காண்கின்றேன்.

மிக மிகக் கடினமான மொழி

இந்தி மிகவும் சுலபமான மொழியென்று பல பேர்வழிகள் இடம்பமாகக் கூறுகிறார்கள். ஆனால், இந்தி யென்பது ஒரு மிகக் கடினமான மொழி யென்பதும், அதை எந்த மனிதன் வேண்டுமானாலும் பேசக் கூடிய விதத்தில் அது அமைக்கப்பட்டில்லை யென்பதும் எனக்கு நிச்சயமாய்த் தெரியுமென்பதை உங்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன். எனக்கு இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும், என்னைச் சூழவும் அந்த மொழி எல்லா மக்களாலும் படுகொலை புரியப் படுவதை நான் காணக் காண, இந்தி தேசிய பாஷையாக ஆனாலும் சரியே, அல்லது ஆகாமற் போனாலும் சரியே, எப்படியாவது அந்தப் பாஷை கொலை புரியப் படாமல் காப்பாற்றப்பட்டால் போதுமே என்று தான் நான் கவலைப் படுகிறேன். காலஞ் சென்ற காந்திஜீ பேசிக் கொண்டிருந்த ஹிந்தி எனக்கு நினைவி லிருக்கிறது. அவர் பேசி வந்த இந்தி சுத்த மோசமாகவே இருந்து வந்தது. எனினும், அனேக மக்கள் காந்திஜீ பேசியதைப் போலவே தாங்களும் பேசவேண்டு மென்று ஆசை கொண்டு, அவர் பேசிய மாதிரியாகவே பேசி, ஹிந்தியைக் கொலை செய்து விட்டார்கள். இதை யெல்லாம் கண்ட நான், என்னருமைத் தாய் மொழியாகிய இந்தி பின்னொரு காலத்தில் தேசிய பாஷையாக ஆக்கப் படுமேயானால், அது நிச்சயமாகப் படுகொலை புரியப்பட்டு, சிதைக்கப்பட்டு, சிதறடிக்கப் பட்டு விடுமென்று அப்போதே நன்குணர்ந்து கொண்டு விட்டேன்.

இன்று நம் நாட்டிலே ஹிந்தி பாஷையைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்ன நினைக்கிறார்கள், தெரியுமா? அவர்களுடைய ஹிந்தியை இந்தியன் ஒவ்வொருவனும் எப்பாடு பட்டாவது கற்றுக் கொண்டுதான் தீரவேண்டு மென்றும், ஆனால், தாங்கள் மட்டும் வேறு எந்த மொழியையும் கற்றுக் கொள்ள முடியா தென்றுமே அவர்கள் சவால் விடுக்கிறார்கள். இன்று ஹிந்தி தேசிய பாஷையாக ஆக்கப்பட்டு விட்டதை யடுத்து நம் நாட்டில் எத்தனையோ எண்ணிறந்த மக்கள் மிகவும் நரக அவஸ்தையுடன் ஹிந்தியைக் கற்றுக் கொள்ள முற்பட் டிருக்கும்போது, ஹிந்தியைத் தன் தாய் பாஷையாகக் கொண்டவன் ஒவ்வொருவனும் அதே மாதிரியாக அவஸ்தைப் பட்டே வேறு பாஷைகளைக் கற்றுத் தீரவேண்டும் என்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். அப்போதுதான் எருதின் புண் காக்கைக்குத் தெரியும்.

இப்போது பாருங்கள்! நான் இந்த மாகாணத்துக்கு கவர்னராக நியமனம் பெற்று வந்ததிலிருந்து எவ்வளவோ சிரமப்பட்டுத் தமிழைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். ஆனால், சில சொற்களை மட்டுமே என்னால் இதுவரை கற்றுக் கொள்ள முடிந்ததே யொழிய, ஒரு வாக்கியத்தைக்கூட என்னால் தமிழில் பேச முடியவில்லை. ஹிந்தி பேசக்கூடிய எனக்குத் தமிழைக் கற்றுக்கொள்ள இவ்வளவு கஷ்டமா யிருப்பதி லிருந்து, இப்படியே தான் தமிழர்களுக்கும் ஹிந்தி கற்றுக் கொள்வதென்பது மிகவும் சிரமமா யிருக்கு மென்பதை நான் நன்குணர்ந்து கொண்டுவிட்டேன். நீங்கள் எனக்கு அனுமதி யளிப்பதா யிருந்தால், இந்த அம்சம் சம்பந்தப்பட்ட மட்டில், திராவிடக் கழக

கட்சியினரின் கூற்றை நான் அனுதாபத்துடனே ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும். ஆனால், நம் நாட்டின் எல்லாப் பிரதேசங்களி லிருந்தும் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட பிரதிநிதிகள் ஒன்று கூடியமர்ந்த அரசியல் நிர்ணய சபை இந்தி பாஷை யே தேசிய பாஷையாக ஆக்கப்பட வேண்டு மென்று தீர்மானித்துவிட்டபடியால், ஜனநாயக சித்தாந்தப்படி நாம் அந்தத் தீர்மானத்தை முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டு மல்லவா?

உருப்படாத பாஷை

இன்று ஹிந்தியே நம் தேசிய பாஷையாக ஆக்கப்பட்டு விட்டதென்றால், அந்த மொழி மிகவும் வளப்பமானதென்கிற காரணத்தாலோ அல்லது அது மிகவும் சக்திமிக்கதென்னும் காரணத்தாலோ அல்லவே அல்ல. ஹிந்தி என் சொந்தத் தாய்பாஷையாயிருந்து வருங் காரணத்தால், அந்த மொழியில் அப்படிப்பட்ட சிலாகிக்கத் தக்க குண விசேஷங்கள் எதுவுமே கிஞ்சித்து மிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை யென்பதை நான் வெட்கத்துடனே ஒத்துக் கொள்கிறேன். அப்படியானால் அந்த உதவாக்கறை ஹிந்தி ஏன் நம் தேசிய பாஷையாக ஆக்கப்பட்டது? ஏனென்றால், இந்நாட்டிலுள்ள மக்களுள் மிகப் பெரும்பாலோரால் அது பேசப்பட்டு வருகின்றமையாலும், மற்ற வேறு மொழியைப் புரிந்துகொள்கிறவர்களைவிட ஹிந்தியை விளங்கிக் கொள்கிறவர்கள் இந்நாட்டில் மிகுதமாயிருப்பதாலுமே ஹிந்தி தேசிய பாஷையாக ஆக்கப்பட்டு விட்டது. எனவே, அரசியல் நிர்ணயசபை தேசிய பாஷையாக எதை ஆக்கலாமென்று யோசித்த சமயத்தில், ஹிந்தி மீதே அதன் திருஷ்டி விழுந்து விட்டது.

வடநாட்டி லிருப்பவர்கள் ஹிந்தி பேசுவதைவிட எழுதுவதைவிட இச் சென்னையில் ஹிந்தி கற்றுக் கொண்டவர்களே மிகவும் சுத்தமாகவும், இலக்கணப் பிழையின்றியும் ஒழுங்கான முறையில் ஹிந்தியைப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். இந்த வகையில் நான் சென்னை ராஜ்ய மக்களைப் பாராட்டுகிறேன்.

சென்னை கவர்னர்,

மே. த. ஸ்ரீ பிரகாசா

தமிழின் பழைமை

இப்போது நான் இந்த ராஜ்யத்தின் பிரதான மொழியாகிய தமிழைப் பற்றி எனக்குத் தெரிந்ததை உங்களுக்கு அறிவிக்க ஆசைப்படுகிறேன். என்னவென்றால், ஹிந்திப் பேர்வழிகள், "வெண்கலக் குடத்தில் கூழாங்கற்களைப் போட்டுக் குலுக்குவதைப் போல் தமிழ் காணப்படுகிறது" என்று சும்மாவாவது கிண்டல் செய்கிறார்கள். ஆனால், அது சுத்தத் தவறு. ஏனென்றால், தமிழென்பது ஒரு வலுப்பமுள்ள, அழகிய, இனிய மொழியாகும். இந்த இனிய மொழியின் மிகப் பெரிய விசேஷாம்சங்கள் என்னவென்றால், சென்ற இரண்டாயிர வருடங்களுக்கு மேலாக இம் மொழி ஒரே விதமாகப் பேசப்பட்டு வருகிறது. அஃதாவது, சென்ற 2000 வருடங்களுக்கு முன் இத் தமிழ் நாட்டில் உயிர் வாழ்ந்திருந்தவனொருவன் தற்செயலாக உயிர்கொடுக்கப்பெற்று மீட்டும் எழுந்து இங்கே இப்போது நடமாடினானேயானால், நீங்கள் என்ன பேசுகிறீர்களென்பதையும் அவன் நன்றாக விளங்கிக் கொள்ளுவான்; அவன் என்ன பேசுகிறானென்பதையும் நீங்கள் நன்றாய்ப் புரிந்து கொண்டு விடுவீர்கள். இந்த உலகத்திலுள்ள வேறெந்த மொழிக்கும் நீங்கள் இவ்வுபமானத்தைப் பொருத்திக் காட்ட இயலாது. மற்ற மொழிகள் காலம் செல்லச் செல்ல எவ்விதமான மாறுதலைப் பெற்றுக் கொண்டு இருக்கின்றன வென்றால், சென்ற நூறு வருடங்களுக்கு முன் ஒரு நாட்டினர் பேசிய பாஷையை அதே நாட்டில் இப்போது வசிப்பவர்கள் கொஞ்சமும் புரிந்துகொள்ள முடியாதவாறு பெரும் மாறுதலைப் பெற்றுக்கொண் டிருக்கின்றது. இதே உண்மைதான் இங்கிலீஷிலும் ஹிந்தியிலும் நிலவிவருகிறது. ஏனென்றால், சென்ற சில நூற்றுண்டுகட்கு முன்னே வழக்கத்திலிருந்த ஹிந்திக்கும் இங்கிலீஷுக்கும், தற்போது புழக்கத்திலுள்ள அவற்றுக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை.

[எனவேதான், சென்ற ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியத் தமிழ் நூல்களை இன்றும் நம் தமிழ் நாட்டினர் சுலபமாகப் படித்துக் கற்க முடிகிறது. நம் பல்கலைக் கழகங்களிலும்

சங்க இலக்கியம் பாடமாக்கப் பட்டுள்ளது. ஆனல், 2000 ஆண்டு வயது முதிர்ந்த இந்தியையோ இங்கிலீஷையோ இன்று உங்களால் கண்டுபிடிக்க முடியாது. அப்படியே தேடிக் கண்டு பிடித்தீர்க ளாயினும், அவற்றை ஒருவரும் புரிந்துகொள்ள இயலாது. ப-ர்]

ஹிந்தியைக் கட்டாயப் படுத்தாதீர்!

இவ்வளவும் நான் ஏன் கூறுகிறே னென்ருல், நானே இந்தி வல்லுநனு யிருப்பினும், அந்த இந்தியை விரும்பாத எந்த ஒருவனின் தொண்டைக் குள்ளும் வலுக்கட்டாயப் படுத்தி நுழைத்துத் திருத்தக் கூடா தென்பதை வற்புறுத்திக் காட்டவே யன்றி, வேறல்ல. என் ஆசை யெல்லாம் என்ன வென்ருல், எல்லாப் பிரதேச பாஷைகளும் ஒழுங் காக முன்னேறி வளப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ப தாகும். எல்லாப் பிரதேச பாஷை களுமே பீடுகெழு பெருமை மிக்கன, வன்மை யுடையன, அழகு பொருந்தியன. ஒவ்வொரு மனிதனும் தன் தாய் நாட்டின் மீது பாசங் கொண்டதைப் போல், தன் பெற்ற தாய்மீது பாசங் கொண்டதைப் போல், தன் தன் தாய் மொழி மீதும் சொல்லொணு அபிமானங் கொண்டிருக்கிருன். இப்படி யிருக்க, இந்தியைத் தாய்மொழி யாகக் கொண்டவன் மட்டும் தன் கடைப்பிடி சரியென்று வாதிப்பதும், தன் இந்தியையே மற்றெல்லா இந்தியனும் கற்று வல்லுநனுக வேண்டு மென்று அடம் பிடிப்பதும் மிகவும் தவருனதாகும்.

தேசீய ஒற்றுமையைக் கருதி எல்லாரும் இந்தி கற்றுக் கொள்ளத்தான் வேண்டு மென்ற நிலைமை ஏற்பட்டு விட்டபடியால், நாமெல்லாரும் இந்தியை ஒழுங்காகக் கற்றுக் கொள்வோமாக! ஆனல், அதே சமயத்தில், இந்தி கற்றுக் கொள்ள விரும்புவோர் மீது சுமக்கொணுச் சுமையைச் சுமத்தி வைத்து அதைக் கற்றுக் கொடுப்பது கூடா தென்றே நான் கருதுகிறேன்.

எனக்குத் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டு மென்னும் ஆவல் நிரம்ப இருக்கிறது. ஆனல், சென்னையிலே எல்லாரும் எவ்வளவு இங்கிலீஷ் பேசுகிருர்க ளென்ருல், என் மாளிகையான **ராஜ் பவனி** லுள்ள சகல வேலைக் காரர்களுமே என்னிடம் சதா இங்கிலீஷிலேயே பேசுகிருர்கள். எனவே, எனக்குச் சீக்கிரத்தில் தமிழ் கற்றுக் கொள்ளத் தருணம் வாய்க்காமற் போய்விட்டது. இவ்வளவு தூரத்துக்கு இங்கிலீஷைச் சுலபமாகப் பேசக் கற்றுக் கொண்ட தமிழர்கள் அதேவிதமாக எளிதில் இந்தியையும் பேசக் கற்றுக் கொள்வார்க ளென்று எதிர்பார்க்கிறேன்.

எமது புதிய ஏஜெண்ட்கள் :—

I. அஹமது,

1-ம் குறிச்சி, சம்மாந்துரை (சிலோன்).

M. I. M. அபூபக்கர்,

ஜெனரல் மெர்ச்சண்ட், மருதமுனை (சிலோன்).

பிரார்த்தனைகள் (துஆக்கள்)

குர்ஆன் ஷரீபிலுள்ள முக்கியமான 99 துஆக்கள் அரபி மூலத்துடனும், தமிழ் மொழி பெயர்ப்புடனும் அச்சிடப்பட்டு, சட்டைப்பைக்குள் அடங்கத்தக்க விதமாக பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை தமிழில் இந்த மாதிரியான அபூர்வமான பிரார்த்தனை நூல் வெளிவந்ததில்லை. முஸ்லிம்கள் எந்த எந்த மாதிரியில் இறைவனிடம் குறையிரக்க வேண்டு மென்பதை நம் குர்ஆன் ஷரீப் உபதேசித்திருக்கும் நேர்த்தியை இதில் நன்கு கண்டு கொள்ளலாம். இன்னம் சொற்பப் பிரதிகளே எஞ்சியுள்ளன. உடனே முந்துங்கள். விலை அணு 12 தான்.

திருமணமும் பிரிவினையும்

இன்றைய - அதிலும் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் மிகவும் சொற்பமாகத் தெரிந்துகொண் டிருக்கும் விஷயம் விவாகத்தைப் பற்றியதும், தலாக்கைப் பற்றியதுமாகும். அல்லது அவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகத் தமிழ் நூல்களும் இவை சம்பந்தமாக இதுவரை வெளி வரவில்லை. ஆனல், எமது இந்நூலிலே இஸ்லாமிய மார்க்கப்படியுள்ள நிக்காஹும் தலாக்கும் இன்னது இன்னது என்று நன்கு விளக்கப்பட் டிருக்கின்றன. தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு இஃதோர் அபூர்வ வரப்பிரசாதம். தலாக் சம்பந்தமான சகல சட்ட திட்டங்களையும் நிக்காஹ் சம்பந்தமான எல்லா வரை முறைகளையும் இனிய தமிழில் எளிது விளக்கி வைக்கும் இச் சிறந்த நூலின்

விலை 2—8—0 வி. பி. வேறு.

குத்பா பிரசங்கம்

(ஜும்முஆவில் ஓதக்கூடியது)

வெள்ளிக் கிழமை தோறும் நம் பள்ளி வாயில்களில் ஓதப்படும் குத்பாவில் எங்கெங் கெல்லாம் அரபு மேற்கோள் இருக்க வேண்டுமோ அங்கங் கெல்லாம் அரபு மேற்கோள் சேர்க்கப்பட்டும், வேலூர், (மதரஸா) பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் ஸத்ர் முதர்ரிஸ் மௌலானு, மௌலவீ அப்துல் ஜப்பார் (மர்ஹூம்) அவர்களின் "பத்வா" சேர்க்கப்பட்டும், அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப் அவர்களால் செந்தமிழில் தயாரிக்கப்பட்டும் இருக்கிறது. இதில் 57 குத்பாக்கள் அடங்கியிருக்கின்றன. இறுதியில், நபிகள் நாயகம் (சல் அம்) ஆதியில் குபாயில் புரிந்த குத்பா பிரசங்க மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு, நல்ல அழகிய பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. இருவர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. கண்ணைப் பறிக்கும் வனப்பு மிக்கது.

விலை ரூ. 2—12—0 வி. பி. பி. வேறு.

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை-5.

இஸ்லா மார்க்கம் மனிதர்களுக் கிடையே உண்டுபண்ணி யிருக்கும் மகத்தான ஏக சகோதரத்துவத்தைப் போன்று வேறெந்த மதமும் அவ்வளவு சிறப்புமிக்க சகோதரத்துவ ஒற்றுமையை உண்டு பண்ணிய தில்லை. இக் கட்டுரையில் அப்படிப்பட்ட மகத்தான சக்திமிக்க சகோதர வாஞ்சையின் ஆழம் எத்தன்மைத்து என்பது விளக்கிக் காட்டப்பட் டிருக்கிறது.

இஸ்லாத்தின் சகோதரத்துவம்

“இஸ்லாமிக் ரெவியூ”வில் வரையப்பட்டுள்ள ஓர் “ஆராய்ச்சிக் கட்டுரை”

இது பொழுது இஸ்லாமிய சகோதரத்துவம் பாழ்பட்டுக் கிடப்பதன் உண்மைக் காரணம்.

முதன் முதலாக, ஒரொரு முஸ்லிமும், தங்களுக்குள்ளே பகைமைக் குணம் படைப்பது ஒரு பிற்போக்கான உணர்ச்சியே யென்பதை அறிந்து கொள்வது அத்தியாவசியமா யிருக்கிறது; மெய்யாகவே, இத்தகைய விரோதமனப்பான்மை ஐயாமுல் ஜாஹிலிய்யத் என்னப்பட்ட அந்த அறியாமைக் காலத்துக்கு உரியதா யிருக்கிறது. இவ் வெளிய உண்மையை உள்ளபடியே யுணர்ந்து, இவர்கள் நீடித்து நிற்கக்கூடிய மெய்யான ஒற்றுமையின் பக்கல் தங்கள் வதனத்தைத் திருப்பி, எம்முஸ்லிம் உலகினில் இன்னமும் தனிமனிதரிடத்தும் தேசமக்களிடத்தும் வேரூன்றிக் கிடக்கும் மௌட்டியம் பிளவுமனப்பான்மை ஆகியவற்றை ஒழித்துக்கட்டும் வேலையிலே இறங்கித்தீர வேண்டும். இம்முஸ்லிம்கள், நீங்கள் (எல்லீரும்) அல்லா (ஹ்ற) வின் கயிற்றை — ஒற்றுமைத் தளையை — ஒரு சேர இறுகப்பற்றுங்கள்; மேலும், “நீங்கள் பிளவுபட்டுப் போய் விடாதீர்கள்,” என்னும் குர்ஆன் ஆயத்தின் (3 : 102) ஆழிய கருத்தை அதிகம் சிந்தித்துணரக் கடவார்களாக.

இஸ்லாத்தினால் வற்புறுத்திக் கூறப் பெற்றுள்ள இருபெரும் அடிப்படைகளுள், “ஏகேசுவரக் கொள்கை” யென்னப்படும் முதற் படைக்கு அடுத்தாற் போலுள்ள இரண்டாவது அடிப்படை “ஏகசகோதர கோஷ்டி” யென்னப்படும் இஸ்லாமிய விசுவ மகா சகோதர வாஞ்சையா யிருந்துவருகிறது. “மூமினானவர்க ளெல்லாம் (ஏக) சகோதரர்களே,” என்று எந்திருமறை (49 : 10) வெளிப்படையாய்க் கூறியிருக்கிற தன்றோ?

இஸ்லாம் மார்க்கம் ஏக சகோதரத்துவத்தை வற்புறுத்தி யிருப்பதுடனே, இச் சகோதரத்துவத்தை நீடித்து நிறுத்துதற்கு வேண்டிய வழி வகைகளையும் நிலைபெறுத்தியே வைத்திருக்கிறது. (ஜக்)காத் என்னப்பட்ட ஏழைவிகிதமும், அண்டை அயலவருடையன வெல்லாம் எம் முஸ்லிம்கள் சுமுகமாகவும் சினேக மனப்பான்மை யுடனும் ஒற்றுமையாய் வாழவேண்டுமென்பதும் முஸ்லிம்களின் விசுவ மகா சகோதரத்துவத்தை வளர்த்தற்குரிய ஒரு சில உபாயங்களா யிருக்கின்றன. இன்னம், பொய், குறளை, கோள், புறங்கூறல், பொய்வதந்தி கட்டிவிடல், அவதூறுகளை அவிழ்த்து விடல், பொறாமை, புழுக்கம், அஸப்பிய வசை மொழி கூறல், ஜாதி யிறுமாப்பு, குலப் பெருமை, கோத்திர உயர்வு தாழ்வு போன்றவற்றை யெல்லாம் இம் மார்க்கம் தடுத்துவைத்து, இஸ்லாமிய விசுவ மகா சகோதரத்துவத்தை அபிவிருத்தி யடையச்செய்து வைத்திருக்கிறது.

இவ்வாறெல்லாம் இஸ்லாம் அடிப்படையிடப்பட்டிருந்தும், ஏன் இதுகாலை இக் குவலயத்திலுள்ள முஸ்லிம் நாடுகளனைத்தும் அரசியற் றுறையிலே ஒற்றுமையிழந்து வேற்றுமைப் பட்டுக் குலைந்துகிடக்கின்றன வென நீங்கள் வினவத் துணியலாம். இதற்குரிய மூல காரணம் ஒன்றேயென்றே எனக்குப் புலப்படா நின்றது; அஃதாவது இது பொழுது இம் முஸ்லிம் நாடுகளனைத்தும் இஸ்லாமிய போதனையின் படியே நடந்துவரவில்லை யென்பதுதானாகும். இவைகளெல்லாம் மேனாட்டு "ஜாதீயம்"—Nationalism — என்னும் குறுகிய தத்துவத்தைக் கடைப்பிடித்து, அவரவர் நாடே அவரவருக்கும் பிரதானம் என்னும் தவறான 'தேசாபிமானத்'தைப் பின்பற்றத் தலைப்பட்டு விட்டன. "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்னும் இஸ்லாமிய மஹா வாக்கியத்தை அந்த அந்த முஸ்லிம் நாடும் நம்பாத விதமாய் நாட்டுப் பற்றுடனே தொழில் புரியத் துவக்கிவிட்டன.

முஸ்லிம்களுக்குள்ளே பிளவென்பது ஒரு சிறிதும் இருப்பது கூடாதென்றும், ஒரு வீட்டின் கல்லுகளெல்லாம் ஒன்றுடனொன்று தொந்தித்து நின்றே அவ் வீட்டை வலிமையுறச் செய்வதே போல் எம் முஸ்லிம்களும் ஒருவருடனொருவர் தொந்தித்து நின்றே இம் முஸ்லிம்களின் கட்டுக்கோப்பை வன்மையுறச் செய்ய வேண்டு மென்றும் நபிகள் பெருமானார் (சல் அம்) நவின்றருளிச் சென்றிருந்தும், குலபாயெ ராஷிதீன் காலமுதற் கொண்டே தீனுல் இஸ்லாத்தில் பகைமைப் பண்பும் குரோதக் குணமும் மல்கிவந் திருப்பது அனைவர்க்கும் நன்கு தெரியும். சென்ற 1300 ஆண்டுகளாகவே ஷீஆ-ஸுன்னீ மனஸ்தாபம் தொடர்ந்து வருகிறது: கிலாபத் தென்பதே இல்லாது ஒழிந்து போய்விட்ட இற்றை நாளிலுங்கூட அந்த ஷீஆ—ஸுன்னீத் தகராறு ஒழிந்தபாடில்லை. இந்த 20-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் மேனாடுகளெல்லாம், தங்கள் "அவரவர் நாடே அவரவருக்குப் பிரதானம்" என்னும் குறுகிய 'ஜாதீயம்' (Nationalism) என்பது உலக ஒற்றுமையையும் சமாதானத்தையும் குலைத்து வருகிற தென்பதை உணர்ந்து கொள்ளத் துவக்கிவிட்டன. ஆயின், இப்பொழுதுதான் அதிதீவிரமாக நம் முஸ்லிம் நாடுகளனைத்தும் அந்த "ஜாதீயம்" என்னும் குறுகிய தேசாபிமானத்தில் பெரிதும் ஈடுபட்டிறங்கிவிட் டிருக்கின்றன. இதனால் இவர்களுக் குள்ளே ஒற்றுமைக்கு மாறாக வேற்றுமையே மிகவாய்ப் பெருகிப் பரஸ்பரப் பகைமையே பெருக்கெடுத்து வருகின்றது.

இப் பூவுலகில் வதியும் ஐம்பது கோடி முஸ்லிம்களும் ஒரே அல்லா(ஹ்)வையே, ஒரே ரஸூலையே, ஒரே குர்ஆனையே, ஒரே கிப்லாவையே ஏற்றுக் கொண்டுள்ளார்கள்; முக்கிய மூலக்கோட் பாட்டிலே அனைவரும் ஒத்தே நிற்கின்றனர். ஒரு சில சில்லறை விஷயங்களில் அபிப்பிராயபேதம் அங்கங்கே இருக்கலாம்; இவ்வற்ப அபிப்பிராய பேதங்கள் இஸ்லாத்தின் ஒற்றுமையைக் குலைக்கத் தேவையில்லை; குலைக்க விடப்படக் கூடாது. உண்மை இவ்வா றிருக்க, இக் குவலயத்திலுள்ள முஸ்லிம் நாடுகளெல்லாம் ஏன் முன்கூறிய, "மூமினவர்களெல்லாம் ஏகசகோதரர்களே" என்னும் அல்லா(ஹ்)வின் அறிவுறுத்தலைப் பொருட் படுத்துவது கிடையாது?

இத் தரணியில் இறைவனது ஏகத்துவத்திலும், எம் பெருமானது ஏக சகோதர ஒற்றுமைக் குரிய இனிய உபதேசத்திலும் மெய்யான உறுதிபூண்டுள்ள எந்த ஓர் மூமினும், இஸ்லாத்தின் ஒற்றுமை இக்குவலயத்திலுள்ள எத்தகைய ஜாதீயத்தையும் பந்துத்துவத்தையும் விட மிக மிக மேலான சிரேஷ்டம் வாய்ந்த தென்பதைச் செவ்வனே அறிந்துணர்வாரென்பதில் சிறிதும் சந்தேகம் இல்லையே யில்லை யென்னலாம். இதன் சார்பாய்க் கூறுமிடத்து, நபி பெருமானது அழகிய திரு வுபதேச மொன்றை "புகாரீ"யிலிருந்து ஈண்டெடுத்து எழுதாதிருக்க இயலவில்லை: "ஒரு மனிதன்

தனக்கு எது வேண்டுமென விழைகிருனே அதுபோன்றதே தன் சகோதரனுக்கும் இருக்கவேண்டுமென எதுவரை விழைய வில்லையோ, அதுவரை அம்மனிதன் உண்மையான மூமினுயிருப்பது முடியாது.''

இஸ்லாத்தின் ஏக சகோதரத்துவத்தைப் பலப்படுத்தப் பாக்கிஸ்தான் மேற்கொண்டுள்ள மேதாவித்தனம்.

இப் பூவுலகினில் இஸ்லாத்தின் பெருமையனைத்தும் ஏக சகோதர ஒற்றுமையின்மீதேதான் சார்ந்து நிற்கிறதென்பது வெள்ளிடை விலங்கலேயாம். இவ்வொற்றுமை யின்றேல், இஸ்லாத்தின் இல்லம் (தாருல் இஸ்லாம்) அளறடித்த கட்டுக்கோப்பு இடிந்து விழுவதே போல் தகர்ந்து உதிர்ந்து விடுமென்பது ஒரு தலையே யாம். "ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்குந் தாழ்வே'' என்ருன் ஒரு தேசியக் கவி. இந்தத் தாழ்வு இவ்வுலக வாழ்வுக்கு மட்டுந்தான் என்று எண்ணற்க; இனி வரப்போகும் அவ்வுலக வாழ்விலும் நமக்கு இழிவே வந்து சம்பவிக்கும்; இது சரதம். ஒரு காலத்தில் இக் குவலயத்தில் ஜயகோஷத்துடனே ஓங்கி யுயர்ந்து விளங்கிய முஸ்லிம் நாடுகள் பல பிற்காலத்தில் ஒற்றுமை குலைந்து, படு வீழ்ச்சியுற்று, அன்னிய ராதிக்கத்தின் கீழே அடிமைகளாயொடுங்கி, அநேக நூற்ருண்டுகள் வரை அவதியுற லாயின. இவ்வாறு வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியடைந்து கிடந்த நாடுகளுள் ஒரு சில தத்தம் விடாமுயற்சியால் — தமக்குரிய பற்பல உயர்தர ஆண் பெண் தலைவர்களையும் மேன்மக்களையும் பலிகொடுத்துங்கூட — இழந்துவிட்டிருந்த சுயேச்சையையும் சுதந்தரத்தையும் ஒருவாறு மீட்டுப் பெற்றுவருகின்றன. இன்றும் சிற்சில முஸ்லிம் நாடுகள் தத்தம் இழந்த சுயேச்சையைப் பெற, அன்னிய ராதிக்கத்தினின்று விடுதலையடைய அரும்பாடு பட்டு வருகின்றன. இவ் விடுதலைப் போராட்டத்தில் ஒரு முஸ்லிம் நாட்டுக்கு இனியொரு முஸ்லிம் நாடு உதவிபுரிவது கிடையாது. ஏன் எனின், அவரவர் நாடே அவரவருக்குப் பிரதானம் என்கின்றனர். — (Narrowminded Nationalism).

முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரியக் கட்டுப்பட்டிருப்பதேபோல், முஸ்லிம் நாடுகளும் ஆபத்துக் காலங்களில் ஒன்றுக்கொன்று உதவி செய்யக் கட்டுப்பட்டுள்ளன. என்னெனின், இது பொழுது விடுதலை பெற்று விளங்கும் நாடுகள், தங்கள் விடுதலைக்காக இன்னம் மன்ருடி நிற்கும் ஏனை முஸ்லிம் நாடுகளை நோக்குங்கால், தாங்கள் அவ் விடுதலைக்காகப் பட்டபாட்டையும் எடுத்துவந்த ஏற்பாடுகளையும் நினைத்துப் பார்க்கட்டும். இப் பாருலகிலுள்ள முஸ்லிம் (சுயேச்சை பெற்றுள்ள) நாடுகளுள் இரண்டொன்றே சகோதர முஸ்லிம் நாடுகட்கு உதவி புரிய முன்வந்துள்ளன வென்னலாம்.

இஸ்லாமிய ஏகசகோதர ஒற்றுமை விஷயத்தில் பாக்கிஸ்தான் காட்டிவரும் சிநேக மனப்பான்மை மிகவும் பாராட்டப் படவேண்டுவதா யிருக்கிறது. பொருளாதார விஷயத்தில் சகல முஸ்லிம் நாடுகளும் ஒன்றுகூடித் திட்டம் வகுக்க வேண்டுமெனப் பாக்கிஸ்தான் எடுத்த முயற்சியின் பயனுய் முதலில் கராச்சியிலும், அடுத்த ஆண்டில் தெஹ்ரானிலும் மகா நாடுகள் கூடியிருக்கின்றன. இவ்வாறு மகாநாடு கூட முக்கிய ஏற்பாட்டை எடுத்துக் கொண்ட, பாக்கிஸ்தான் நிதி மந்திரி மதியூகி, மேன்மை தங்கிய குலாம் முஹம்மதின் மேதாவித் தனத்தை முஸ்லிம் உலகு முழுதும் பெருமை யுடனே போற்றிப் புகழக் கட்டுப்பட்டிருக்கிறது. இனிவரும் எதிர்காலத்திலும் இந்த குலாம் முஹம்மதின் நன்முயற்சி போதிய நற்பயனையே அளித்திடக் கடவது.

"நீங்கள் (எல்லீரும்) அல்லா(ஹ்)வின் கயிற்றை ஒருசேர இறுகப்பற்றுங்கள்'' என்னும் ஆயத் அருளப்பட்ட விருத்தாந்தம்.

இன்னம், "உலக முஸ்லிம் மகாநாடு'' இதுவும் பாக்கிஸ்தான் தலைமையால் நிருமிக்கப் பெற்ற ஓரியக்கமாகும்— தனது 2-ஆவது கூட்டத்தைக் கராச்சியிலே 1951 பிப்ரவரியில் கூட்டிற்று; இதனுலும் எல்லா முஸ்லிம் நாடுகளுக்

கிடையே மிக்க ஒற்றுமையும் மேன்மையும் விளைந்திடுதல் கூடும். எனவே, இது காலை, "நீங்கள் (எல்லீரும்) அல்லா(ஹ்)வின் கயிற்றை ஒருசேர இருகப் பற்றுங்கள்," என்னும் ஆயத் (3 : 102) இக் குவலயத்தில் தனக்குரிய தொழிலைச் செய்யத் துவக்கி யிருப்பது கண்டு, நாம் பெரிதும் மகிழ்ச்சியடைய வேண்டியவர்களா யிருக்கிறோம்.

அல்லா(ஹ்)வின் மீக் கூறிய கட்டளையின் (3 : 102) பெருமையைச் செவ்வனம் உணருவான் வேண்டி, அவ்வாயத் ஏன் எப்பொழுது நபி பெருமானுக்கு வெளியாக்கப்பட்ட தென்னும் சரித்திரத்தை இங்குச்சிறிது நினைப்பூட்ட வேண்டுவதா யிருக்கிறது: நபிகள் திலகம் (சல்) மதீனவுக்கு விஜயம் செய்யு முன்னே அந்த யதுரிபிலே அவ்ஸ் கஸ்ரஜ் என்னும் இருபெரு வர்க்கத்தினர் தம்முள்ளே மாபெரும் பகைமை கொண்டுள்ள ஜன்மசத்துருக்களாய் விளங்கி வந்தார்கள். இவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பின்னால், தங்களுக்குள் ளிருந்த பழைய பகைமையனைத்தையும் அடியுடன் மறந்து, உடன் பிறந்த சகோதரர்களே போல் ஒற்றுமைப்பட்டு, "அன்சார்" — 'உதவியாளர்' களாகமாறி, மக்காவிலிருந்து மதீனவுக்கு ஹிஜ்ரத் சென்ற "முஹாஜிரீன்" களுக்கு மெத்தவும் நல்லுதவிபுரிந்து வரத் துவக்கிக் கொண்டார்கள். இவ்வளவுடன் நில்லாது, அன்சார்களும் முஹாஜிரீன்களும் ஜதை ஜதையாகப் பிணைக்கப்பட்டுச் சகஉதரர் களாய்ச் செய்யப்பட்டு விட்டார்கள். எனவே, இஸ்லாமிய சூரியன் எழுந்து வரத்தான் தாமதம்; எல்லா அரபிகளின் பிளவுகளும் பிணக்குக்களும் காலை மூடுபனியே போல் விலகிச் சமரசப்பட்டுச் சமனமாய்விட்டன.

இஸ்லாத்துக்கு முன்னே துண்டு துண்டாய்ச் சிதறிப் போய்க் கிடந்த அந்த அரபிகளனைவரும் ஒரே விச்வமகா சகோதரத்துவத்துள் வந்து அமர்ந்துவிட்டதைக் கண்டு அநேக மக்கள் அசூயை கொண்டு விட்டார்கள். ஒருநாள் ஷஸ் பின் கைஸ் என்னும் ஒரு கிழ எஹூதி, அவ்ஸ் வாலிபர்களும் கஸ்ரஜ் வாலிபர்களும் அதிக அன்னியோன்னியமாய்ச் சல்லாபஞ் செய்து கொண்டிருந்ததைக் கண்ணுற்று, உள்ளம் வெதும்பினன்; அவ்வாறு அவ்விரு கிளையார்களும் அளவளாவி அதிக ஐக்கியத்துடன் வாழ்வது மதீனவிருந்த தன் யூத இனத்தவருக்கு ஆபத்தென்பதை அறிந்து, அவர்களுக் கிடையே வேற்றுமை வித்தை விதைக்கத் துணிந்தெழுந்தான்.

அக்கிழவன் தன்னின யூதவாலிபன் ஒருவனை விளித்து, அவனை அவ்ஸ் கஸ்ரஜ் வாலிபர்களுடனே நேயமாய்க் கலந்துறவாடி, அவ்விரு கிளைஞரும் அதற்கு முன்னே சண்டையிட்டுக் கொண்டு கிடந்த பியாஸ் போரைப் பற்றியும் வேறு சில போர்களைப் பற்றியும் அவ் விளவல்களுக்கு நினைப்பூட்டி, நாரதக் கலகத்தை மூட்டி, அவ்விரு கிளைப்புலவர்களும் எதிரிகளை நிந்தித்துப் பாடியிருந்த பாடல்களிலிருந்து ஒரு சில ரோஷமான பாடல்களைப் பாடிச் சண்டையைக் கிளப்பிவிடச் சொல்லி யனுப்பினன். அவ்வாறே அவ்விளயூதன் சென்று, அம் முஸ்லிம் இளவல்களுக்கிடையே வெற்றியுடன் பகைமையை மூட்டி விட்டான்; ஆகவே, அவ்ஸ் கஸ்ரஜ் வாலிபர்கள் வீண் வாக்குவாதத்தி லிறங்கி, சொற்போர் புரியத் தலைப்பட்டு விட்டார்கள். இறுதியிலே ஒரு கஸ்ரஜ் கிளை வாலிபன் இரைந்து, "இன்றும் நீங்கள் போர் புரிவதாயிருப்பின், நாங்கள் அவ்வறைகூவலை ஏற்றுச் சண்டை செய்யச் சித்தமாயிருக்கிறோம்," என்று கத்திக் கர்ஜித்தான்; அதுகேட்டு அவ்ஸ் வாலிபர்கள் "சரிதான் நாளையே நம் மிரு கிளையாரும் மதீன நகருக்கு வெளியே சென்றுபோர் புரியக்கடவோம். உங்கள் அறைகூவல் அங்கீகரிக்கப்பட்டு விட்டது," என்று எதிர்த்துப் புஜந்தட்டினர்கள்.

நபிகட்டிலகம் தங்கள் சிஷ்யகோடிகட்கு நல்லுபதேசம் புரிதல்.

அவ் விரு கோத்திரத்து மக்களும் அடுத்த நாள் மதீனவுக்கு வெளியே தத்தம் இனப் படைகளைக் கொண்டு

சென்று அணிவகுத்து நிறுத்தினர்கள். இச் செய்தி அந்நகர் முழுதும் ஒரு நிகரற்ற பரபரப்பை உண்டுபண்ணி விட்டது. அக்கணமே நபி பெருமான் (சல்) ஆங்குச் சென்று, அவ் விருதிறத் தாரையும் நோக்கிப் பின் வருமாறு பிரசங்கம் புரியத் துவக்கினர்கள்:

"ஏ முஸ்லிம் கோஷ்டியினர்காள்! அல்லா (ஹ்) வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள்; அல்லா (ஹ்) வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள்! இன்னம் நான் நுங்கள் மத்தியிலிருக்கும்பொழுதே நீங்கள் என்ன காரியம் செய்யத் துணிந்துவிட்டீர்கள்? இஸ்லாமென்னும் ஜோதியைக் கொண்டு ஆண்டவன் உங்களைக் கண்ணியப்படுத்தியிருக்கையிலே, இஸ்லாத்தின் உதவி கொண்டு நீங்கள் நேர்வழியைக் கண்டு கொண் டிருக்கையிலே, அறியாமையையும் அராஜகக் கொள்கையையும் விட்டு இஸ்லாம் வந்து உங்களை ஈடேற்றியிருக்கையிலே, நீங்கள் இஸ்லாத்தின் துணைக் கொண்டு நுங்களுக்குள்ளே ஒற்றுமையையும் நட்பையும் பெற்றுக்கொண்டிருக்கையிலே நீங்கள் என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டீர்கள்? இது பொழுது நீங்கள் நுங்கள் பழைய வழிக்கே திரும்பிச்சென்று, அறியாமைக்காலமெனப்படும் ஐயாமுல் ஜாஹிலிய்யத் துக்கா மீண்டு செல்லப்போகிறீர்கள்?"

அவ்விரு கோத்திரத்தாரும் தத்தம் வாட்படைகளை உருவு முன்னே நபி பெருமானர்(சல்)அங்குச் சென்று, மேற்கூறிய நல்லுபதேசத்தைப் புரியலாயினர்கள். இதன் மின்சாரப் பயனாய் அவ் விருகிளையார்களும் நீர்மல்கிய நேத்திரங்களுடனே, பச்சாத்தாபப்பட்டு, ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்து தழுவி, மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள்.

அப்பாலேதான் கீழ்க்காணும் ஆயாத்கள் நபிகட் டிலகத்துக்கு அருளப்படலாயின: "ஏ ஈமான் கொண்டவர்காள்! எவர்களுக்கு வேதம் வெளியாக்கப் பட்டதோ அவர்களுள் ஒரு சாராருக்கு நீங்கள் வழிபட்டு நடப்பீர்களேல், அவர்கள் உங்கள் ஈமானுக்கு (உறுதிக்கு) இப்பாலே மீட்டும் உங்களை (ஈமான் மாறிய) காபிர்களாய்ச் செய்து விடுவார்கள். (ஆனல்) உங்களுக்கே அல்லா(ஹ்) வின் ஆயாத்கள் ஓதிக் காண்பிக்கப் படுங்கால், இன்னம், உங்கள் மத்தியிலே அவனுடைய திருத்தூதர் இருந்துவருங்கால், நீங்கள் எவ்வாறு (ஈமான் மாறிக்) காபிராய்ப் போய்விடக் கூடும்? மேலும், எவனொருவன் இறைவனை இறுகப் பற்றுகிறானே, அவனே மெய்யாக நேர்வழியில் நடாத்தப் படுகிறான். ஏ ஈமான் கொண்டவர்காள்! அல்லா (ஹ்) வுக்கு, அவனுக்குத் தகுதியாய் அச்சத்துடனே, பயந்து கொள்ளக்கடவீர்கள்; மேலும், நீங்கள் (அவனுக்கு) அடிமுடி சாய்ப்பவர்களா யிருந்தாலொழிய இறந்து போகாதீர்கள்.

"நீங்கள் (எல்லீரும்) அல்லா(ஹ்)வின் கயிற்றை — ஒற்றுமைத் தளையை — ஒருசேர இறுகப் பற்றுங்கள்; மேலும், நீங்கள் பிளவுபட்டுப் போய்விடாதீர்கள். இன்னம் நீங்கள் பகைவர்களா யிருந்தக்கால், ஆண்டவன் உங்கள்மீது சொரிந்த அருட் கொடையை நினைவுகூரக் கடவீர்கள்; பின்னர், அன்னவன் உங்கள் உள்ளங்களுக் கிடையே நட்புரிமையை உண்டுபண்ணி வைத்தான்; ஆதலால், (அடுத்தபடியில்) அவனது அருளைக் கொண்டு நீங்கள் சோதரர்களாய் விட்டீர்கள்; மேலும், நீங்கள் நெருப்புக் கிடங்கின் விளிம்பிலே யிருந்தீர்கள்; ஆகவே, அவன் உங்களை அதினின்று விடுவித்து வைத்தான். நீங்கள் நேர்வழி பெறுவான்வேண்டி; இவ்வாறாகவே அல்லா (ஹ்) உங்களுக்குத் தன் அத்தாக்ஷிகளை விளக்கிக் காண்பிக்கிறான்"—(குர். 3 : 99—102).

நபிபெருமான் நல்லுரைகளே நேர்வழி காட்டும்

மீக்கூறிய ஆயாத்கள் அருளப்பட்ட சூழ்நிலை எத்தகைத் தென்பதை ஊன்றிக் கவனிப்போமாயின், நாம் நம்முடைய இக்காலப் பிரச்சினங்களைத் தீர்த்துக் கொள்ளுதற்குப் போதிய வழி வகைகளைச் செவ்வனம் தெரிந்து தெளிவுறலாம். முதன் முதலாக, ஒவ்வொரு முஸ்லிமும், தங்களுக்குள்ளே பகைமைக்

குணம் படைப்பது ஒரு பிற்போக்கான உணர்ச்சியே யென்பதை அறிந்து கொள்வது அத்தியாவசியமா யிருக்கிறது; மெய்யாகவே, இத்தகைய விரோத மனப்பான்மை ஐயாமுல் ஜாஹிலிய்யத் என்னப்பட்ட அந்த அறியாமைக் காலத்துக்கு உரியதா யிருக்கிறது. இவ் வெளிய உண்மையை உள்ளபடியே யுணர்ந்து, இவர்கள் நீடித்து நிற்கக்கூடிய மெய்யான ஒற்றுமையின் பக்கல் தங்கள் வதனத்தைத் திருப்பி, எம் முஸ்லிம் உலகினில் இன்னமும் தனி மனிதரிடத்தும் தேசமக்க ளிடத்தும் வேரூன்றிக் கிடக்கும் மௌட்டியம் பிளவுமனப்பான்மை ஆகிய வற்றை ஒழித்துக்கட்டும் வேலையிலே இறங்கித் தீரவேண்டும். இம் முஸ்லிம்கள், மேற்கூறிய ஆயாத்தில் காணக் கிடக்கும், "நீங்கள் (எல்லீரும்) அல்லா(ஹ்)வின் கயிற்றை — ஒற்றுமைத்தளையை — ஒருசேர இறுகப் பற்றுங்கள்; மேலும், நீங்கள் பிளவுபட்டுப் போய்விடாதீர்கள்," என்னும் பகுதியின் ஆழிய கருத்தை அதிகம் சிந்தித் துணரக் கடவார்களாக.

இன்னம், இம் முஸ்லிம்கள் ஒற்றுமையாயிருப்பதன் சிறப்பு இத்தகைத்து என்பதைத் தங்களுக்குள்ளே சிந்தித் துணரட்டும்; இன்னம், "நீங்கள் நேர்வழி பெறுவான் வேண்டி, இவ்வாறாகவே அல்லா(ஹ்) உங்களுக்குத் தன் அத்தாக்ஷிகளை விளக்கிக் காண்பிக்கிறான்," என்பதன் உட்பொருள் என்ன வென்பதை ஓர்ந்துணரட்டும். கீழ்க்காணும் ஹதீதொன்று, நபிகளுதர் (சல்) ஒற்றுமை யென்பதில் எத்துணைப் பெரிய நன் மதிப்பை வைத்திருந்தார்கள் என்னும் உண்மையை வெளியாக்குவதைக் கண்டு தெளிக: "அல்லா(ஹ்) அறியாமையில் என் சீடர்களை ஒற்றுமைப் படுத்தி வைப்பது கிடையாது; அல்லா(ஹ்)வின் (கருணைக்) கரம் என் மக்கள் மீது இருக்கிறது. எவனொருவன் வேற்றுமையை யுண்டுபண்ணுகிறானோ, அவனே அதற்கு ஜவாப்தாரி. அவனது மார்க்கம் நரகுக்கே கொண்டு விடுகிறது. கூட்டமாய்ச் சேர்ந்திருப்பது கருணையா யிருக்கிறது; வேற்றுமையும் பிளவும் (நரக) வேதனையா யிருக்கின்றன."

விலை குறைக்கப்பட் டிருக்கிறது !

ஆப்டோன் படங்கள் அதிகம் சேர்க்கப் பட்டுள்ளன !!

மணவாழ்க்கையின் மர்மங்கள்

(புத்தப்புதிய ஐந்தாம் பதிப்பு)

கல்யாணமாகியும் பிரமசாரியா? விவாகமாகியும் விவரம் தெரியாதா? கண்மூடித் தனமான வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? இதுவரை தமிழில் எவரும் வெளியிடாத உன்னத உண்மைகள் நிரம்பிய எமது நூலை வாங்கிப் படித்துத் தெளிய இன்னம் தயக்கமேன்? கர்ப்பத்தடை, சிற்றின்பத்தில் பேரின்ப வாழ்க்கை, தகாத முறைகளைத் தவிர்க்கும் உபதேசம், தக்க முறைகளைப் பயில்விக்கும் உன்னத விவரங்கள், நுட்ப சாஸ்திரத்தை விளக்கமாக்கிக் காட்டும் விஞ்ஞான ரீதியான விளக்கங்கள் முதலிய யாவையும் ஒருங்கு திரட்டப்பட்ட இந்நூல் யாவர்க்கும் எளிதில் கிட்டும்படி பதிப்பிக்கப்பட்டுள்ளது. 344 பக்கங்கள் கொண்ட 8 நவீன ஆப்டோன் படங்களும், பலவித அபூர்வப் படங்களும் நிறைந்த இப்புதிய பதிப்பின் விலை ரூ. 4-8-0. தபாற் செலவு 0-10-0.

ஷாஜஹான் புக் டெப்போ,

460, ஹைரோட் :: சென்னை—5

வாழ்க, மஹல்ல தீவுக் குடியரசு!

இலங்கைத் தீவினின்று சுமார் 400 மைல் தூரத்தில், தென் மேற்குத் திக்கில், ஹிந்து மஹா சமுத்திரத்தில் சிறு சிறு பவழத் தீவுகளால் தொடுக்கப்பட்ட, 115 சதுர மைல் விஸ்தீரணமுள்ள மஹல்ல தீவு சென்ற ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து, பரிபூரண சுதந்திரம் பெற்ற தனிக் குடியரசு நாடாக விடுதலை பெற்று விட்டது. சென்ற 836 ஆண்டுகளாக அங்கே நிலவி வந்த தலைமுறைப் பாத்தியதையான ஸல்தனத் முடியாட்சி முறை சென்ற 1952 டிஸம்பர் 31-ஆம் தேதியுடன் ஒழிந்து போய்விட்டது. கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் ஆரம்ப முதல் அத்தீவிலே முடியாட்சி முறையே நிலவி வந்த தெனினும், கி. பி. 1518-ஆம் ஆண்டிலே அத்தீவுக்கு வந்து சேர்ந்த போர்ச்சுகீஸியர்கள் அங்கே முதன் முதலாக ஆலைகளை நிருமிக்கத் தொடங்கினார்கள். ஐரோப்பா கண்டத்திலிருந்து கீழ்நாடுகளுக்கு வருவதற்குரிய குறுக்குப் பாதையான மத்திய தரைக் கடல்-சூயெஸ் கால்வாய் மார்க்கம் ஏற்படுகிற வரையில் ஐரோப்பியர்கள் ஆபிரிக்கா கண்டத்தின் தெற்கு முனைவரை நேரே சென்று, ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு மீண்டும் வடக்கு நோக்கித் தங்கள் பாய்மரக் கப்பல்களை ஓட்டி வந்தார்க ளென்னும் சரித்திர உண்மையை நீங்கள் நன்கறிந்தே இருக்கிறீர்கள். அவ்வாறு அந்த ஐரோப்பியர்கள் ஆபிரிகா கண்டத்தின் தென்கோடியி லிருந்து வடக்கு நோக்கி இந்து மஹா சமுத்திரத்தில் சஞ்சரித்து வரும்போது, மஹல்ல தீவிலே தான் முதல் முதலாகக் காலடி வைக்க நேர்ந்தது.

அங்குள்ள வளப்பு மிக்க பூமியும், அடர்ந்த தென்னை மரச் சோலைகளும், ஏனை நிரக்ஷரரேகைப் பூமிக்குரிய சகல வளங்களும் ஐரோப்பியர்களின் நாவில் எச்சில் சுரக்கச் செய்து விட்டமையால், முதன் முதலாக அப்பக்கம் வந்த போர்ச்சுகீஸியர்கள் அப்போது மஹல்லதீவின் சுல்தானு யிருந்தவரை நயவஞ்சகமாக மயக்கி, தங்களுக் கொரு ஸ்திரமான பிடியை உண்டு பண்ணிக் கொண்டார்கள். ஆனால், கீழ் நாடுகளில், போர்ச்சுகீஸியர்களின் செல்வாக்கு அதிக நாள் நீடித்து நிற்கவில்லை யாகையால், அவர்களுடைய ஆதிக்கம் வரவர க்ஷீணித்துக் கொண்டே சென்றது. இறுதியாக இந்து மஹா சமுத்திரத்தில் செல்லும் படவுகளெல்லாம் கடற்கொள்ளைக் கூட்டத்தினரின் அநாகரிகமான பெருங் கொள்ளைகளுக்கு உள்ளாக நேர்ந்தன. மஹல்லதீவின் சுல்தான்கள் பெயரளவில் சுல்தான்களே யன்றிச் செயல் முறையில் உதவாக்கரைப் பேர்வழிகளாகவே இருந்து வந்தார்கள். எனவே, அவர்களுள் ஒரு சுல்தான் எவ்வளவு பலமற்றவராக விளங்கினு ரென்றால், தீவை யொட்டிய நெருங்கிய கடற்கரை யோரங்களில் நடக்கிற பட்டப்பகல் கடற்கொள்ளைகளைக் கூட அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை; எனவே 1645-ஆம் ஆண்டில் சுல்தானுக்குச் சொந்தமான கப்பல்களுங்கூடக் கொள்ளைக் கூட்டத்தினரின் சூறையாடலுக்கு இலக்காகிவிட்டமையால், அவர் வேறு வழியின்றி, அப்போது கீழ்நாடுகளில்—சிறப்பாக இந்தியா, இலங்கை வட்டாரத்தில் மிகவும் பலம்பெற்ற ஆதிக்கமாக விளங்கிவந்த டச்சுக்காரர்களிடம் அபயந் தேடினார்.

டச்சுக்காரர்கள் மஹல்லதீவின் சுல்தானுக்கு அபயமளித்தார்கள். ஆனால், அதற்கொரு நிபந்தனை; என்ன வென்றால், சுல்தான் பெயரளவில் சுல்தானாக இருக்க வேண்டும். மற்ற எல்லாவித மான பொறுப்பும் ஆதிக்கமும் தங்களிடமே ஒப்படைக்கப்படல் வேண்டும் என்று டச்சுக்கார அதிகார வர்க்கம் ஆணவத்தோடு கேட்டது. சுல்தான் தம் ஸல்தனத்தை டச்சுக்காரர்களிடம் அடகு வைத்துவிட்டு, "ஆடுதன் ராஜா" மாதிரி வெறும் சுல்தானாக விளங்கி வந்தார். அன்று முதல் மஹல்லதீவு அன்னிய ராதிக்கத்தின்கீழ் வந்து விட்டது.

மேல்நாட்டவர்கள் கீழ்நாடுகளைச் சுரண்டுவதற்காக வெகுதூரம் சமுத்திரங்களைக் கடந்துவர வேண்டி யிருந்த சந்தர்ப்பத்தில் இவ்விதமாக மஹல்லதீ வென்னும் செழிப்பான பூமி டச்சுக்காரர்களின் பராமரிப்பின் கீழே வந்துவிட்டபடியால், இத்தீவு வழித் தங்கு வோர்க்கு ஊன்றுகோலாகவும், சுரண்டுகிற சாம்ராஜ்ய வெறியர்களுக்கு ஒரு தங்கச் சுரங்க மாகவும் மாறிப்போய்விட்டது.

பிரிட்டிஷார் கைக்குச் சென்ற விவரம்

மஹல்ல தீவுக்கு அப்துல் காதிர் ஜீலானீ அவர்கள் விஜயஞ் செய்ததாகச் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அந்த ஜீலானீயே மஹல்ல தீவில் இஸ்லாத்தைப் பரத்திச் சென்றதாகவும் சிலர் சொல்கின்றனர். இதை மெய்யென்று ஏற்றுக் கொள்வோமானால், அந்த மஹல்ல தீவு முஸ்லிம்கள் தங்களுடைய ஒழுக்கங்களில் தக்கபடி ஒழுகிக் கொள்ளாமையாலேயே பிற்காலத்தில்

இவ்வளவு ஹீனஸ்திதியை அடைய நேரிட்டதென்றுதான் கூறவேண்டும். ஏனென்றால், எல்லாரும் முஸ்லிம்களாயிருந்து கொண்டு, தங்களுக்கென்று ஒரு சுல்தானையும் ஏற்படுத்திக் கொண்டு, மிகவும் வளப்பமிக்க பூபாகத்தை யடையப் பெற்றிருந்த அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள முடியாதபடி போர்ச்சுகீஸியரின் தயவுக்கும், டச்சுக்காரர்களின் தயவுக்கும், அதற்கப்பால் பிரிட்டிஷாரின் தயவுக்கும் அடிவருடிக் கொண்டு நிற்கவேண்டியவர்களாயிருந்தார்களென்றால், அவர்களெல்லாரும் ஷெய்குல் அஃலமாகிய அப்துல் காதிர் ஜீலானீயவர்களின் உபதேசங்களை ஒழுங்காய்க் கடைப்பிடிக்கவில்லையென்று தானே கொள்ள வேண்டும்? இதுகிடக்க.

1645 முதல் 1785 வரை 140 வருட காலம் மஹல்ல தீவு டச்சு ஆதிக்கத்துக்கு இரையாகிக் கிடந்தது. பல சுல்தான்கள் ஒருவரையடுத்தொருவர் பட்டத்துக்கு வந்தார்கள். ஆனால், அவர்களெல்லாரும் ஹாலந்து சர்க்காருக்கு அடிமைப் பட்ட்வர்களாகவே பதவி வகித்து வந்தார்கள். காலஞ் செல்லச் செல்ல 1785-இல் பிரிட்டிஷ்காரர்களின் கீழ்நாட்டு ஆதிக்கம் வலுப் பெற்று விட்டபடியால், பிரிட்டிஷ்-டச்சு உடன்படிக்கையின்படி சிலச்சில பகுதிகளை அவ்விருவரும் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள். அதன்மீது டச்சுக்காரர்கள் கிழக்கிந்திய தீவுகளை வைத்துக் கொண்டு, மஹல்ல தீவின் ஆதிக்கத்தை பிரிட்டிஷ்காரர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். அன்று முதல் மஹல்லதீவு சுல்தான்கள் டச்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று, பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ்க் குற்றேவல் புரியத் தலைப்பட்டார்கள். சென்ற 1952-ஆம் ஆண்டு முடிகிறவரையிலேகூட அந்தத் தீவு பிரிட்டிஷாரின் ஆளுகையின் கீழேயே இருந்து வந்தது.

மஹல்லதீவின் சுல்தான்கள் அடிமைகளாக வாழ வாழ, அத்தீவிலிருந்த முஸ்லிம்களும் மிகவும் பிற்போக்கையே பெற்று வந்தார்கள். கல்வித் துறையிலும், அரசியற் றுறையிலும், சமூகத் துறையிலும் அவர்கள் மிகமிகக் கீழான அந்தஸ்தையே எட்டிவிட்டார்கள். எனவேதான், நம் நாட்டுக்கு மிகச் சமீபத்தில் இத்தீவு இருந்து வந்தும் நம்முள் பலருக்கு இப்படியொரு தீவு இருக்கிறதென்னும் செய்தியே தெரியாமலிருந்தது. அத்தீவிலுள்ள முஸ்லிம் பெண்களோ என்றால்,—ஆண்களின் கதியே அதோகதியென்றால், பெண்களைப் பற்றிக் கூறவா வேண்டும்?—மற்றெந் நாட்டிலுள்ள பெண்களையும்விட மிகவும் கேவலமான அந்தஸ்தையே எட்டி நின்றார்கள். பர்தா முறையென்பது அவர்களைப் பக்கா நரக வாழ்க்கையான கடுங்காவல் தண்டனைக்கே ஆளாக்கி வைத்து விட்டது.

விடுதலை!

இந்த 1953-ஆம் ஆண்டு பிறந்தவுடன் மஹல்ல தீவு மட்டும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தினின்று விடுதலை பெறவில்லை; ஆனால், அங்குள்ள சகல மக்களுமே சகல துறைகளிலும் பரிபூரண விடுதலையைப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். கிழக்கிந்திய தீவுகளாகிய இந்தோனேஷியா எங்ஙனம் பரிபூரண சுதந்திரமடைந்து இப்போது உலக முக்கிய நாடுகளுள் ஒன்றாக உயர்ந்தோங்கி நிற்கிறதோ, அங்ஙனமே இந்த மஹல்ல தீவும் சீக்கிரத்திலே முன்னணிக்கு உயரப் போவதற்கான அறிகுறிகள் தோன்றத் தலைப்பட்டு விட்டன. இத்தீவிலுள்ள முஸ்லிம் பெண்கள் காலக்கிரமத்தில் ஏனை முஸ்லிம் நாட்டு நாரிமணிகளுக்கு வழிகாட்டிகளாகவும் உயர்ந்தோங்கிவிடக் கூடுமென்று தெளிவாய்க் காணக் கிடக்கிறது; ஆண்டவனே அத்தீவு மக்களை நல்ல உச்சத்துக்கு உயர்த்தி வைக்கப் போதுமானவன்.

1785-ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷாரின் பாதுகாவலின் கீழிருந்து வந்த (Protectorate) இந்த மஹல்லதீவு, பிரிட்டிஷார் இலங்கைக் குடியேற்ற நாட்டை ஆண்டு வந்தபோது அவர்களுடைய நேரிடையான கண்காணிப்பின் கீழே இருந்து வந்தது. ஆனால், 1948-இல் இலங்கைக்கு டொமினியன் ஆட்சி ஏற்பட்டு, பிரிட்டிஷ் ஆட்சியின்று அது பிரிந்த பின்னர், மஹல்லதீவு இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைக்கமிஷனரின் கண்காணிப்பிலே இருந்து வந்தது. எனவே, பிரிட்டிஷார் இங்கிலாந்திலிருந்து கொண்டு, இலங்கையிலுள்ள தங்கள் ஹைக் கமிஷனர் மூலம் மஹல்ல தீவை நிர்வகித்து வந்தார்கள். ஆனால், சென்ற 1-1-53 வியாழனன்று அந்த ஹைக்கமிஷனர் பிரிட்டன் சார்பாகக் கையொப்பமிட்டு, மஹல்ல தீவுக்குப் பூரண சுதந்திரம் தந்து விட்டார். பிரிட்டிஷ் காமன் வெல்த்துடன் இத்தீவின் குடியரசாட்சி யாதொருவிதத் தொடர்பையும் இனி வைத்துக் கொள்ளாதெனினும், பிரிட்டனுடன் அது நல்லுறவு பூண்டேயிருந்துவரும். மேலும், சிறு தீவாகிய அதற்குக் கடற்படைப் பலமோ, தரைப் படைப் பலமோ, விமானப் படை பலமோ சிறிதுமின்மையால், பிரிட்டனே அதன் தற்காப்பைக் கவனித்துக் கொள்ளும்; மஹல்ல தீவின் வெளி நாட்டுக் கொள்கைகளையும் பிரிட்டனே அமல் செய்யும்.

முதல் பிரஸிடெண்ட்

இதுவரை மஹல்ல தீவின் அமீராகவும், பிரதம மந்திரியாகவும் விளங்கி வந்த அமீர் அமீன் தீதீ என்பவரே 1953 ஜனவரி முதல் தேதியன்று அப்புதிய குடியரசின் முதல் தலைவராக, ஏக தடபுடலுடன் கூடிய தர்பார் வைபவத்தின் போது உயர்த்தப்பட்டார். இவரே இத்தீவின் முதல் பிரசிடெண்ட் டாவார். இவர் பிரஸிடெண்ட்டாக உயர்ந்ததுடன், சென்ற 836 ஆண்டுகளாக அங்கே வேரூன்றிக் கிடந்த ஸல்தனத் தென்னும் முடியாட்சி முறை ஒழிந்து போய் விட்டது. இனிமேல் மஹல்ல தீவுக்கென்று ஒரு சுல்தான் பதவிக்கு வரமுடியாது; அந்தக் குடியரசு நாட்டில் இனி அப்படிப்பட்ட சுல்தான்களுக்கும் வேலையில்லை.

சென்ற எட்டாண்டுகட்கு முன் மஹல்லதீவை "ஆட்சி செலுத்திய" சுல்தான் 'வாரிஸின்றிக் காலஞ் சென்றதும், 1945-இல் அந்த ஸல்தனத்தின் "ஆட்சி"யை ஏற்று நடத்துவதற்காக, அரச பரம்

பரையைச் சார்ந்த அமீர் அப்துல் மஜீத் என்பவர் சுல்தானாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அவர் பதவி ஏற்கவும் முடியாத அளவுக்குக் கடுமையான நோயால் பீடிக்கப்பட்ட பிணியாளராய் விளங்கிய காரணத்தால், 'சுல்தான்' என்னும் ஸ்தானம் காலியாகவே இருந்துவந்தது. அந்த நோயுற்ற அமீர் அப்துல் மஜீத் காலஞ் சென்றதும், மஹல்லதீவின் சகல மக்களின் நன்மதிப்புக்கும் கௌரவத்துக்கும் ஆளான அமீர் அமீன் தீதீ பொதுத் தேர்தலில் ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரே இப்போது மஹல்ல தீவின் பிரஸிடெண்ட் டாவார்.

குணாதிசயங்கள்

அமீர் அமீன் தீதீ வெறும் பிரஸிடெண்ட்டாக மட்டும் விளங்கவில்லை; ஆனால், சகல மக்களின் அபிமானத்துக் குரியவராகவும். அரசாங்கத்தின் ஐந்து முக்கிய இலாக்காக்களைத் தம்முடைய சொந்தக் கண்காணிப்பின் கீழ் வைத்துக்கொண்டிருப்பவராகவும் திகழ்ந்து வருகிறார். இவருக்கு இப்போது 42 வயதே ஆகிறது. வாலிப தசையிலுள்ள இத்தப் பெரியாரின் திறமையைக் கொண்டே மஹல்லதீவு முன்னுக்கு வரவேண்டியிருக்கிறது. தம்முடைய நாட்டை உச்ச நிலைக்கு உயர்த்தி வைக்க வேண்டிய மகத்தான பொறுப்பைத் தம் தோள்மீது மக்கள் சுமத்திவிட்டபடியால் எப்பாடு பட்டேனும் தம் கடமையைச் செவ்விதாய் ஆற்றி, நாட்டை முன்னுக்குக் கொண்டு வந்துவிட வேண்டு மென்னும் வைராக்கிய சித்தம் கொண்டவர். இவர் வாய்ச் சொல் வீரரல்லர்; ஆனால், எதையும் காரியத்தில் சாதித்து முடிக்கக் கூடிய திண்ணிய உள்ளமும் தீவிர நடவடிக்கையெடுக்கக் கூடிய பராக்கிரம சக்தியும் மிக்கவராவர். அந்த 115 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பிலே தீதியும் அவருடைய குடும்பத்தினரும் வேறெவரும் பெறாத கீர்த்தியையும், புகழையும், சாமர்த்தியத்தையும் பெற்றவர்களாகத் திகழ்ந்து ஜொலிக்கிறார்கள். மக்களுக்கு தீதீகளின்மீது ஒருவிதமான வாத்ஸல்யம் என்னும் மகத்தான வாஞ்சை சதா இருந்தே வருகிறது.

கல்வித் துறையில் மக்களை அபிவிருத்தியடையச் செய்தாலொழிய, தம் நாட்டை முன்னேற்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாதென்பதை இந்தப் பிரஸிடெண்ட் நன்கறிவார். எனவே, இவர் கல்வியை மிகவும் அபரிமிதமான அளவுக்கு அபிவிருத்தி யடையச் செய்வாரென்பதில் ஐயமில்லை. மேலும், அவரே பலமுறை கூறியுள்ளபடி, கல்வியின்மையாலேயே மஹல்லதீவின் மக்கள் மிகவும் கீழான நிலையை யெட்டி யிருக்கிறார்கள். எனவே, பெற்ற சுதந்தரத்தின் பூரண பலனையும் அனுபவிக்க வேண்டு மென்றால், ஒவ்வோர் ஆணும் ஒவ்வொரு பெண்ணும் கல்விகற்றே ஆகவேண்டும் என்று முழங்கி யிருக்கிறார். எனவே, இன்னம் சில மாதங்களுக்குள் இவர் கல்வித் துறையில் பெருஞ் சீர்த்திருத்தத்தை உண்டுபண்ணிவிடுவா ரென்று ஒவ்வொருவரும் எதிர்பார்க்கின்றனர்.

பெண்களுக்கு விமோசனம்

சென்ற மூன்று தலைமுறைகளுக்கு முன்னே கமால் அத்தாதுர்க் துருக்கி தேசத்துக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தபோது அந் நாட்டுப் பெண்மணிகளிடையே எப்படிப்பட்ட சொல்லொணா மாறுதல்கள் மின்னல் வேகத்தில் உண்டு பண்ணப் பட்டுவிட்டன வென்பதை நீங்கள் நன்கறிந் திருக்கிறீர்கள். [சென்ற 1952 டிஸம்பர் மாத "தாருல் இஸ்லாம்" மீலாத் மலரில் வெளிவந் துள்ள 'நவீனத் துருக்கியின் நாரிமணிகள்' என்னும் கட்டுரையைப் படித்துப் பாருங்கள். ப-ர்]. ஆனால், இந்தத் தலைமுறையில் நங் கண்ணுக்கு முன்பாக நடந்த பேரதிசயப் பெரு மாறுதலைப் பாருங்கள்! நம்முடைய சொந்தக் கைச் சரக் கொன்றையும் சேர்க்காமல், செய்தி ஸ்தாபனம் 2-1-1953 பத்திரிகைகளுக்குக் கொடுத்துள்ள வாசகத்தை அப்படியே எடுத்தெழுதுகிறோம். நீங்களே பலமுறை படித்து உண்மையை உணர்ந்து ஆனந்தமடையுங்கள்:—

> "இது (சுதந்தரக் குடியரசு என்னும் இந்தப் பிரகடனம்) 836 ஆண்டுகளாகப் பற்றிக் கிடந்த ஸல்தனத் ஆட்சியிலிருந்து மட்டும் விடுதலையைப் பெற்றுத் தரவில்லை; ஆனால்,முஸ்லிம்களே நிரம்பிக் கிடக்கும் மஹல்ல தீவின் சிறுமிகளைப்'பர்தா' (வென்னும் சிறைவாசத்தி) னின்றும் சம்பூரண விடுதலையைப் பெற்றுத்தந்துவிட்டது. ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் பெண்களைத் தனியே அடைத்துப் போட்டு மறைத்து உயர்ந்தோங்கி நின்ற உயரமான சுவர்களெல்லாம், 42 வயதான பிரஸிடெண்ட் தீதியின் கட்டளைப்பிரகாரம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன. முதன் முதலாக நூதனமாகத் தங்கள் முகமூடிகளைக் கழற்றி வீசி யெறிந்த பெண்கள், வெள்ளை வர்ணம் பூசப்பட்ட தங்கள் பங்களாக்களிலிருந்து வெளியேறி இன்றைத்தின (1-1-53) மங்கலப் பெருவிழாவின் கேளிக்கைகளிலே கலந்து மகிழ்ந்தார்கள். சிறு நங்கையரும் பெண்டிரும் நீண்ட, கண்பகட்டான வர்ணவேலைப் பாடமைந்த ஆடைகளை உடுத்துக்கொண்டு இன்று மாலை இங்கு (மஹல்லதீவின் தலைநகரத்தில்) நடைபெற்ற கால்பந்து விளையாட்டு மைதானத்தின் ஒருபுறத்தில் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். 'ஸிலோன்' என்னும் பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பலைச் சேர்ந்த கடற்படையினர்க்கும் மஹல்லதீவின் காற்பந்து வீரகோஷ்டிக்குமிடையே அந்தப் பந்து விளையாட்டுப் போட்டி நடந்தது. போட்டியில் மஹல்ல தீவுக்காரர்களே தோல்வியுற்று, எதிரியிடம் நான்கு 'கோல்' களைப் பெற்றுக் கொண்ட போதினும், அவர்கள் பக்கா விளையாட்டுக்காரத் தீரத்துடனேயே நடந்து கொண்டார்கள்...பெண்களுக்கு மகத்தான சுதந்திரம் கிட்டப்போகிற தென்பதற் கறிகுறியாகச் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க தாகும். என்ன வென்றால், இலங்கைத் தீவின் கொழும்பிலுள்ள இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் போய்ப் படித்துத் தேர்ச்சி

யடைவதற்காக இரட்டைப் பாய்மரச் சிறு தோணிகளில் வெள்ளைப் பனியன் அணிந்த சிறுமியர்த் தொகுதி யொன்று ஏறிச் சென்ற போது, ஒரு பொதுஜன பகிரங்க வழியனுப்பு உபசாரம் வெகு நேர்த்தியாக நடத்துவிக்கப் பட்டது.''

மஹல்ல தீவிலுள்ள பெண்கள் (அவர்களனைவரும் முஸ்லிம்களே) எத்தன்மைத்தான விடுதலையைப் பெற்றுக்கொண் டிருக்கிறார்க ளென்பதை இதிலிருந்தே நீங்கள் நன்கு யூகித்துக் கொள்ளலாம். அவர்களை இதுவரையில் எல்லா ஆண்களுமாகச் சேர்ந்து உயிருடனே சித்திரவதை புரிந்து வந்தார்கள்; காட்டு மிருகங்களைப் போல் கூட்டுக்குள் பூட்டி வைத்து வளர்த்தார்கள்; மிருகக் காட்சி சாலைகளிலுள்ள கொடிய விலங்குகளுக்கான தனித் தனிக் கூண்டுபோல் கற்சுவர்க் கூண்டுகளைச் செய்து உள்ளேவிட்டு வளர்த்து வந்தார்கள்; கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட கிரிமினல் கைதிகள் பெறும் கொடுமைக்கு நிகரான கடுந்துன்பங்களை இழைத்து வந்தார்கள். இப்போது அந்தக் கூண்டுகளின் கம்பிக ளெல்லாம் பிடுங்கி யெறியப் பட்டு விட்டன; கற்கோட்டைச் சுவர்க ளெல்லாம் தகர்க்கப்பட்டு விட்டன: நாரிமணிகள் வெளியுலகில் வந்து, முட்டைக்குள் ளிருந்து வெளிப்பட்ட குஞ்சே போல் வானத்தின் வெளிச்சத்தையும், பூமியின் வளப்பத்தையும் கண்குளிரக் காண்கிறார்கள். துருக்கி நாட்டைப் போலவும், எகிப்து தேசத்தைப் போலவும், பாக்கிஸ்தானைப் போலவும், இந்தோனேஷியாவைப் போலவும் மஹல்ல தீவின் சகோதரிகளும் எல்லாவிதமான அறிவுத் துறைகளையும் வன்மையாய்ப் பற்றிப் பிடிக்க முற்பட்டுவிட்டார்கள். இஸ்லாத்தின் ஜோதியைக் கவிந்துகொண் டிருந்த மேகத்திரள் இப்போது விலகியோடி விட்டது. முற்சொன்ன பிரஸிடெண்ட் தீதி இந் நாரி திலகங்களின் எதிர்கால நல்வாழ்வுக்கான சுக்கானைப் பற்றிப் பிடித்து, கொந்தளிப்பான கடல்களூடே வெற்றிகரமாய் உய்த்துச் செல்ல முற்பட் டிருக்கிறார். கமால் அத்தா துர்க்கைப் போலவும், காயிதெ அஃலத்தைப் போலவும், ஜெனரல் நஜீபைப் போலவும் இந்த தீதியும் முஸ்லிம் திலகப் பெரியார்களுள் ஒருவராக உயர்ந் தோங்குவதற்கு இறைவன் துணை புரிவானாக! ஆமீன்.

பொது விஷயம்

நாம் முன்னே குறிப்பிட்ட வண்ணம் மஹல்ல தீவு மிகவும் வளமிக்க பிரதேசமாகும். அங்கு விளையும் விளைபொருள்களின் வளம் ஒருபுற மிருக்க, அத்தீவின் கடலில் அகப்படும் மீன் இனங்களும், முத்து பவழங்களும் மஹல்ல தீவை ஒரு செல்வ மிகுந்த நாடாக உயர்த்திவிடப் போதுமானவையாகும். அங்கு அகப்படும் ''குமிழ் மாசி'' என்னும் மச்சத்தின் உருசியை அறியாத சிங்களவர் யாருமிலர். நம் நாட்டின் தென்கோடியில் வாழ்பவர்கள்கூட அதன் உருசியை நன்கறிவார்கள். மஹல்ல தீவில் பிடிபடும் மச்சங்களுள் 95 சதவிகிதம் ஏற்றுமதி செய்யப்படுவதால், அந் நாட்டு அரசாங்கத்துக்கு நிதிப் பஞ்சம் ஏற்படப் போவதில்லை. தென்னையும், கமுகும், வாசனைத் திரவியங்களும், பழங்களும், புஷ்டிதரும் வித்துக்களும் டாலரைக் கூட ஈட்டித் தருகின்றன. எனவே, மஹல்லதீவின் குடியரசு நிதியின்மையாலோ அல்லது பொருள் நெருக்கடியாலோ என்றென்றும் கிஞ்சித்தும் அவதியுற நேரிடாது.

மேலும், மஹல்லதீவு வாசிகள் பெரும்பாலும் கடலிலேயே, கடலோடியே ஜீவனம் செய்கிறவர்களாகையால், அவர்கள் சிறந்த மாலுமிகளாகவும், கப்பலோட்டிகளாகவும், கடல் சாஸ்திர மறிந்த விற்பன்னர்களாகவும் விளங்குகிறார்கள். மேலும், உடல் வளர்ச்சியும், தேகக் கட்டும் மிக்க வீரர்களாகவும் திகழ்கிறார்கள். பக்கத்திலிலுள்ள இலங்கைக்கே மஹல்லதீவின் பெரும்பாலான ஏற்றுமதிப் பொருள்கள் ஏறிச் செல்வதால், இலங்கையின் பொருளாதார சுபிக்ஷத்தையே மஹல்லதீவும் சார்ந்து நிற்கிறது. எனவே, இலங்கையின் வளப்பத்தை அங்கேயும் காணலாம்.

புதிதாகச் சுதந்திரம் பெற்ற இச் சிசுவாகிய குடியரசு மிகவும் மஹோன்னதமாக உயர்ந்து நின்று பெருங் கீர்த்தியை நிலைநாட்டுமாக! ஆமீன்.

—N. B. A.

பினங்கு-மலேயா நண்பர்களுக்கு

தாருல் இஸ்லாம் பத்திரிகையும் ஷாஜஹான் புக் டெப்போவின் நூல்களும் M. R. M. அப்துர் ரஹீம், திருச்சி ரஸூல் ஆகியோர் எழுதிய நூல்களும், இன்னம் பலவித இஸ்லாமிய நூல்களும் எங்களிடம் கிடைக்கும். தேவைக்குக் கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதுங்கள்.

K. S. முஹம்மதுகனி,
நியூஸ் பேப்பர் ஏஜெண்டு
153, கிங்ஸ்டிரீட், பினங்கு.

நீங்கள் அவசியம் படிக்க வேண்டிய
அருமையான நூல்கள்.

உதுமான் (றலி)	...	1	8	0
திருமணமும் பிரிவினையும்	...	2	8	0
ஹஜ்ரத் அலீ (றலி)	...	2	4	0
இ. இணையிலாச் சாந்தி	...	1	8	0
மஹான் முஹம்மது நபி	...	1	12	0
அபூபக்ர் ஸித்தீக் (றலி)	...	2	0	0
இஸ்லாம் (புதிய பதிப்பு)	...	3	0	0
ஈமான் (மூலக் கொள்கை)	...	0	12	0
நாயகத்தின் நற்குணங்கள்	...	1	8	0
இஸ்லாமிய ஞானபோதம்	...	4	0	0
நபிகள் நாயக வாக்கியம்	...	1	8	0
ஜ. பு. அம்மயத் தப்ஸீர்	...	2	8	0

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை-5.

மக்களுக்கு நேர்வழி காட்டி, அவர்களை இம்மையிலும் மறுமையிலும் மேம்பாடடையச் செய்வதற்கு உதவிபுரிந்து, அவர்களை முத்த(க்)கீன்களாக உயர்த்த வென்று தோற்றுவிக்கப் பட்ட குர்ஆன் ஷரீப் படுகிற பாட்டைப் பாருங்கள்!

சுவர்க்கத்திற்குத் திறவுகோல் மா இலையாம்!

['அபின்' வரைவது]

இருபது வயதிருக்கும். கட்டழகனான ஒரு முஸ்லிம் வாலிபன். ஒருநாள் மாலை மக்ரிப் தொழுகையைத் தொழுதுவிட்டுப் பள்ளியிலிருந்து வெளிப்படுகிற பேஷ் இமாம் ஹஜ்ரத்தை அவ்வாலிபன் மஸ்ஜிதின் வெளிவாயிலில் எதிரெதிராகச் சந்திக்கிறான்.

"ஹஜ்ரத்! எனக்கொரு தாயத் எழுதிக் கொடுங்கள்!"

தப்பித் தவறிக்கூடப் பள்ளி வாயில் இருக்கிற பக்கமே தலைநீட்டி யறியாத அவ்வாலிபனைப் பேஷ் இமாம் உற்றுப் பார்க்கிறார்.

"தாயத்தா? எதற்காக அதை எழுதிக் கேட்கிறாய்?" என்று வினவுகிறார்.

"நேற்றிரவு நான் தனியே ஆற்றோரப் பாதை வழியே இருட்டில் வரும்போது பயந்து விட்டேன். நீங்கள் தாயத்துக்காக இஸ்மு எழுதிக் கொடுத்தால் நான் அதை என் கைப்புஜத்தில் கட்டிக்கொள்கிறேன். இனிமேல் அப்படிப் பயப்பட முடியாதபடி அது காப்பாற்றும்."

பேஷ் இமாம் அவனை வெறிக்க வெறிக்கப் பார்க்கிறார். வாலிபன் தொடர்ந்து பேசுகிறான் :—

"குர்ஆன் ஆயத்துக்கு முன்னே ஜின்னும் ஷைத்தானும் ஓடியே போய்விடுமல்லவா? உங்கள் இஸ்மு என்னைக் காப்பாற்றிவிடும். தயவு செய்து எழுதிக் கொடுங்கள்... மூன்று ரூபாய் தங்களுக்கு நான் கொடுக்கிறேன்... இஸ்மு எழுதத் தேவைப்படும் செப்புத் தகடுகூட என் கையோடு கொண்டுவந்திருக்கிறேன்."

இப்படிச் சொல்லிக் கொண்டே பேஷ் இமாம் கைக்குள்ளே மூன்று ரூபாயையும் சுருட்டப்பட்டுள்ள சிறு மெல்லிய செப்புத் தகட்டையும் வாலிபன் திணிக்கிறான். ஹஜ்ரத் ரூபாயைத் தமது ஜுப்பாவின் பைக்குள்ளே சொருகிக் கொண்டு அந்த மெல்லிய தகட்டைப் பிரித்துப் பார்க்கிறார்.

"நடு ராத்திரி வேளையில் நீ ஆற்றங்கரை யோரமாக ஏன் நடமாடுகிறாய்?" என்று ஹஜ்ரத் ஆவலோடு வினவுகிறார்.

வாலிபன் புன்முறுவல் பூக்கிறான். அந்த முறுவலுக்கு என்ன அர்த்த மென்று அவன் மட்டுமே அறிவான்.

இரண்டொரு தினங்களில் செப்புத் தகட்டில் குர்ஆன் ஆயாத்துகள் எழுத்துருவிலும் எண்ணுருவிலும் பதிக்கப்படுகின்றன. அதை வாலிபன் பேஷ் இமாமிடமிருந்து பெற்றுத் தட்டா னொருவனிடம் சென்று, முன்னமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி வெள்ளிக் குப்பித் தாயத்துக் கூட்டுக் குள்ளே அதை வைத்துத் திணிக்கிறான். தட்டான் தாயத்தை உருவாக்கிக் கொடுக்கிறான். வாலிபன் அதைப் பெற்றுச் சென்று, வழுவழுப்பான கறுப்புப் பட்டுக் கயிற்றில் அதைக் கோத்து, தன் வலப் புஜத்தில் கட்டிக் கொள்கிறான்.

பத்து நாட்கள் செல்கின்றன. ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலுள்ள கைதிக் கூண்டில் முற்சொன்ன வாலிபன் சென்னி கவிழ்ந்து நிற்கிறான். வழக்கு விசாரணை தொடங்கி விட்டது. சர்க்கார்த் தரப்பு வக்கீல் வழக்கை விவரிக்கிறார்:— "இந்த வாலிபன் மிகவும் பொல்லாத மூர்க்கன் என்று நான் விளக்கத் தேவையில்லை. சமீபத்தில் விவாகமான ஸ்ரீமதி ...யை இவன் எப்படியாவது பலாத்காரமாகக் கற்பழித்துவிட முயற்சி செய்துகொண்டிருந்தான். பகல் நேரங்களில் இவன் அவளுடைய வீட்டருகே சென்று நிற்பான். அவள் ஆற்றுக்குச் சென்று தண்ணீரெடுக்கப் போகும்போதெல்லாம் பின் தொடர்வான்...என்றைக்காவது ஓரிரவு அவள் ஆற்றுப் பக்கம் வந்தால் அவளைக் கற்பழித்து விடு

வது என்று முடிவு கட்டினான். அதற்காக இவன் பல இரவுகள் அங்கே தனியாய்க் காத்திருந்தான். பிரஸ்தாப தினத்திலே இவன் அங்கே ஒளிந்திருந்த போது, அகஸ்மாத்தாக அவள் வந்தாள். அன்று பகலில் தண்ணீ ரெடுத்துப் போகும்போது கைத் தவறுதலாக ஆற்று மணல்மீது அவள் வைத்துவிட்டு வந்த செம்பைத் தன் மாமியாருக்குத் தெரியாமல் எடுத்துவந்து விடுவதற்காக அவள் இருளிரவின் அந் நேரத்தில் விரைந்து சென்றாள். அவளை இவன் பலாத்காரமாகக் கையைப் பிடித்து இழுத்தான்...”

மாஜிஸ்ட்ரேட் வழக்கை விசாரித்துவிட்டு வாலிபனை ஸெஷன்ஸுக்கு அனுப்புகிறார். புதிய சாட்சிகள் வந்து சேர்கிறார்கள். நாம் முதலில் குறிப்பிட்ட பேஷ் இமாம் ஹஜ்ரததும் சாட்சிக் கூண்டில் ஏறுகிறார். விஷயம் மிகவும் ரசாபாசமாகப் போகிறது. இறுதியாக நீதிபதி வழங்கும் தீர்ப்பில் குறிப்பிடுகிறார்:— “...இக்குற்றவாளி சிறுவனாயிருந்தும் இருளடர்ந்த நாணற் புற்புதர் நிறைந்த ஆற்றங்கரை யோரத்திலே நள்ளிரவு வரை தன்னந் தனியாய்ப் பதுங்கி நின்றது ஆச்சரியப்படத் தக்க விஷயம் என்று வக்கீல் குறிப்பிட்டார். இதில் ஆச்சரியமேதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பிராஸிகூஷன் சாட்சியாக இங்குக் கொணரப்பட்ட பேஷ் இமாம் ஹஜ்ரத் கூறிய சாட்சியத்திலிருந்து, அவரே இக் குற்றவாளி இருளிரவில் ஆற்றங்கரை யோரத்தில் பேய் பிசாசுக்குப் பயப்படாமல் தைரிய சாலியாக நிற்பதற்குத் துணையாகக் குர்ஆன் மந்திரம் எழுதிய தாயத்தைத் தயாரித்துக் கொடுத்து, இவன் செய்ய நாடும் துஷ்கிருத்தியங்களுக்கு ஓரளவு உதவிசெய் திருப்பதாகத் தெரிகிறது. நம் முன்னர்க் கொண்டு வரப்பட்ட சாட்சியங்களிலிருந்து, இக் குற்றவாளி ஓரிரவில் ஆற்றங்கரை யோரச் சுடுகாட்டண்டைப் பயந்துவிட்டா னென்றும், அந்தப் பயம் இருக்கிற வரையில் இவன் மீண்டும் ஆற்றங்கரைப் பக்கம் போகவே இல்லை யென்றும், இந்த ஹஜ்ரத் குர்ஆன் மந்திரத்தைச் செப்புத் தகட்டில் எழுதி இவனுக்குக் கவசமாகக் கொடுத்த பிறகே இவன் அதைத் தன் புஜத்தில் கட்டிக் கொண்டு, பயத்தை நீக்கி, ஆற்றோரம் சென்று பல இரவுகள் தங்கிப் பதுங்கினா னென்றும் விளக்கமாகின்றன... எதிரிக்கு ஐந்து வருடம் கடுங்காவல் விதிக்கிறேன். இவனுக்கு மந்திர கவசம் எழுதிக் கொடுத்த ஹஜ்ரத்துக்கு—இவர் வயது முதிர்ந்த பெரிய மனிதராயிருந்தும், வாலிபர்களை இப்படி மறைமுகமாகக் கெடுக்க வழிகற்பித்த........”

மீதியைக் கேட்பதற்குள் பேஷ் இமாம் ஹஜ்ரத் மூர்ச்சையாகி விடுகிறார். அவரைக் கோர்ட் சேவகர்கள் தூக்கிச் செல்கின்றனர்.

[திரை விழுகிறது.

* * *

இது என் சொந்தக் கற்பனை யன்று. சில ஆண்டுகட்கு முன் என் கண்ணார ஓரூரிற் கண்ட மெய்யான சம்பவமேயாகும் இது. குற்றவாளியையோ, வேறு சம்பந்தப் பட்டவர்களையோ அடையாளம் தெரிந்து கொள்ளா திருப்பதற்காகச் சிலச்சில இடங்களில் கொஞ்சம் மாற்றம் செய்திருக்கிறேன். அவ்வளவுதான். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. முஸ்லிமாய்ப் பிறந்த அவ் வாலிபன், செய்ய வேண்டியவற்றைச் செய்யத் தவறிவிட்டதுடன், பெரும் பாபமென்று ஆண்டவன் வருணிக்கும் பச்சை ஜினாவைச் செய்வதற்காக, அந்தப் பாபத்தை இருளிரவில் ஆற்றங்கரையில் புரிவதற்காக, பேய் பிசாசு தன்னைத் தீண்டா திருப்பதற்காக, ஆண்டவனின் திருவசனங்களைச் செப்புத் தகட்டி லெழுதி, தாயத்தாகச் செய்து கைப் புயத்தில் கட்டிக் கொண்டா னென்றால் இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இருட்டில் வியபிசாரம் செய்யும் போது பயப் படாம லிருக்கவும், அங்கே பேய் பிசாசு அணுகாமல் தடுக்கவுமே குர்ஆனின் ஆயத்கள் இந்த உலகத்துக்கு இறைவனால் அருளப்பட் டிருப்பதாக அவ் வாலிபன் நம்பினான்; எனவே, இப்படிச் செய்தான். அப்படி அவனை வழிக்கேட்டில் கொண்டு விட்டது யார்? சற்றே சிந்தியுங்கள். செய்கிற பாவத்தை யெல்லாம் வேண்டிய மட்டும் செய்துவிட்டு, ஒரு பீங்கான் தட்டையில் சில ஆயாத்களைப் பன்னீராலும், குங்குமப்பூ வாலும் எழுதிக் கரைத்துக் குடித்துவிட்டால் நேரே சுவர்க்கத்துக்குச் செல்லலாம் என்று லஜ்ஜையறப் போதித்த ‘புண்ணிய புருஷர்’களே யன்றோ அப்படிப்பட்ட வழிக்கேட்டை யுண்டு பண்ணியவர்கள்! வருஷ மெல்லாம் பாபம் பண்ணிவிட்டு, ஸபர் மாத இறுதிப் புதனன்று வறுத்துக் கருக்கிய பொரியரிசியைத் தூளாக்கி மையாகக் கரைத்து மா இலையில் சில ஆயாத்களை அந்த மையினால் எழுதி, அவற்றைக் கரைத்துக் குடித்தால் எல்லாப் பாபமும் பஸ்பமாகிவிடு மென்று வெட்கங் கெட்ட தனமாய் விஷம பிரசாரம் புரிந்த ‘கண்ணிய புருஷர்’களே யன்றோ அத்தகைய வழிக்கேட்டை உற்பத்தி செய்துவிட்டவர்கள்? பிறர் மனைவியைத் தன்பக்கல் வசீகரிப்பதற்கும், அடுத்த வீட்டுக்காரனின் சொத்தெல்லாம் தனக்கு வந்து சேர்வதற்கும், குதிரைப் பந்தயம் லாட்டரி போன்ற சூதுகளில் நிரம்பப் பணம் சம்பாதிப்பதற்கும், இன்னம் இப்படிப்பட்ட பலப்பல துஷ்கிருத்தியங்களைப் புரிவதற்கும் குர்ஆனிலுள்ள ஆயாத்களைத் தண்ணீரில் ஓதியூதிக் குடித்தால், அல்லது அவற்றைச் செப்புத் தகட்டி லெழுதிச் செம்பொன்னாலான குப்பிக்குள்ளிட்டுக் கழுத்தில் அல்லது கையில் கட்டிக் கொண்டால் உடனே நிச்சயமாய் வெற்றி கிட்டும் என்று கொஞ்சமும் யோக்கியப் பொறுப்பற்று உளறிக் கொட்டிய முழம் நீண்ட தாடி படைத்த மூ. முக்களே யன்றோ அந்த விதமான வழிக்கேட்டுக்குத் தாயகமாய் விளங்குபவர்கள்? என்மீது கோபப்படாமல் சற்றே ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

இன்றைய இரங்கூனிலே முற்சொன்ன ‘புண்ணிய புருஷர்களான நேர்வழி காட்டிகள்’ சிலர், “ஸபர் மாத இறுதிப் புதன் மிகக் கொடிய நாளா, அல்லவா? அப்படிக் கொடிய நாள்தா னென்

றால், அன்று முஸ்லிம்கள் ஆண்டவனின் கோபப் பார்வையிலிருந்து தப்பிப் பிழைப்பதற்காக அவனுடைய குர்ஆன் வேதத்தின் திருவாக்கியங்களை மாஇலையில் எழுதிக் கரைத்துக் குடிப்பது கூடுமா, கூடாதா? கூடும் என்று சொல்பவர் காபிரா? கூடாதென்று சொல்பவர் காபிரா?" என்னும் அதிவின்னியாசமான பிரச்சினையைக் கிளப்பிவிட்டு விட்டனர்.

அந்த இறுதிப் புதன் கிழமை ஆண்டவன் படைத்த எல்லா நாட்களுள்ளும் மிகமிகக் கொடிய, பொல்லாத, கெட்ட தினமென்றும், அந்தப் பொல்லாத நாளின் தீமை ஒரு முஸ்லிமைத் தாக்காமல் தடுத்துத் தற்காக்க வல்ல ஒரே முறை, அன்றைத் தினம் ஆண்டவனிடம் துஆ கேட்பதும், குர்ஆன் ஆயாத்களை மா இலையில் எழுதிக் கரைத்துக் குடிப்பதுமென்றும் ஒரு முரட்டுக் கட்சியினரும் சில பாமரப் பேர்வழிகளும் பெரும் விஷமத்தீயை இரங்கூனில் மூட்டி விட்டார்கள். இப்படிக் கோமாளித்தனமான முறையில் விபரீதமான பிளவை உற்பத்தி செய்வதைச் சிலர் கண்டிக்க முற்பட்டனர். முடிவு என்னவென்றால், கக்ஷியும் பிரதிகக்ஷியும் விசுவரூபம் பெற்று விட்டன. பேன் பெருமாளாகி, பெருமாள் பெத்த பெருமாளாகி விட்டது!

"புராதன புதன்"

முற்சொன்ன கோமாளித்தனத்தை உற்பத்தி செய்த கட்சியினர் "தாருஸ்ஸலாம்" என்னும் ஸ்தாபனத்தை இரங்கூனில் நிறுவிக் கொண்டு, "புராதன புதன்" என்னும் பெயருடன் கூடிய சிறிய பிரசுரமொன்றை வெளியிட்டுப் பரத்தி வருகிறார்கள். அந்தப் பிரசுரத்தின் சாரம் என்னவென்றால், (1) 6000 வருஷங்களுக்கு முன் இந்த ஸபர் மாதக் கடைசிப் புதனன்று கடுமையான மண்மாரி எழுந்து "ஆது" வம்சத்தாரை அழித்ததாம். எனவே, இந்த நாள் 'கொடிய நஹ்ஸூ'டைய நாளாம்: (2) இந்தக் கொடிய நாளினின்று தப்பிப் பிழைப்பதற்காக இறைவனிடம் துஆ இறைஞ்சுதல் வேண்டுமாம். (3) "எப்பொழுதுமே ஆண்டவனைப் பயப்படாதவன், வணங்காதவன் ஆபத்தை நினைத்தாவது, ஆண்டவனை பயந்து, ஆண்டவனின் ஆயத்தின் தண்ணீரை (இந்த ஸபர் மீ இறுதிப் புதனன்று) குடிக்க" வேண்டுமாம். (4) "வியாதி குணமாவதற்காக அல்லது வியாதி அணுகாம லிருப்பதற்காக ஒடுக்கத்து புதனில் ஆயத்துகளை எழுதி குடிப்பதை எல்லோரும் விரும்பும் பக்ஷத்தில், எல்லோரிடத்திலும் ரிகாபிகள் இருப்பது அரிதாகும். ஆதலால், எல்லோருக்கும் எளிதான மா இலையில் எழுதிக் குடிப்பதில் தவறு எதும் இருப்பதற்கில்லை" யாம்!

இந்த நான்கு கருத்துக்களு மடங்கிய "புராதன புதன்" என்னும் விஷம பிரசார சிறு நூலேதான் அப் பெருங் குழப்பம் மூள்வதற்கான அஸ்திவாரமாக அமைந்து விட்டது. ஆண்டவனே அந் நூல் வெளியாவதற்கு உதவியா யிருந்த சகலரையும் காத்து ரக்ஷித் தருள்வானாக!

ஆண்டவன் கூறும் உவமை

விஷயத்துக்குச் செல்லுமுன், ஈங்கொரு குறிப்பைக் கூறவேண்டும். என்னவென்றால், பனீ இஸ்ராயீல்கள் உலகத்திலில்லாத அத்தனை தினுசான அதியக்கிரமங்களைப் புரிந்து கொண்டே யிருக்கும் போதுகூட அவர்கள், "நாங்க ளெல்லாரும் ஆண்டவனின் செல்வக் குழந்தைகள். நாங்கள் செய்கிறது எதுவுமே தவறாக இருக்க முடியாது. அப்படியே தவறுகள் இழைத்து விட்டோமென்றாலும், எங்களுக் கெல்லாம் சுவர்க்கமேதான் கிடைக்கப் போகிறதென்று ஆண்டவன் எங்கள் தவ்ராத் வேதத்தில் உறுதிமொழி யளித்திருக்கிறான். எனவே, எங்களுக்குத் தவ்ராத் வேதம் இருக்கிறவரையில் எவராலும் (ஏன், இறைவனாலேயுங்கூட) எங்களை ஒன்றும் செய்ய இயலாது!" என்று மார்தட்டிக்கூறிப் புளகாங்கிதம் பூரிப்பார்கள். அப்படிப்பட்ட எஹூதிகளைப் பார்த்து இறைவன் கூறுகிறான்:— "தவ்ராத் வேதத்தையடையப் பெற்றவர்களான எஹூதிகள் அந்த வேதத்தில் கூறப்பட்டுள்ள உபதேசங்களைக் கிஞ்சித்தும் பின்பற்றாமல், அதைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு வெற்றுக் கூத்தாடுகிற கதையைக் கித்தாப் பொதி சுமந்த கர்த்தபத்துக்குத்தான் உவமையாகச் சொல்லவேண்டும். ஏனென்றால், அந்தப் பிராணிக்குத் தன் முதுகின்மீது சுமத்தப்பட்ட நூலிலுள்ள பொருள் எப்படிக் கிஞ்சித்தும் தெரியாதோ, அப்படியேதா னிருக்கிறது இந்த எஹூதிகள் தவ்ராத்தை வீணே கைகடுக்கச் சுமந்து நிற்கும் காட்சியும்!" (ஸூரெ "ஜூம்ஆ", ஆயத் 5-இன் பொழிப்பும் கருத்தும்).

எனவே, வேதத்தை யருளப் பெற்றவர்கள் அவ்வேதத்தில் கூறப்பட்டுள்ள வண்ணம் நடக்க முற்படாமல், அதைச் சுமந்து திரிவதும், (அல்லது அதிலுள்ள எழுத்துக்களை எழுதிக் கழுவிக் குடிப்பதும்), எந்தப் பாபம் செய்தாலும் அதிலுள்ள திருவசனங்களைப் படித்துவிட்டால், அல்லது படித்த வாயால் ஊதிவிட்டால் மட்டுமே எல்லாப் பாபங்களும் பஞ்சாய்ப் பறந்துவிடுமென்று எண்ணுவதும் "புஸ்தகஞ் சுமந்த........"க்கு நிகராகுமென்று ஆண்டவன் உவமித்துக் கூறுகிறான். தவ்ராத்தைப் பினபற்றாமல், அதைச் சுமக்கும் பேர்வழிகளை மட்டும் ஆண்டவன் அப்படி உவமிக்கவில்லை. ஆனால், குர்ஆன் உள்ளிட்ட வேறெந்த வேதத்தையும் பின்பற்றுகிற எந்த மதத்தினரும் இவ்வாறு நடந்து கொள்வது 'பொதி சுமந்த.........'க்கு நிகர்தானென்றே இறைவன் மறைமுகமாக எடுத்தோதி யிருக்கிறான். எனவே, தவ்ராத்தைச் சுமந்தவன் மட்டுமே கர்த்தபமாவான்; வேறு வேதத்தைச் சுமந்தவன் அப்படியாக மாட்டானென்று சற்றும் எண்ணிவிடாதீர்கள்.

இங்ஙன மிருக்க, இரங்கூனிலே இன்று "புராதன புதன்" என்னும் உதவாக்கறைப் பிதற்றலைப் பிரசுரித்துள்ள "நேர்வழி காட்டிகள்" எல்லா முஸ்லிம்களையும் இறைவனுவமிக்கிற "கித்தாப் சுமந்த........."களாக மாற்றிவிடுவதே சரியென்று முடிவுகட்டிக் களத்தில் குதித்துவிட்டார்கள்.

199009

ஏனென்றால், முற்சொன்ன அந்தக் குப்பைத் தொட்டிப் பிரசுரத்திலே, ஒரு மனிதன் குர்ஆனை ஓதினால், அல்லது அதன் திருவாக்கியங்களை மொழிந்தால், அவற்றை ஓதி யூதினால், அல்லது எழுதிக் கரைத்துக் குடித்தால் நேரே சுவர்க்கத்துக்குப் போய்விடுவானென்ற கருத்துப்பட எழுதியிருக்கிறார்கள்! தவ்ராத்தைப் பெற்ற எஹூதிகள் துள்ளிக் குதித்தார்களே, அந்த மாதிரியாகத் துள்ளித் துடிக்கிறார்கள், குர்ஆனைப் பெற்ற இந்தச் சீதேவிகள்.

அந்தக் கு. கூ. நூலின் 16,17 பக்கங்களில் கீழ்க் கண்ட வாக்கியங்கள் காணப்படுகின்றன:— "குர்ஆன் அல்லாவின் நூராகும். அந்த வசனத்தை மொழிந்தாலும், எழுதினாலும் நூர் உண்டாகுகிறது. அதை மொழிந்து சரீரத்தில் ஊதினால் அல்லது கரைத்து உட்கொண்டால் அல்லது நீரில் ஓதி ஊதி உட்கொண்டால் அந் நூரு சரீரத்திலுள்ள றூஹில் சேராதா? நூர் நூருடன் சேர்ந்தால் றூஹூ வலுப்படாதா? றூஹூ வலுப்பட்டால் அதைச் சேர்ந்த தேகத்திலுள்ள பிணியை போக்காதா? இதை ஒரு மூமின் மறுப்பானா?"

அறைகூவலென்னவோ அதிக தடபுடலாகத்தானிருக்கிறது! ஆனால், உண்மை வேறு விதமாகவல்லவோ இருக்கிறது! மார்கோலியத் என்னும் பாதிரி இஸ்லாத்தின் முதல் நம்பர் எதிரி. ஆனால், அவர் அரபு பாஷையில் மிகவும் நிபுணத்துவம் பெற்ற பெரிய பேராசிரியர். ஆக்ஸ்போர்டு சர்வகலா சாலையில் அரபுப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் சேவை செய்தவர். அவர் ஆயுளில் குர்ஆன் ஷரீபை எத்தனையோ நூறு முறை ஓதியிருப்பார். குர்ஆன் மட்டு மின்றி, எல்லா ஹதீது நூல்களையும் எத்தனையோ முறை படித்திருப்பார். அப்படிப்பட்ட மார்கோலியத்தின் மனத்துக்குள்ளும் மூளைக்குள்ளும் நுழைந்த குர்ஆனின் "நூர்" அவருடைய "றூஹூடன்" சேரவுமில்லை; அந்த மார்கோலியத்தின் "றூஹை" வலுப்படுத்தவு மில்லை; அல்லது அவருடைய குபிரியத்தை ஒழிக்கவு மில்லை. இதே மாதிரியாகத்தான் ஜ்வீமர் என்னும் இஸ்லாத்தின் மிகப்பொல்லாத பகைவராகிய மற்றொருபாதிரி குர்ஆன் ஷரீபின் 30 ஜுஜுக்களையும் பாடம் பண்ணிய "ஹாபிஸாக" விளங்கி வந்தார். குர்ஆன் முழுதையும் மனப்பாடம் செய்வதென்பது இலேசான வேடிக்கையன்று. அந்த ஜ்வீமர் எத்தனை ஆயிரம் முறை ஒவ்வோர் ஆயத்தையும் திரும்பத் திரும்ப ஓதியோதி அவ் வேதத்தைப் பாடம் பண்ணி யிருக்க வேண்டும்? அவருடைய "றூஹூ"க்குள் குர்ஆனின் "நூர்" நுழைந்து ஏதாவது மாற்றத்தை உண்டு பண்ணிற்றா? இல்லை! அதற்கு மாறாக, அப்பொல்லாத பாதிரி தம் குயுக்தி வாதமான முரட்டுத் தாக்குதல்களுக்குக் குர்ஆன் ஆயத்களை ஆயுதமாகக் கொண்டுவிட்டார். இநதக் கண்கண்ட உண்மைகளைப் பற்றிச் சிறிதாவது அந்த இரங்கூன் பிரகஸ்பதிகள் சிந்தித் திருந்தால் அப்படி அர்த்தமற்று வாய்க்கு வந்தபடி கிறுக்கித்தள்ளி யிருக்க மாட்டார்கள். ஏனென்றால், ஆண்டவனே 2 : 7–இல் கூறுகிறான்: "அப்படிப் பட்டவர்களின் ஹிருதயங்களின் மீதும் செவிகளின் மீதும் ஆண்டவன் ஒரு முத்திரையை இட்டிருக்கிறான்..." அஃதாவது, மார்கோலியத், ஜ்வீமர் போன்றவர்களுக்குக் குர் ஆன் கிஞ்சித்தும் பயன்படா தென்று விளக்கிக் காட்டி யிருக்கிறான்.

அதேபோல், ஜ்வீமரைப் போலவும் மார்கோலியத்தைப் போலவும் வெளிப்படையாய்க் காபிர்களாயில்லாமல் நயவஞ்சகமாகவாவது, "நானும், ஈமான் கொண்டுவிட்டேன்," என்று வெறும் வாயால் சொல்லிவிட்டு, இஸ்லாத்துக்கு முற்ற முற்றப் புறம்பாக நடந்து கொள்ளும் கள்ள முனாபிக்குகளின் 'றூஹை' அந்த 'நூர்' எப்படி வலுப்படுத்த முடியுமென்று நினைக்கிறீர்கள்? ஒரு குர் ஆனை விடுத்து ஓராயிரம் குர் ஆனை மாங்தோப்பிலுள்ள எல்லா மா இலைகளிலும் எழுதி ஒருவன் தன் ஆயுள் பரியந்தம் குடித்துக் கொண்டே யிருந்தாலும் குர் ஆனின் "நூர்" அவனுடைய "றூஹூ"டன் சேரப்போவது மில்லை; அல்லது அவனுடைய "றூஹ்" வலுப்பட்டுத் தேகத்திலுள்ள பிணியைப் போக்கப் போவதுமில்லை.

ஏனென்றால், ஒரு மனிதன் குர்ஆனைக் கொண்டு இவ் வுலகத்திலாகட்டும், மறு வுலகிலாகட்டும் ஈடேற்றத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவன் குர்ஆனை வாயளவில் ஓதுவதால் மட்டும் அல்லது ஊதுவதால் மட்டும், அல்லது கரைத்துக் குடிப்பதால் மட்டும் கிஞ்சித்தும் ஈடேற்றம் பெற முடியாது. ஆனால், அதை நம்பி ஓதி, பொருளை யுணர்ந்து, ஏவலைக் கடைப்பிடித்து, விலக்கலை நீக்கி, ஸாலிஹான அமல்களைச் செய்தால் மட்டுமே நிச்சயமாக ஈடேற்றம் பெற முடியும். இப்படிப்பட்ட நடை முறையால் கோரிய பலன் கிட்டும்போது, அனாவசியமாக, ஷிர்க்காக, பித்அத்தாக, இறைவன் வேதத்தை இழிவு படுத்து முறையில் அவன் வாசகங்களைக் கரைத்துக் குடிப்பதென்பது மகா கேவலமாகவே போய்முடியுமென்பதில் ஐயமில்லை. ஹிருதயத்தைக் களங்கமாக வைத்துக்கொண் டிருப்பவன் (மார்கோலியத்தைப் போல் ஜ்வீமரைப் போல்) எங்ஙனம் குர்ஆன் ஆயாத்களை அழகாக ஓதுவதன் மூலம் ஒரு பயனையும் பெற முடியாதோ, அதே விதமாகத்தான் கொண்ட ஈமானுக்குத் துரோகம் செய்த முனாபிக்கும் (அந்தக் காலத்து அப்துல்லா பின் உபையைப் போல் அல்லது இந்தக் காலத்து எண்ணிலடங்கா முனாபிக்குகளைப் போல்) குர்ஆன் வாக்கியங்களை மா இலையில் கரைத்துக் குடிப்பதால் ஒரு பயனுமடைய மாட்டான்.

புது ஆராய்ச்சி

நபிகட்டிலகம் (சல்), "என்னுடைய வார்த்தைகள் அல்லாஹ்வின் வேதத்தை மாற்ற முடியா, ஆனால், அல்லாஹ்வின் வசனங்கள் என் கூற்றை மாற்றிவிடும். எனவே, எந்த இடத்திலாவது நான் கூறும் உபதேசம் குர்ஆன் ஷரீபுக்குக் கொஞ்சமாவது மாற்றமா யிருக்குமானால், அப்போது என் உபதேசங்களைத் தள்ளிவிட்டு, ஆண்டவனின்

கூற்றையே ஏற்று நடப்பீர்களாக!'' என்ற கருத்துப்படவே அழுத்தந் திருத்தமாக அறைந்துள்ளார்கள். ஆனால், ''புராதன புத''னின் புண்ணியாத்மாக்கள் கூறுகிறார்கள் :— ''பிரபல்யமாக விளங்கும் ஹதீது கிதாபுகளில் இவ் வியாக்கியானம் (அஃதாவது, ஸபர் மாத இறுதிப் புதன் சம்பந்தமான வியாகயானம்) இல்லா திருக்கலாம். அதனால், ஹதீதிலேயே இல்லை என்று கூறிவிட முடியாது. ஏனெனில், நாயகமவர்களின் எல்லா ஹதீதுகளையும் தெரிந்தவர் எவருமில்லை. அவை யாவையும் ஒருங்கே சேர்த்தவர் யாருமில்லை...பிரபல்யமல்லாத ஹதீது கிதாபுகள் எத்தனையோ உண்டு. அவை எதிலும் இந்த வியாக்யானம் வந்து இருக்கலாம். இவ்வாறு நம்பி விடுவதானது ஷரீஅத்திற்கு முரணாகாது......''

உங்களுக்குச் சந்தேகமற நிச்சயமாகத் தெரிந்த ஹதீதிலேயே ஏதும் முரண்பாடு தென்பட்டால் அதை ஒதுக்கித்தள்ளிவிட வேண்டும் என்று ரசூலுல்லாஹ் (சல்) நமக்கு எச்சரிக்கை விட்டிருக்க, இந்த இரங்கூன் ''நேர்வழி காட்டிகள்'' புதிதாக ஓர் ஆராய்ச்சியை வெளியிட்டுள்ளார்கள். என்னவென்று? உங்களுக்குத் தெரியாத ஹதீதுகளில் மா இலையின் மகாத்மியமும், ''ஒடுக்கத்து புத''னின் முஸீபத்தும் ''பிரபல்யமல்லாத ஹதீது கிதாபுகளில் வந்து இருக்கலாம்!'' எனவே, அதை நம்பவேண்டும், என்று! இதுவரையில் எத்தனையோ மூ. மு. க்கள் தங்கள் நேர்மையற்ற வாதத்தை மக்களுள்ளத்துள் திணிப்பதற்காக, ''இந்தக் கிததாபைப் பாருங்கள்; அந்தக் கித்தாபைப் பாருங்கள். இந்த ஹதீதைப் பாருங்கள்; அந்த ஹதீதைப் பாருங்கள்!'' என்றுதான் மேற்கோள் காட்டி மக்களைப் படுநாசத்தின் பக்கல் ஈர்த்துச்சென்றார்கள். ஆனால், இந்த இரங்கூன் 'ஞான சூனியங்கள்' இன்னம் இரண்டடி பின்னோக்கிச் சென்று, ''சுவர்க்கத்துக்குத் திறவுகோல் மாஇலையில் ஆயாத்களை எழுதிக் கரைத்துக்குடிப்பது தான் என்று பிரபல்யமான ஹதீது கித்தாப்களில் இல்லாதிருக்கலாம்; ஆனால், உங்கள் கண்ணுக்கும் எங்கள் கண்ணுக்கும் புலப்படாத ஹதீதிலே வந்திருக்கலாம். அதை நம்புங்கள்!'' என்று கொஞ்சமும் நாணமின்றி நெஞ்சுத் துணிச்சலுடன் நவீன விதமான வழிக்கேட்டைக் கற்பிக்க முன்வந்து விட்டார்கள்.

இப்படிப் பார்க்கப்புகின், தர்க்காக்களிலும் தைக்கால்களிலும் கல்லறைகளுக்கு முன்னே ஸஜ்தா செய்வது, குதிரைப் பந்தய ரேஸுக்குப் போவது, லாட்டரி நடத்துவது, பஞ்சா வைப்பது, பிளாக் மார்க்கெட் வியாபாரம் செய்வது, இத்தியாதி பாபச் செயல்களுக்கும் 'பிரபல்ய மல்லாத' எத்தனையோ ஹதீதுகளை அவரவரும் மேற்கோள் காட்டலாமே! ஏனென்றால், தெரிந்த ஹதீதாயிருந்தால்தானே தகரா றெல்லாம்! குதிரைப் பந்தய ரேஸுக்குப் போகலாம் என்று 'பிரபல்ய மல்லாத ஹதீது கிதாபில்' இருப்பதாக 'ரேஸ் பித்து'ப் பிடித்தவனொருவன் உளறிக் கொட்டினால், அதற்கு அப்பீல் ஏது?

ஹதீதுகளை மிகவும் அரும்பாடுபட்டு, அப்படியே அப்பட்டமாயும், உண்மையானவையாகவும் இருக்கத்தக்க விதத்தில் தொகுத்துக் கொடுத்த ஆறு உண்மையான கர்த்தாக்களுள் இமாம் புகாரீ என்பவர் முதல் ஸ்தானம் வகிக்கிறார். இவர் சுமார் ஆறிலக்ஷம் ஹதீதுகளை, 'இன்னார் இன்னாருக்குச் சொல்லி அவர் மற்றொருவருக்குச் சொன்னதாவது' என்னும் ராவீகளின் சங்கிலித்தொடருட்பட மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டார். ஆனால், அந்த 6 லக்ஷம் ஹதீதுகளுள் எவை யெவை உண்மையானவை, எவை யெவை ரசூலுல்லாஹ் பெயரால் பொய்யாகச் சிருஷ்டிக்கப்பட்டவை யென்பதை மிகவும் ஊக்கத்துடன் அலசியலசி ஆராய்ந்து பார்த்து, சந்தேகாஸ்பதமானவற்றை யெல்லாம் நீக்கிவிட்டு, நம்பகமான, மெய்யான, உண்மையான (தோராயமாக) 10,000 ஹதீதுகளையே இமாம் புகாரீ எழுதிவைத்துச் சென்றிருக்கிறார். இப்படியிருக்க, ''வாய் புளித்ததா? மாங்காய் புளித்ததா?'' என்னுமா போன்று அகம்பாவத்துடன் ''புராதன புதன்'' சிருஷ்டி கர்த்தாக்கள் நடந்துகொள்கிறார்களென்றால், அவர்களை நாம் என்ன கௌரவப் பெயரிட்டழைப்பது?

இதில் விசேஷமென்னவென்றால், ''புராதன புதன்'' என்னும் விஷம நூலைப் பிரசுரிக்க முற்பட்டவர்கள் சரித்திர பூர்வமாக, குர்ஆன் ஷரீபு பூர்வமாக எங்ஙனம் ஸபர் மாத இறுதிப் புதன் முஸீபத் பிடித்த கெட்டநாளென்பதைக் கொஞ்சமும் நிரூபித்துக் காட்ட முற்படாமல், ஆது வம்சத்தாரை 6,000 வருடங்களுக்கு முன்பு அழித்த காற்றுத் தோன்றிய நாள் அந்த ஸபர் மாத இறுதிப் புதனே என்பதைச் ''சரித்திரத்தைக் கொண்டு கூறமுடியாது'' என்றும், இதைப்பற்றி ஏதாவதொரு ஹதீதில் வந்திருக்கலாம், எனவே அதை நம்பவேண்டுமென்றும், அந்த முஸீபத்திலிருந்து தப்பிப் பிழைப்பதற்காக ஆயாத்களை மா இலையில் எழுதிக் கரைத்துக் குடிக்க வேண்டுமென்றும் கன்னாரே பின்னாரே என்று உளறித் தள்ளியிருக்கிறார்கள்.

''நோய்க்கு அமிர்தம்''

முற்குறிப்பிட்ட அந்த ஒன்றுக்கும் உதவாத ''புராதன புதன்'' பிரசுரத்திலே அதை இயற்றியவர்கள் மற்றொரு வக்ர புத்தியையும் காட்டியிருக்கிறார்கள். என்னவென்றால்: குர்ஆனை ஆண்டவன் ''ஷிபா'' என்று அழைக்கிறானே அதற்கு வியாக்கியானம் ''ஆத்மீகம், ஸ்தூலம், இவ் விருவகை நோய்களுக்கும் அவிழ்தமாகவும், மூமின்களுக்கு அருளாகவுமுள்ளவைகளையே இந்த குர்ஆனில் நாம் இறக்கி வைக்கிறோம் என்பதாகும்'' என்று எழுதியிருக்கிறார்கள். இந்த வலிந்து பொருள் கொள்ளும் விபரீதக் கூற்றுக்கு நாம் வேறெங்கும் இணைகாண முடியாது. அவர்கள் எந்த ஆயத்துக்கு இவ் விபரீத வியாக்யானத்தைத் தந்திருக்கிறார்களென்பதை மேற்கோள் காட்டிக் குறிப்பிடவில்லையென்றாலும், நாம் அந்த ஆயத்திலுள்ள வார்த்தைகளையும் அவற்றின் அர்த்தங்களையும் தருகிறோம். இவற்றைப்

படித்துவிட்டு, அந்தப் பேர்வழிகள் கூறும் வியாக்யானம் ஏதாவது பொருத்தமா யிருக்கிறதா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்:—

குர்ஆன் ஷரீபின் பத்தாவது அத்தியாயத்தில், 57–ஆவது ஆயத்தில், "......வஷி'பா உன்(ல்) லிமா'பிஸ்ஸுதூர்" என்னும் தொடர் காணப்படுகிறது. இதற்கு ஒரே அர்த்தம், "நெஞ்சங்களிலுள்ளவை (களான நோய்)களைக் குணப்படுத்துகின்ற சொஸ்தமாகவும்" என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு வியாக்யானம் என்ன வென்றால், ஆத்மிகத் துறையில் கொஞ்சமும் உறுதி யின்றிக் களங்கமுற்ற நோய்பிடித்த ஹிருதயங்களை இந்தக் குர்ஆனின் போதனைகள் நன்கு குணப்படுத்திவிடத் தக்க ஞானோபதேசங்கள் மிக்கனவாக விளங்குகின்றன என்பதாகும். அஃதாவது, ஆத்மிக நோய்க்கே இந்த வேதம் ஔடதம் என்றே சொல்லவேண்டும்.

எனவே, இறைவன் திறந்த சொற்களால் குர்ஆனின் வார்த்தைகள் ஹிருதயத்தைப் பற்றிய ஆத்மிக வியாதியையே போக்கும் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கும் போது, அந்த வார்த்தைகளை எழுதிக் கரைத்துக் குடித்தால் புற உறுப்புக்களிலுள்ள நோய்களுங்கூடப் பஞ்சாய்ப் பறந்துவிடுமென்பதும், குர்ஆனின் வார்த்தைகள் அமிர்தமாகையால் அவற்றை அப்படியே உட்கொள்ள வேண்டு மென்பதும் கொஞ்சமாவது பகுத்தறிவுக்கு ஒத்ததாய்க் காணப் படுகின்றனவா? இதைக் கருதியே யன்றோ, ஆண்டவனின் வார்த்தைகளை மட்டும் வைத்துக் கொண்டு அவற்றின் கருத்துக்களை ஒதுக்கித் தள்ளுபவர்களைப "பொதி சுமந்த ......" என்று இறைவன் 62:5-இல் எச்சரித்திருக்கின்றான்?

ஈச்ச ஓலையும் மா இலையும்

அந்தப் "புரான புதன்" என்னும் அர்த்தமற்ற நூலில் முக்கியமான இடத்தில் காணப்படும் கீழ்க்கண்ட வாக்கியத்துக்கு என்ன அர்த்த மென்பதை என்னாலும் உணரமுடியவில்லை; என்னைவிடத் தமிழ் கற்றவர்களும் தங்களுக்குப் புரியவில்லை யென்கின்றார்கள். உங்களுக்குப் புரிந்தால் எனக்குத் திருப்தியே. இதுதான் அந்த வாசகம்:—

"புகாரியில் பாபுபீஜம்யில் குர்ஆனில் வருவதாவது:— நாயகமவர்களின் காலத்தில் குர்ஆன் இறங்கும் பொழுது ஈத்தமரத்தின் ஓலையிலும், வெள்ளைக் கற்களிலும் எழுதி வைத்துக் கொள்வார்கள் என்பதாக வருகிறது. வியாதி குணமாவதற்காக அல்லது வியாதி அணுகாம லிருப்பதற்காக ஒடுக்கத்து புதனில் ஆயத்துகளை எழுதி குடிப்பதை எல்லோருக்கும் விரும்பும் பக்ஷத்தில், எல்லோரிடத்திலும் ரிகாபிகள் இருப்பது அரிதாகும். ஆதலால், எல்லோருக்கும் எளிதான மா இலையில் எழுதிக் குடிப்பதில் தவறு எதும் இருப்பதற்கில்லை."

இந்த வாசகத்தில் இரு விஷயங்கள் காணப்படுகின்றன: (1) ரசூலுல்லா (ஹ்)வுக்கு வஹீவாயிலாய் வந்த ஆயாத்களை ஸஹாபிகள் காகித மின்மையால் ஈச்ச வோலைகளிலும் வெள்ளைக் கற்களிலும் எழுதிவைத்துக் கொண்டார்கள். (2) அந்தமாதிரி மா இலையில் இப்போது எழுதி ஒடுக்கத்து புதனில் கரைத்துக் குடிக்க வேண்டும். இந்த இரண்டுக்கும் ஏதாவது சம்பந்த மிருக்கிறதா? முதற் கூற்று மொட்டைத் தலையாகவும், மறு கூற்று முழங்காலாகவும் இருக்கும் போது இவ்விரண்டையும் அவர்கள் முடிபோடுவதற்கு எப்படி அவதிப்படுகிறார்கள், பார்த்தீர்களா? இந்த வாசகத்துக்கு எனக்குப் பொருள் விளங்கவில்லை யென்று முன்பு குறிப்பிட்டேன். ஆனால், இந்த இரங்கூன் பிரகஸ்பதிகள் என்ன எண்ணத்துடன் இவ்வார்த்தைகளை எழுதியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிகிற தென்றால், "பிற்காலத்தில் வரப்போகும் முஸ்லிம் சந்ததியார்கள் ஒடுக்கத்து புதனன்று மா இலையில் அல்லது ரிகாபியில் ஆயத்களை எழுதிக் கரைத்துக் குடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனே தான் அந்தக் காலத்து ஸஹாபிகள் ரசூலுல்லாவின் கட்டளைமீது ஈச்ச ஓலையிலும் வெள்ளைக் கற்களிலும் எழுதி வைத்துக் கொண்டார்கள்!" என்பதாகும். அந்தக் காலத்தில் ஸஹாபாக்கள் இறைவனின் வார்த்தைகளை ஈச்ச ஓலையிலும் வெள்ளைக் கற்களிலும் எழுதி வைத்துக் கொண்டு அவற்றிலுள்ள ஏவல்படி நடந்தார்கள். ஆண்டவனின் நல்லடியார்களாக உயர்ந்தார்கள். இந்த 'ஒடுக்கத்து புதனை'க் கழுவிக் குடிக்கச்-சொல்லி உபதேசிக்கும் புண்ணியாத்மாக்கள் அந்த ஸஹாபிகளைப் போல் நாமும் இறைவனின் நல்லடியார்களாக உயர வேண்டு மென்றால் அந்த ஸஹாபிகள் செய்ததைப் போல் மா இலையில் அல்லது ரிகாபிகளில் ஆயத்களை எழுதச் சொல்கிறார்கள். ஆனால், அந்த ஆயத்களில் உள்ள கட்டளைகளின்படி நடக்கச் சொல்லாமல், அவற்றைக் கழுவிக் குடிக்கச் சொல்கிறார்கள். ஆயாத்களை யெழுதி அவற்றைக் கரைத்த மாத்திரத்தில் வெறுந் தண்ணீர்தான் அங்கே மிஞ்சியிருக்கு மன்றி, ஆயத் தெதையும் நாம் காணமுடியாது. அப்படியே அந்தக் கரைத்த நீரில் ஆயத் மறைந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுமேல், அதை உட்கொண்டமனிதன் பிறகு சிறுநீருக் கிருக்கும் போதும் ஆயத்தை அவமானகரமாக வெளியேற்றுவதாகக் கூறலாமோ? நன்கு சிந்தியுங்கள்.

எனவே, ஆண்டவன் திட்டவட்டமாய்க் கூறியுள்ளபடி இறுதி வேதமாகிய குர்ஆன் ஷரீபை நாம் நம் நோயுற்ற ஹிருதயத்துக்கு ஒரு பக்கா சஞ்சீவியாகப் பயன்படுத்தி இம்மையிலும் மறுமையிலும் மேன்மையடைய வேண்டுமே யன்றி, பீத்தற் சரீரமாகிய இவ்வூத்தை யுடலில் தோன்றுகிற எப்படிப்பட்ட நோய்க்கும் அத்திருவசனங்களைத் திரவ ரூபமாக, தாயத் உருவாக, பீங்கான் தட்டையிலெழுதிய எழுத்துருவாக, மாயிலையில் கிறுக்கப்பட்ட கோல உருவாகப் பயன்படுத்த முற்படுவதென்பது ஷிர்க்காகவும் பித்அத்தாகவுமே போய் முடியும். "ஆண்டவனை வணங்கு" என்னும் சொல்லைப் படித்து அப்படியே இறைவனை வணங்க வேண்டுமன்றி, அந்தச் சொல்லை வணங்குவது எப்படிக் குபிரியததுக்கும் ஷிர்க்குக்கும் கொண்டு விட்டு விடுமோ அப்படியேதான் அவன் ஏவல்களையும் விலக்கல்களையும் கடைப்பிடிக்காமல் அச்

சொற்களை எழுதிக் கரைத்துக் குடிப்பதும் தவறான வழியில் உங்களைக் கொண்டுபோய் விட்டுவிடும்.

ஆண்டவன் 2 : 111–இல் திருவுளமாகிறான்: "(எஹூதிகளும் நசாராக்களுமான) அவர்கள் கூறுகிறார்கள்: 'யூதனாகவோ அல்லது கிறிஸ்தவனாகவோ இல்லாதவன் எவனும் சுவர்க்கத்துள் நுழைய மாட்டான்.' இவை அவர்களின் வீண் ஆசைகளாகும். (ஏ நபியே! நீர் அவர்களை நோக்கிக்) கூறக்கடவீர்: 'நீங்கள் உண்மை பேசுபவர்களாயிருப்பின், உங்களுடைய அத்தாக்ஷிகளைக் கொண்டு வாருங்கள்!' "

அதேவிதமாக நாம் அந்தப் "புராதன புதன்" பேர்வழிகளைப் பார்த்து, "ஆண்டவனின் வசனங்களை மா இலையில் எழுதி ஒடுக்கத்து புதனன்று கரைத்துக் குடித்தால் ஒருவன் விமோசனம் அடையமாட்டானென்று நீங்கள் கூறுகிற கூற்று மெய்யென்றால்,

"تِلْكَ أَمَانِيُّهُمْ قُلْ هَاتُوا بُرْهَانَكُمْ إِن كُنتُمْ صَادِقِينَ ✵

என்றே நாம் அறை கூவுவோம்!

[இக் கட்டுரையாளர் எல்லா விஷயத்தையும் நன்கு விளக்கிவிட் டிருக்கிறபடியால், நாமொன்றும் மேலும் விசேஷமாக எழுத விரும்பவில்லை. எனினும், இரங்கூன் நகரில் இந்த ஒன்றுக்கு முதவாத பிரச்னை பெரிய குழப்பத்தை மக்களிடையே கிளப்பிவிட்டு விட்டபடியால், இந்த உதவாக்கறை விவாதம் இவ்வளவோடு தொலையட்டு மென்ற எண்ணத்துடன் நாம் சில வார்த்தைகளை மட்டும் ஈண்டுக் குறிப்பிட விழைகின்றோம். என்ன வென்றால்: குர்ஆன் ஷரீபிலுள்ள சில ஆயாத்களை, அல்லது "எழு ஸலாம்களை" மா இலையில் அல்லது பீங்கான் தட்டையில் எழுதிக் கரைத்துக் குடித்தால் எல்லா உடல் நோய்களும் பஞ்சாய்ப் பறந்துபோ மென்று இந்நாட்டிலுள்ள சில படே படே "ஆலிம்கள்" கூட மார்க்கத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர். நாம் அவற்றை ஊன்றிப் படித்ததிலிருந்து, ஒருவராவது ஓரிடத்திலாவது இந்த மாதிரியாகக் கழுவிக் குடிப்பதற்கு நம்பகமான ஹதீது பூர்வமாக அல்லது குர்ஆன் பூர்வமாக எங்குமே மேற்கோள் காட்டவில்லை. அவர்கள் எல்லாரும் ஏக குரலில் அப்படிக் கழுவிக் குடிப்பது "ஆகும்!" என்றே சொந்தத்தில் வலிந்து தீர்ப்பு வழங்கி யிருக்கிறார்கள்.

ஆனால், ஆயத்தை எழுதி, பிறகு அதைக் கரைத்து, அந்த ஆயத்தின் உருவமில்லாத 'வெறும் தண்ணீர்'த் திரவத்தைப் பருகி நோய்க்குச் சிகிச்சை தேடிக் கொள்வதைவிட, "குர்ஆன் ஷரீபு ஷிபா வாகும். எனவே, அதன் ஆயாத்களை உள்ளுக்குச் சாப்பிட்ட மாத்திரத்தில் கண்டத்துக்கு மேற்பட்ட 99 வியாதிகளும், கண்டத்துக்குக் கீழ்ப்பட்ட 99 வியாதிகளும் பட்டெனப் பறந்துபோய் விடும்," என்று தீர்ப்பு வழங்குகிற பெரியார்கள் மற்றோர் உபாயத்தை — வெகு சுலபமான உபாயத்தை உபதேசித்தால் அது மிக நன்றாயிருக்கும். அஃதாவது, "குர்ஆனின் வாசகம் ஷிபா வாகையால், நீங்கள் ஒரு குர்ஆன் புஸ்தகத்தைஎடுத்து வந்து, அதை அம்மியில் அல்லது குடைகல்லில் இட்டு அரைத்து மாவாக்கி, அதைக் கலுவத்திலிட்டு, கற்கண்டு, தேன்முதலியவற்றைச் சேர்த்து ஹல்வாவாகச் செய்து, அந்த ஹல்வாவை 'ஒடுக்கத்து புதனன்று' சாப்பிட்டால் உங்களைப் பிடித்த எல்லா பலா முஸீபத்தும் நோய்களும் பறந்துபோய் விடும்!" என்று ஏன் அவர்கள் உபதேசிக்கக் கூடாது? இதனால் ஆயாத்கள் அப்படியே 'முழுசு முழுசாக' வயிற்றுக்குள்ளே செல்லும்; வியாதியும் சீக்கிரம் குணமாகு மன்றே!

—பா. தா.]

"மானிட இன்பம்" ஆசிரியர்

K. வெங்கடராவ் எழுதியுள்ள

அபூர்வமான சிற்றின்ப நூல்கள்.

1. காமக் களஞ்சியம்	0	14	0
2. ஆண் பெண் இன்பம்	0	14	0
3. ஆண் பெண் ஜனனேந்திரிய விளக்கம்	0	12	0
4 காம கலாசாகரம்	0	12	0
5. தேக தர்ம அவஸ்தை	0	12	0
6. உச்சஸ்தான இன்ப சுகம்	0	12	0
7. தேக தத்துவ வினா விடை	0	12	0
8. கசங்கிய கன்னி	0	12	0
9. ஆண் பெண் உறவு ஆபாசமா? (வேள்)	1	0	0
10. என் காதலி (சிரஞ்சீவி)	1	0	0
11. சம்சார பந்தம் ,,	1	0	0
12. நித்ய கன்னி ,,	0		0
13. யார் விபசாரி ,,	0		0

தா. இ. ஏஜெண்ட்களுக்குக் கமிஷன் உண்டு.

ஷாஜஹான் புக் டெப்போ,
460, திருவல்லிக்கேணி ஹைரோட் சென்னை-5

(3 - ஆம் பக்கத் தொடர்)

படைத்த எந்த மனிதனும் அந்த நித்திய வேதத்துக்கான சாசுவத வியாக்யானத்தை எழுதிவைக்க முடியாது. எனவே, குர்ஆனையன்றி வேறெதுவுமே நிலைத்து நிற்கக்கூடியதன்று.

இறைவன் கூறும் "ஏழு வானங்கள்" என்பது அடுக்கடுக்காயுள்ள ஏழு வானங்களே என்று இன்னமும் பிடிவாதத்துடன் வியாக்யானமெழுதுகின்ற சீதேவிகள் குர்ஆன் ஷரீபின் 23 - ஆவது அத்தியாயத்தின் 17-ஆவது ஆயத்தை நன்றாய்ப் படித்துப் பார்ப்பார்களாக. அதில் இறைவன் கூறுகிறான்: "மேலும் நிச்சயமாக நாம் உங்கள் (தலைக்கு) மேல் ஏழு பாதைகளைப் படைத்திருக்கிறோம் ...."

வெகு அழகாக அந்த ஸூரத்துல் மூமினூனில் எடுத் தியம்பியிருக்கிறான்.

இந்த இடத்திலுள்ள அர்த்தத்தை நன்கு தெரிந்து கொண்டால், ஆண்டவன் "வானங்கள்" என்று குறிப்பிடுவதெல்லாம் கிரஹ சஞ்சாரப் பாதைகளையேதா மென்பதைச் சுலபமாக உணர்ந்துகொண்டு விடலாம். நாம் பூமியில் நின்றுகொண்டு வானத்தை நோக்கினால், ஏழு கிரஹங்களான சூரியனும், சந்திரனும், செவ்வாயும், புதனும், வியாழனும், வெள்ளியும், சனியும் எப்படி ஏழு தனித்தனிப் பாதைகளுடே சஞ்சரித்துச் சென்று பருவ மாற்றங்களையும், தட்ப, வெப்ப மாறுதல்களையும், மனித இன நன்மைக்காக உண்டு பண்ணுகின்றன வென்பதைச் செவ்விதில் உணரலாம்.

எனது வேண்டுகோள்

தா. இ. சந்தாதார்களும், ஏஜெண்ட்களும், தாம் தாம் செலுத்தவேண்டிய பாக்கித் தொகைகளையெல்லாம் உடனே செலுத்திவிடுமாறு யான் வேண்டிக் கொள்கிறேன். இந்நேரம் பண நெருக்கடியான வேளையா யிருக்கின்றமையால், ரூபாயென்னும் எண்ணெயில்லாது ஞானமென்னும் தீபத்தை ஏற்றுவது இயலாது தா. இ. வாசக நேசர்களெல்லாரும் அறிவார்கள், இந்த மாசிகை யொன்றே, ஒற்றுமையுள்ள, தாராள மனப்பான்மையுடன் கூடிய, பகுத்தறிவுக்குப் பொருத்தமாயுள்ள, முற்போக்குணர்ச்சியுடன்கூடிய, உயிருள்ள உண்மை இஸ்லாத்துக்காகப் பாடுபட்டு வருகிறதென்று.

சென்ற 33 ஆண்டுகளாகச் சரியான இஸ்லாத்தைச் செம்மையான முறையிலே முஸ்லிம்களுக்கும், முஸ்லிம்க ளல்லாதவர்களுக்கும் நன்கு விளக்கிக் காட்டி வருவது நுங்கள் "தாருல் இஸ்லாம்" ஒன்றேதான் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

இத்தகைய இஷாஅத்துல் இஸ்லாம் சேவையை இடைவிடாது தொடர்ந்து செய்யப் பணம் தேவைப்படுகிறது. ஆதலால், அனைவரும் தத்தம் பாக்கியைத் தயவுடன் அனுப்பிவைப்பதுடன்கூடப் பேருக்கொரு புதிய சந்தா நேயரை இப்பத்திரிகையை வாசிக்கும்படி வழி செய்வாராக.

பா. தாவூத்ஷா

நம் தலைக்கு மேலுள்ள வானத்தில் ஏழு பாதைகளை ஆண்டவன் படைத்திருப்பதாகக் கூறுகிறான். அவை எவை? ஆகாய மண்டலத்திலுள்ள ஏழு கிரஹங்களின்பாதைகளையே இறைவன் குறிப்பிட்டுக் கூறுகிறான். அந்த ஏழுகிரஹங்களும் ஒன்றுடனொன்று மோதிக் கொள்ளாதபடி அவை ஏழுக்கும் தனித்தனி ரஸ்தாவை உண்டுபண்ணி வைத்திருப்பதையும் இதை யெல்லாம் மனிதனின் க்ஷேமத்துக்காகவே படைத்துக் கொடுத்திருப்பதையும் ஆண்டவன்

[பழங்கால வானசாஸ்திர முறைப்படி, சூரியனும் சந்திரனும் கிரஹங்களாகக் கருதப்பட்டமையால், அவற்றை இங்கே குறிப்பிட் டிருக்கிறோம், நீங்கள் சுலபமாக அறிந்துகொள்வதற்காக. ஆனால், தற்கால முற்போக்குள்ள வான சாஸ்திரக் கொள்கைப்படி, சூரியனும் சந்திரனும் கிரஹங்க ளல்ல. யுரேனஸும் நெப்டியூனுமே மற்றிரு கிரஹங்களாகும். வான சாஸ்திரத்தை நன்றாய்ப் பயின்றவர்கள் இதைச் சுலபமாய் விளங்கிக் கொள்வார்கள்.]

[உரிமை யாவும் ஆசிரியருக்குச் சொந்தம்]

அத்தியாயம் — 25

இரு சுல்தான்கள்

இறுதியாகக் கி. பி. 1250-ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 5-ஆம் தேதி பிறந்தது—(ஹி. 648, துல்கஃதா மீ"). அமீருல் மூமினீன், கலீபா, அபூ அஹ்மத் அப்துல்லாஹ், முஸ்தஃஸிம் பில்லாஹ் அவர்கள் நியமனம் செய்து, தம்முடைய சில பரிவாரங்களுடனும், கட்கந்தாங்கியுடனும் அனுப்பி வைத்த அல்மலிக்குல் அஷ்ரப் மூஸா என்னும் பெயர் படைத்த ஐயூபிச் சிறுவன் காஹிராவுக்குள்ளே அன்று வந்து நுழைந்தான். அவன் ஓர் அசுவத்தின் மீது ஆரோகணித்தவனாக, கலீபாவின் படைகள் புடைசூழ, காஹிராவின் வாயிலை எட்டியவுடனே, மிஸ்ரின் சுல்தான் மலிக்குல் முஈஜுத்தீனின் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததற்கொப்ப, காஹிரா நகர்க் கோட்டைக் காவலர்கள் மூஸாவையும் அவனுடன் வந்தவர்களையும் தடுத்து நிறுத்தினார்கள். என்னெனின், என்றைக்கு அந்த மூஸா காஹிராவுக்குள் வந்தாலும் சங்கடம் பிறக்கக் கூடுமென்பதை முற்கூட்டியுணர்ந்த ஷஜருத்துர் தம் கணவர் வாயிலாக ஓர் அவசரச் சட்டத்தைப் பிரயோகித்திருந்தார்; அந்த அவசரச் சட்டத்தின் சாராம்சம் என்னவென்றால், மூஸா என்பவன் காஹிராவுக்குள் காலடியெடுத்து வைக்கக் கூடாதென்பதேயாகும். எனவே, பெரிய படாடோபத்துடன் காஹிராவுக்குள் நுழைய வந்த மூஸாவைக் கோட்டைக் காவலாளிகள் தடை செய்து வெளியே நிறுத்தினார்கள்.

"ஏ மூஸா! நீ காஹிராவுக்குள்ளே வரக் கூடாது!" என்று காவலர் தலைவன் கூவினான்.

"அடே! மிஸ்ரின் சுல்தானை உள்ளே நுழையக் கூடாதென்று தடுப்பவன் யாரடா?" என்று மூஸாவின் பிரத்தியேகக் காவலனாக வந்த கலீபாவின் கட்கந் தாங்கி வீராவேசத்துடன் கத்தினான்.

"ஏய், மூடுவாயை! நான் சுல்தானைத் தடுக்கவில்லை. எங்கள் சுல்தானின் கட்டளையை நிறைவேற்றுகிறேன். இந்த மூஸா என்னும் துரோகி காஹிராவுக்குள் நுழையக் கூடாதென்பது எங்கள் சாஹிபுல் ஜலாலுல் மலிக் முஈஜுத்தீன் ஐபக் அவர்களின் கட்டளையாகும்!"

"யாரடா உங்கள் சுல்தான்? அமீருல் மூமினீன் முஸ்தஃஸிம் பில்லாஹ் அவர்கள் நியமனம் செய்தனுப்பியுள்ள இந்த மிஸ்ரின் சுல்தான், மூஸா அல் மலிக்குல் அஷ்ரப் அவர்களை நீ தடுத்து நிறுத்தினால், உனதுடல் துண்டு துண்டாகச் சிதறிவிடும், ஜாக்கிரதை!"

"மலிக்காவது, அஷ்ரபாவது? எங்கள் மிஸ்ருக்கு ஒரு சுல்தான் தாம் இருக்கிறார். அவருடைய கட்டளையை நிறைவேற்றவே நாங்கள் இங்கே காவல் புரிகிறோம். கலீபா அவர்கள் இந்த மூஸாவை சுல்தானாக நியமித்திருந்தால், ஸல்தனத்தில் சிம்மாசனம் காலியா யிருக்கும் தேசத்துக்குக் கொண்டுபோ! இங்கே யொன்றும் அரியாசனம் காலியில்லை!"

"ஏ காவலனே! நீ விஷயம் தெரியாமல் பிழைத்துகிறாய். இந்த 'பர்மானைப்'படித்துப் பார்!" என்று சொல்லிக் கொண்டே அந்தக் கட்கந் தாங்கி கலீபாவின் விசேஷ உத்தரவு பொறிக்கப்பட்டிருந்த 'பர்மானை' நீட்டினான்.

அந்தக் காவலாளி அதை அலட்சியமாய் வாங்கிப் பிரித்துப் படித்துப் பார்த்தான். முதலில் அவனுடைய கைகள் நடுங்கின; பிறகு கால்கள் விலவிலத்தன; மூளையுங் கிறுகிறுத்தது. அப்படியே மண்டியிட்டு விட்டான். கலீபாவின் தாக்கீதென்றால் லேசா? அரசாங்கத்தின் கோழிமுட்டை குடியானவன் அம்மியையும் தகர்த்து விடுமன்றோ? அடுத்த கணமே மூஸாவும் பரிவாரங்களும் காஹிராவுக்குள் நுழைந்து விட்டார்கள். நேரே அரண்மனைக்குள் சென்று, அத்தாணி மண்டபத்தில் வந்து நின்றார்கள்.

மூஸா அரண்மனைக்குள்ளே வந்து நுழைந்துவிட்டா னென்பதைக் கேள்வியுற்றவுடனே ஷஜருத்துர் சற்று யோசித்தார்; நேரே அத்தாணி மண்டபத்துக்கு விரைந்தேகினார். முன்னம் ஸாலிஹ் ஆட்சி நடத்திய காலத்தில் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்ததைப் போல் இப்போதும் சுல்தான் முஇஜ்ஜுத்தீனுக்குப் பக்கத்திலே சென்று அமர்ந்து கொண்டார். எனவே, அரசவையை ஒரு மாஜீ சுல்தானாவும், ஓர் ஐபக் சுல்தானும், ஓர் ஐயூபி சுல்தானுமாக மூன்று பிரதானமான பேர்வழிகள் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். ஆனால், ஒரு வித்தியாசம்: ஷஜருத்துர்ரும் முஇஜ்ஜுத்தீனும் சிம்மாசனத்தில் ஒருவருக்குப் பக்கத்தில் மற்றொருவ

ராக வீற்றிருந்தனர். கலீபாவின் நியமனம் பெற்று வந்துள்ள இளைய சுல்தான் மலிக்குல் அஷ்ரப் மூஸா கீழே தரையிலே நின்றுகொண்டிருந்தார்.

கலீபாவின் நியமனம் பெற்ற புதிய சுல்தான் காஹிராவுக்கு வந்து விட்டதைக் கேள்வியுற்ற அத்தனை புர்ஜீகளும், பிரதானிகளும் கடல்போல் திரண்டு அரசவையுள்ளே வந்து குழுமிவிட்டனர். ஓர் ஊரில் இரண்டு பைத்தியக்காரர்கள் என்பதைப் போல், ஒரு மிஸ்ருக்கு இரண்டு சுல்தான்களா? என்று எல்லாரும் ஒன்றுகூடி, என்ன நடக்கிறது பார்க்கலா மென்று அங்கு வந்து சேர்ந்தனர்.

மூஸாவும், கலீபாவின் கட்கந்தாங்கியும் அரசவையுள்ளே நுழைந்ததும், மூஈஜுத்தீனிடம் கலீபாவின் தாக்கீதை நீட்டினார்கள். அவரும் ஷஜருத்துர்ரும் அதை வாங்கிப் படித்தார்கள். முன்னமே அரை குறையாய் வயிறு கலங்கிக் கொண்டிருந்த மூஈஜுத்தீனுக்கு இப்போது நிஜமாகவே குடல் குழப்பமடைந்து விட்டது. பக்கத்தில் மட்டும் ஷஜருத்துர் இல்லாமற் போயிருந்தால், அவர் அக்கணமே பறந்தோடிப் போயிருப்பார். ஆனால், ஷஜருத்துர்ரோ மிகவும் அமைதியாகவும், ஒன்றும் பிரமாதமான காரியம் நடந்து விடாதது போலவும் கலீபாவின் கட்டளையை நிதானமாகப் படித்து முடித்தார்.

“ஏ கட்கந் தாங்கியே! அமீருல் மூமினீன் சார்பாக நீர்தாமே வந்திருக்கிறீர்? அல்லது வேறு பெரியவர் எவரும் வந்திருக்கிறாரோ?” என்று ஷஜருத்துர் தைரியமாகப் பேசினார். மூஈஜுத்தீனுக்கோ, உயிர் தொண்டைக் குழிக்கும் அடிவயிற்றுக்குமாக ஏறி இறங்கிக்கொண்டிருந்தது.

“ஏ சூனியக் காரியே! நீ கேட்கிற கேள்வி எதற்கும் பதில் சொல்ல நான் ஒரு சிறிதும் கட்டுப்பட்டில்லை. அமீருல் மூமினீன் அவர்களின் தாக்கீதைப் படித்த பின்னரும் நீயோ அல்லது நின் புருஷனே ஒரு நிமிஷத்தில் சிம்மாசனத்தை இந்தப் புதிய சுல்தானுக்காகக் காலி செய்து மரியாதையாய்க் கீழே இறங்காவிட்டால், உங்க

ளிருவரையும் வெட்டி யெறியும்படி எனக்கு மேலிடத்து உத்தரவு இருக்கிறது. எனினும், நீ பெண்ணா யிருப்பதால், உனக்குக் கொஞ்சம் மரியாதை கொடுக்கிறேன். நான் வந்து உன் கையைப் பிடித்துக் கீழே இழுத்தெறியு முன்னர், நீயே மரியாதையாய் இறங்கி ஓடிவிடு!”

ஷஜருத்துர் ஆழிய முன்யோசனை யுள்ளவரென்பது உங்களுக்குத் தெரியுமே! கலீபாவின் கட்கந்தாங்கியும், பரிவாரங்கள் சிலவும் காஹிராவுக்குள் வந்ததைக் கேள்வியுற்றவுடனே, தமக்கும் தம்முடைய கணவருக்கும் பாதுகாவல் புரிகின்ற ஹல்காக்களின் தலைவரை ஜாடையாய்க் கூப்பிட்டு ஷஜருத்துர் இரகசியமாகக் கட்டளையிட்டனுப்பி யிருந்தார். அந்த ஹல்காத் தலைவர் அக்கணமே வெளியிற் சென்று, கலீபாவின் பரிவாரங்களைக் கைது செய்துவிட்டார். இந்தச் செய்தி கட்கந் தாங்கிக்குத் தெரியாது. எனவே, அவன் அரண்மனைக்கு வெளியிலே தன்னுடன் வந்த பரிவாரங்கள் இன்னம் துணையாய் நின்றுகொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டே அதிகாரத்துடனும், ஆணவத்துடனும் ஷஜருத்துர்ரைத் தாக்கிப் பேசினான். ஷஜருத்துர்ருக்கு கலீபாவின் பரிவாரங்கள் வெளியி லில்லை யென்பதும், இந்நேரம் அவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைக்குள் தள்ளப்பட்டிருப்பார்க ளென்பதும் நிச்சயமாய்த் தெரியுமாதலால், கொஞ்சமும் அஞ்சாமல் பதிலீந்தான்.

“ஓஹோ! அப்படியானால், நீரே தாம் தலைமை தாங்கி வந்திருக்கிறீரோ? மிகவும் சந்தோஷம்! நீர் மேலிடத்து உத்தரவு எதையோ பெற்றுவந்திருப்பதாகச் சொன்னீரே, அந்த மேலிடத்தை நாம் சிறிதும் சட்டை செய்ய வில்லை யென்பதை நீர் அறியீர் போலும்! நீர் தயவு செய்து புறப்பட்ட இடத்துக்கே திரும்பிப் போய், மிஸ்ரீகள் கலீபா சொல்லுகிறபடி யெல்லாம் தலையசைத்துக் கூத்தாடக் கூடிய சர்வ முட்டாள்களா யில்லை யென்பதையும், அவர்களுக்கு எற்கெனவே ஒரு சுல்தான் இருப்பதால் மற்றொரு சுல்தானுக்கு அவசிய மில்லை யென்பதையும் தெரிவித்துவிடும். கலீபா சர்வாதிகாரத்துடன் வலியச் சுமத்துகிற ‘பொம்பை சுல்தானை’ இங்கே ஒருவரும் வரவேற்கத் தயாரா யில்லை யென்பதை உம்முடைய கலீபாவிடம் கூறிவிடும். இனியும் நீர் இங்கே நின்று காலந்தாழ்த்துவதால் உம்முடைய நேரமும் வீணாகும்; எம்முடைய நேரமும் பாழாகும். நீர் மரியாதையாக இப்போதே வெளியேறு விட்டால், உம்முடன் வந்த பரிவாரங்கள் பெற்றுக்கொண்ட மரியாதையையே நீரும் உம்முடன் வந்திருக்கிற மலிக்குல் அஷ்ரபும் பெற்றுக் கொள்வீர்கள்! உஷார்!”

கட்கந்தாங்கிக்குக் கண்முன்னர் உலகமெல்லாம் இருண்டு விட்டது. கலீபாவையும், தன்னையும், கலீபாவால் நியமனம் பெற்ற சுல்தான் மலிக்குல் அஷ்ரப் என்னும் மூஸாவையும் ஒரு பெண் இம்மாதிரி யெல்லாம் அவமரியாதையுடன் பேசுவதைக் கேட்கச் சகிக்காமல், தன்னுடைய வாளை யுருவிக் கொண்டு ஷஜருத்துர் மீது பாயப் போனான். சுல்தான் ஸாலிஹின் காலந் தொட்டு ஷஜருத்துர்க்குப் பாதுகாவலை யளித்து வருகிற ஹல்காக்கள் இதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா நிற்பார்கள்? உடனே சட்டென்று தாவி வீழ்ந்து, கட்கந் தாங்கியை இறுகப் பற்றிக் கொண்டார்கள்.

இந்தக் கண்ணராவியான காட்சிகளைக் காணச் சகியாமல் சுல்தான் மூஈஜுத்தீன் தம்முடைய நேத்திரங்களை இறுக மூடிக்கொண்டார். தம்முடைய தலையோ, ஷஜருத்துர்ரின் சிரசோ வெட்டி யெறியப்படும்போது கண்களால் பார்க்கக்கூடாதென்பதற்காகவே அப்படிக் கண்களை மூடிக் கொண்டார்! ஆனால், கட்கந்தாங்கியை ஹல்காக்கள் பிடித்துக் கொண்டார்க ளென்று தெரிந்ததும், மீண்டும் மெல்லக் கண் திறந்து பார்த்தார்.

இம்மாதிரியான நிலைமை யேற்படுவதா யிருந்தால், உடனே தனக்கு உதவி செய்யப் பரிவாரங்கள் உள்ளே வரவேண்டு மென்று கட்டளையிட்டு வந்திருந்தபடியால், கட்கந்தாங்கி வெளிவாயிலை நோக்கித் திரும்பிப் பார்த்தான்.

“அங்கே ஒருவருமில்லை! உம்முடன் வந்த பரிவாரங்கள் எம்முடைய விருந்துணவைச் சாப்பிடப் போயிருக்கிறார்கள்! ஷஜருத்துர்ரை அவ்வளவு ஏமாந்த சோணகிரி யென்றா எண்ணிவிட்டீர்?— போகட்டும். இப்போதும் ஒன்றும் சீர்கெட்டு விடவில்லை. நீர் மரியாதையாய்த் திரும்பிப் போய் விடுவதா யிருந்தால், உங்களை யெல்லாரையும் விட்டுவிடுகிறோம். இன்றேல்...!” என்று ஷஜருத்துர் கோபாவேசமாகப் பரிகசித்தார்.

அரண்மனைக்குள் காலடி யெடுத்து வைத்தது முதல் அன்றுவரை அதிக உச்சத்துக்கு ஷஜருத்துர்ரை உயர்த்திக் கொண்டே வந்த அதிருஷ்டமென்பது இப்போது தலைகீழாகத் திரும்ப வேண்டுமென்று இறைவன் நாடியிருந்தா னென்பதை எவரே எதிர் பார்த்தார்?

அத்தாணி மண்டபத்துள் அதுபோழ்து குழுமி நின்ற அத்தனை அமீர்களும், வஜீர்களும், பிரதானிகளும், பிரமுகர்களும் இந்த நாடகத்தை மௌனமாகவே பார்த்துக்கொண்டிருந்தார்களென்றாலும், வயிற்றெரிச்சற்காரர்களான புர்ஜீகள் இதுதான் தருணமென்று மூலைக்கொருவராக நின்று கொண்டு, கலகத்தையும் குழப்பத்தையும் கிளப்பிவிட்டு விட்டார்கள். எல்லாம் அமைதியாக இருக்கிற வரை சர்வமும் ஒழுங்காய்த்தான் நடக்கும். ஆனால் ஓடிக்கொண்டே யிருக்கிற சக்கரத்துக்குச் சிறு கடையாணி முறிந்துவிட்டாலோ?

“கலீபா அவர்கள் நியமித்தனுப்பி யிருக்கும் ஐயூபி சுல்தானே எங்களுக்கு வேண்டும்!” என்று சில குரலொலிகள் எழுந்தன.

“ஐபக்கும் அவர் மனைவியும் எங்களுக்கு வேண்டாம்!” என்று பல குரல்கள் ஒலித்தன.

“இவளுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்?”

“இவளை வீழ்த்துங்கள்; வெட்டி யெறியுங்கள்!”

"கலீபாவைப் பகைக்கிற காதகியைக் கழுவி லேற்றுங்கள்!"

"சூனியக்காரி; மோசக்காரி; கொள்ளைக்காரி; வீழ்த்துங்கள் இவளை! அமீருல் மூமினீனின் கட்டளையே எங்களுக்குப் பிரதானம்! இவளைத் துருக்கி தேசத்துக்கு விரட்டுங்கள்! நாம் பட்ட பாடெல்லாம் போதும்!"

குழப்ப மென்றால், சாதாரணக் குழப்பமன்று. முஸ்லிம் ஆட்சி மிஸ்ரிலே நிலைநாட்டப்பட்ட நாளாக அந்த அரண்மனையே அரசவையிற் கண்டிராத காட்சி நிலவிற்று. மூலைக்கொரு செருப்புப் பறந்தது. நாற்காலிகள் உடைந்தன; மேஜைகள் கவிழ்ந்தன. பஹ்ரீகளும் புர்ஜீகளும் சர்வதாராள மாகக் கைகலந்து கொண்டார்கள். அடிதடிகள் சாதாரணக் காட்சியாய்ப் போய்விட்டன. பலபேர் அலறிக் கொண்டே வெளியேறி ஓட்டம் பிடித்தார்கள். சிம்மாசனத்தில் வீற்றிருந்த ஐபக்கும், அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த ஷஜருத்துர்ரும் கதிகலங்கிப் போனார்கள். அச்சத்தினால் ஐபக் மேனி குன்றினர். ஏமாற்றத்தினால் ஷஜருத்துர் கலகலத்துப் போயினர். அரசவை மண்டபத்துள்ளே நடக்கிற இக் கலகத்தை எப்படி நிறுத்துவ தென்று ஒன்றுந் தோன்றாமல் விழித்தார் அந்த மாஜீ சுல்தானா. இன்னது செய்வ தென்று ஒன்றும் புலனாகவில்லை. எதிர் பாராது திடீரென்று பூகம்பம் வந்துவிட்டால், மக்கள் எப்படி ஒருவர்மீ தொருவர் விழுந்தடித்துப் பாய்வரோ, அப்படி யிருந்தது அத்தாணி மண்டபத்தின் அல்லோலகல்லோலம்.

இம் மாதிரியான சந்தர்ப்பத்தில் தாம் அங்கே நிற்பது பேராபத் தென்று கண்டுகொண்ட ஷஜருத்துர் சில ஹல்காக்களின் உதவியை வைத்துக் கொண்டு அவசரம் அவசரமாகப் பின்புறமாக அந்தப்புரத்துள் ஓடி ஒளிந்து கொண்டுவிட்டார். ஐபக்கோ, எழுந்திருக்கவும் சக்தியற்று, இன்னது செய்வதென்றும் புலனாகாமல், கற்சிலைபோல் அங்கேயே நிலைத்துப் போயினர்.

பஹ்ரீகளே பலமிக்கவர்க ளாதலால், புர்ஜீகளால் ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிட முடியவில்லை. எனினும், குழப்பம் நின்றபாடா யில்லை. கலீபாவின் கட்கம் தாங்கி இந்தக் கலகத்தில் என்ன செய்வ தென்று தோன்றாமல் நின்று திகைத்துக் கொண் டிருந்தபோது, புர்ஜீ அமீரொருவர் அவனை யண்மிக் காதுகளில் ஏதோ குசு குசுவென்று ஊதினர்.

மறு நிமிஷமே அந்தக் கட்கந்தாங்கி சிம்மாசனத்தை அண்ணாந்து பார்த்தான். ஐபக் அமர்ந்திருந்த ஆசனத்துக்குப் பக்கத்தில் மற்றோர் ஆசனம் காலியா யிருந்ததை நோக்கினான். உடனே மூஸாவைப் பரபரவென இழுத்துக்கொண்டே சென்று, ஷஜருத்துர் அதுவரை அமர்ந்திருந்த ஆசனத்தில் அச் சிறுவனை ஏற்றி வைத்து விட்டான்.

மின்சார விளக்குக்கு விசையைத் திருப்பி முறுக்கியதும் சட்டென்று வெளிச்சம் நிற்கிற வேகத்தில் அக்கலகம் டக்கென்று நின்றுவிட்டது. கட்கந்தாங்கி மேடைமீது நின்றபடியே, "சுல்தானுல் மலிக்குல் அஷ்ரப் மூஸா நீடூழி வாழ்க!" என்று உரக்கக் கத்தினான். எல்லா புர்ஜீகளும் உடனே "ஆமீன்!" என்றார்கள். பஹ்ரீகள் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல், எல்லாரும் ஏககாலத்தில், "சுல்தானுல் மலிக்குல் முஇஜ் ஐபக் நீடூழி வாழ்க!" என்று மாபபெருங் கூக்குரலிட்டார்கள்.

எனவே, அரசவையில் கூடியிருந்த அத்தனை பேருக்கும் பரம திருப்தியாக இரு சுல்தான்கள் தத்தம் அரியாசனத்திலே கம்பீரமாக வீற்றிருந்தார்கள். பஹ்ரீகளுக்குத் தங்கள் சுல்தான் வீழ்த்தப்படாததில் பரம திருப்தி ஏற்பட்டு விட்டது. புர்ஜீகளுக்கோ, தாங்கள் விருப்பியபடி மலிக்குல் அஷ்ரபும் அமர்த்தப்பட்டதில் பூரணத் திருப்தி விளைந்து விட்டது. கலீபாவின் கட்கந் தாங்கிக்கோ, தான் அமீருல் மூமினீனின் கட்டளையை முற்றும் ஒழுங்காக நிறைவேற்றி விட்டதாக மனச்சாந்தி ஏற்பட்டு விட்டது.

முடிவாக, மிஸ்ரின் ஸல்தனத்திலே இரண்டு சுல்தான்கள்—ஒருவர் கலீபாவின் அனுமதி பெறாதவர்; மற்றொருவர் கலீபாவின் நியமனம் பெற்றவர் வீற்றிருக்க வேண்டியதாக விதி வந்து முடிந்தது.

கலகத்தின் விளைவாகத் தம்முடைய தலை தப்பியதில் முஇஜுத்தீனுக்குப் பரம திருப்தியே ஏற்பட்டு விட்டது. பக்கத்தில் ஷஜருத்துர் இல்லாததால், தைரியமும் பிறந்துவிட்டது. பஹ்ரீகள் தமக்கு வாழ்த்துக் கூறியதில் உற்சாகமும் வந்துவிட்டது. உடனே தம் ஆசனத்திலிருந்து எழுந்து பிரசங்கம் புரிய ஆரம்பித்தார்.

"பொது மக்களே, பிரதானிகளே! இன்று ஒரு நன்னாளாகும். அமீருல் மூமினீன் அவர்கள் நியமித்தனுப்பி யிருக்கிற இந்த சுல்தான் மலிக்குல் அஷ்ரப் ஐயூபி வயதில் சிறுவராக இருந்தாலும், அறிவில் பெரியவரே. நீங்களெல்லீரும் இவரையும் சுல்தானாக ஏற்க விரும்புவதால், நாமொன்றும் தடுக்க விரும்ப வில்லை. இந்த ஸல்தனத் ஐயூபிகளுக்குச் சொந்தமான தென்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, ஓர் ஐயூபியை வரவேற்கிற விஷயத்தில், உங்களைப் போல எனக்கும் யாதொரு கிலேசமும் கிடையாது. எனினும், இவர் வயதிலும் அனுபவத்திலும் குறைந்தவரா யிருப்பதால், நாமும் இவருடன் சேர்ந்தே நாட்டைக் காப்பாற்றுவதாக உறுதி பூண்டுவிட்டோம்! ஆண்டவன் எங்களிருவரையும் நேரான வழியில் சீராக நடாத்தி, இம் மிஸ்ருக்கு எங்களா லியன்ற உதவிகளைச் செய்வதற்குத் துணை புரிவானாக!"

இந்தப் பேச்சைக் கேட்டதும், ஒருவரும் ஒன்றும் புரியாமல் திகைத்தனர். கலீபாவின் கட்கந்தாங்கி இதுதான் சமயமென்று எல்லாரையும் அமைதியா யிருக்கச் சொல்லிப் பின் வருமாறு உபதேசம் விடுத்தான்:—

"ஏ மிஸ்ரீகளே! அமீருல் மூமினீன் அவர்களுக்கு இந்த சுல்தான் முஇஜுத்தீன்மீது வெறுப்போ

(39-ஆம் பக்கம் பார்க்க)

இஸ்லாத்தின் இலக்ஷியங்கள்

[டாக்டர் இஷ்தியாக் ஹுஸைன் குறைஷி]

முஸ்லிம்களின் கடமை

மாக்களை மக்களா யாக்கிவைத்தற்கு உதவும் பல்வேறு திறப்பட்ட பண்பாடுகளும் உண்ணோக்குக்களு மெல்லாம், உண்மையான தெய்வ வழிபாட்டால் விளையக்கூடிய ஒரு வழி யென்னும் ஒற்றுமைத் திட்டத்தாலேயே உற்பத்தியாய் வருகின்றன. என்னெனின், இஸ்லாம் ஒரு வெறு வாய் வேதாந்தம் பேசும் தத்துவ சாஸ்திரமன்று; இம்மார்க்கம் இறைவனுக்கு இன்ஸான் முற்ற முற்ற அடிமுடி சாய்த்து நடக்கும் ஒரு வழிபாட்டுத் துறையா யிருக்கிறது. இஸ்லாத்தில் இறை வழிபாடே முக்கிய முதலம்சமாக — கிரியைகட்குரிய முதற்றூணாக — அமைந்து கிடக்கின்றமையால், அடியவர்களின் அபிலாஷைகளும் ஆதுர முயற்சிகளும் ஆதியவனைத்தும் அவ்வாண்டவனை வழிபடுதற்கே முழுதும் பயன் படுத்தப்படல் வேண்டும். முஸ்லிம்களின் உயிர் வாழ்க்கையே இடையறாது இறைவனுக்கு அல்லுபகல் அறுபது நாழிகையும் வழிபாடு செய்வதா யிருக்கிறது. இத்தகைய வழிபாட்டால் எம் முஸ்லிம்களின் உயிர்வாழ்க்கையே பரிசுத்தமடைந்து வருகிறது; இஸ்லாமிய கொழுகையால் சுய நயம், பேராசை, அதிகார மோகம், அயலவரை யெல்லாம் அடிமைப்படுத்தவேண்டுமென்னும் ஆர்வம், அடுத்துள்ள அண்டை மக்களைச் சுரண்டல் போன்ற துர்க்குணங்களெல்லாம் புடமிடப் பட்டனவேபோல் பறந்தோடி விடுகின்றன; ஆகவே, முஸ்லிம்கள் இத்தரணி வாழ்க்கை குறித்துக் கொண்டுள்ள நோக்கமே நூதன முறையில் சீர்திருந்தி விடுகின்றது. இப்படிப்பட்ட சமுதாய நோக்கம் எல்லா முஸ்லிம்களிடத்தும் பரவத் தலைப்பட்டு விடுங்கால், ஏகாதிபத்தியம், அவரவர் நாடே அவரவருக்கும் சிறந்து நிற்றல், பூகோள எல்லைகள் குறுக்கிட்டு நிற்றல், நிறத்தால் பல்வேறு வருணத்தவர் பல்வேறு ஜாதியினரே என்று கொள்ளப்படல் போன்ற சில்லறை அபிப்பிராய பேதங்களனைத்தும் இஸ்லாத்தின் தீவிர ஜோதியின் முன்னே சூரியன் முன் தோன்றும் மூடுபனியேபோல் பறந்து மறைந்தொழிந்துபோய் விடுகின்றன. முஸ்லிம்கள் முன்னே காணப்படுவது ஒரே நோக்கந்தான்! அதுதான் அனைத்து முஸ்லிம்களுக்கு முரிய ஒரே ஒற்றுமை யெண்ணமா யிருந்துவருகிறது. எனவே, எவரெவரெல்லாம் இக் குவலய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நிறுத்தப் பாடுபட முற்படுகிறாரோ, அவரவ ரனைவருமே எம் முஸ்லிம்களின் தோழர்களாகவும் உடனைத்த கூட்டாளிகளாகவுமே மாறி விடுகிறார்கள். எனவே, எம் முஸ்லிம்கள் அறிந்துள்ள கோஷ்டி ஒரே கோஷ்டிதான்: அதுதான், இத் தரணியி லுள்ள உயர்வு தாழ்வு, அநீதி, அசூயை ஆகிய சுயநயப் பேய்களை ஒழித்தற்கென இறைவனுக்கு வழிபடும் ஒரு விசுவ மகா சகோதர கோஷ்டியா யிருக்கிறது.

முஸ்லிம்களின் முழுவாழ்க்கையும் ஒரே "ஜிஹாதாகத்தான்" — இத்தரணியினின்று தீமையைக் களைந்தெறிய எடுக்கப்படும், ஒரு பொழுதும் ஓயாத போராட்ட மாகத்தான் — இருந்துவரவேண்டுவதா யிருக்கிறது. ஆனால், எமதிஸ்லாத்துக்கு விரோதமாய்ப் பிரசாரம் புரியும் எதிர்மதவாதிகளின் யோக்கியமற்ற செய்கைகளாலும், அவ்வயோக்கிய தீய இடைவிடாப் பிரசாரத்துக்கு இலக்காய்க் கிடக்கும் ஒரு சில முஸ்லிம்களாலும் எம் முஸ்லிம்களது உயிர்வாழ்க்கையின் உண்மை நோக்கமே தவறாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. ஜிஹாத் என்னுஞ் சொல் "போராட்டம்", "பெருமுயற்சி" என்றே பொருள்கொள்ளும்; ஆதலினால், ஒருவனுக்கு ஒரு நல்ல புத்தியைப் போதிக்க முயல்வது முதல் இஸ்லாத்தின் நன்மைக்காக ஒருவர் தம்மையே தியாகம் செய்து கொள்ளத் துணியும் காரியம் வரையுள்ள போராட்டமா யிருக்கிறது அந்த ஜிஹாதென்னும் பெரு முயற்சி. நம் முஸ்லிம் இளஞ்சிறார்களும், இளஞ்சிறுமிகளும் ஜிஹாதின் உண்மைக் கருத்தை யுணர்ந்து செய

லாற்ற முன்வந்தாலல்லது, இஸ்லாம் இக்காலத்
தில் ஒருயிருள்ள சக்தியாக உயர்ந்தோங்கு
வது ஒருபோதும் சாலாது. எனவே, ஒவ்
வொரு முஸ்லிமும் தம்மளவிலே இஸ்லாத்தில்
ஏவப் பெற்றுள்ளாங்கு ஒழுங்குடனே நடந்து,
ஏனையவர்களுக் கெல்லாம் இஸ்லாத்தின் ஒளி
யைப் பரத்தும் ஒரு கலங்கரை விளக்கமா
யிருந்து வருதல் வேண்டும்; அவரவரும் ஒழுங்
கான நல்ல உயிர்வாழ்க்கையை அல்லா(ஹ்)வும்
ரசூலும் ஏவியவண்ணம் நடாத்தி, ஏனை (இரு
ளில் தடுமாறித் திரியும்) மக்களுக்கெல்லாம்
தீபஸ்தம்பமே போலிருந்து, நேர்வழிக்குரிய
ஜோதியை வீசட்டும். ஓரொரு முஸ்லிமும்
தாம் தாமும் தனிப்பட்ட "ஆசாமி" அல்ல
வென்றும், ஆனால் ஒரு விசுவ மகா சகோதர
சமுதாயத்தின் அங்கத்தின னென்றும், அம்
மகா சகோதர கோஷ்டி உயிருடனே யிருக்க
வேண்டுமாயின், அதன் ஓரோர் அங்கத்தின
னும் தன் தன்னால் இயன்ற நற்காரியத்தைப்
புரியக் கட்டுப்பட்டுள்ளா னென்றும் கருத
வேண்டும். அவரவரும் இஸ்லாத்தைப் பற்றி
வீண் வெளிப் பெருமை பேசாது, அவரவரும்
இஸ்லாத்தில் ஏவப்பெற்றுள்ளாங்கு நடந்து
காட்டக் கடவர். ஓரொரு முஸ்லிமும் உண்
மை முஸ்லிமா யொழுகாது போய் விடுங்கால்,
அவர் நம் முஸ்லிம் சமுதாயத்தில் தோன்றும்
ஒரு விஷப்புண்ணாய் விடுகிறார்; இவ்வாறு
அதிகமான முஸ்லிம்களால் அநேகங்குழி
(விஷ)ப்புண்ணாய் விட்டால், அப்பால் இஸ்லா
மிய சமுதாய முழுதுமே இல்லாமல் அழிந்
தொழிந்து அஸ்தமித்துப் போய்விடும்.
அவாவரும் தம்மளவிலே உண்மை முஸ்லிமா
யொழுகுவதுடன்கூட அடுத்தபடியில் தம்
மைச் சூழ்ந்துள்ள மக்களை யெல்லாமும் மெய்
யான முஸ்லிம்களாகச் செய்யப் பிரயத்தனப்
படல் வேண்டும். மேனாட்டுக் கிறிஸ்தவர்களைப்
போல் நம் முஸ்லிம்கள் அத்துணைப் பெரிய
கோடீசுவரர்களா யில்லாமையால், அவர்களைப்
போல் இவர்கள் இஸ்லாமிய பிரசாரத்துக்காக
ஏராளமான திரவியங்களைச் செலவு செய்து,
அதிகமான மிஷ்ஷனெரிகளை இப்பாருலகு
முழுதும் அனுப்ப இயலாதவர்களா யிருக்கிறார்
கள். ஆதலினால், ஆதிகால முஸ்லிம்களைப்
போல், இற்றை நாளில் நாம் ஓரொருவரும் ஓர்
உண்மை மிஷ்ஷனெரியாக—முபல்லிகாக—
மிளிர்ந்து நிற்றல் வேண்டும்; அவாவரும்
தாமும் தம்மின மக்களும் தீனுல் இஸ்லாத்தில்
ஏவிய வண்ணம் திரிகாணசுத்தி யுடனே
நடந்துகொண்டு, அண்டை அயலிலுள்ளவர்
களுக்கும் இஸ்லாத்தின் மேன்மையை எடுத்து
விளக்குதல் அத்தியாவசியமா யிருக்கிறது.
இறுதியாக, இஸ்லாத்தின் இனியபோதனைகளை
எவரேனும் அழித் தொழிக்க முற்பட்டால்,
அதுகாலை இஸ்லாத்தின் தற்காப்பி னிமித்தம்
போராடி உயிர்துறக்கத் தையாராயிருக்கிறோம்
என்று சூளுறவு கூறுதற்கு ஒரு சிறிதும்
லஜ்ஜையுறுவது கூடாது. இஸ்லாத்தில்
கண்ணியத்துடனே உயிர்வாழ்வ தென்பது,
இவ்விஸ்லாத்துக்கு ஆபத்து நேருங்கால்,
உயிர்விடச்சித்தமா யிருத்தலையே குறிப்பதா
யிருக்கிறது. எந்தச் சமுதாயத்தின் அங்கத்
தவர் ஒவ்வொருவரும் அச் சமுதாயத்துக்கு
ஆபத்து நேருங்கால், அதனைத் தற்காத்து
நிறுத்த உயிர்விடச் சித்தமா யிருக்கிறார்
களோ, அந்தச் சமுதாயமே உயிருடன்
நிலைத்து நிற்றல் கூடும்; இதுவேதான் ஜிஹா
தின் இரண்டாவது பொருளின் கருத்தா யிருக்
கிறது. உயிர்வாழ்க்கை யென்பதே ஓயாத
போராட்ட மாகத்தான் இருந்து வருகிறது.
எனவே, எம் முஸ்லிம்கள் தங்கள் சமய உண்
மைகளுக்காக அனவரதமும் ஓய்வு ஒழிவின்றி
உழைத்துவர வேண்டியவர்களா யிருக்கிறார்
கள்; இப் பெரும் போராட்டத்தில் நாம் நமது
லக்ஷிய சித்திக்காக உயிரைத் தியாகம் புரிய
வும் துணிந்து நிற்றல் வேண்டும். இதுவே
"ஜிஹாதெ கபீர்" என்று அழைக்கப்பட் டுள்
ளது.

முஸ்லிமல்லா தாருடனே முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொள்ளல் வேண்டும்?

இறைவன்மீது மெய்யாய நம்பிக்கை—
உறுதி பூண்டுள்ள ஒரு மனிதன் இத்தரணியில்
எத்தகைய கொடுங்கோன்மையையும் பார்த்
துப் பொறுத்திருக்க மாட்டான். "இஸ்லாம்"
என்பதும், "கொடுமை" என்பதும் ஒன்றுட
னொன்று முரண்பட்டுள்ள எதிரிடைச் சொற்
களேயாம். எதேச்சையும் சுயேச்சையு மில்
லாது இஸ்லாம் இங்கில்லை யென்னலாம். இல
க்ஷிய மென்ப தொன்று அமல் நடத்திக் காண்
பிக்க இயலாவிடின், அஃது இருந்தும் இல்லா
தது போலவேதான்; எனவே, இஸ்லாம்
அனுஷ்டித்துக் காட்டமுடியாத ஒருவாய் வே
தாந்த மதமன்று. இஸ்லாம் அடிமைத்தனத்
துள்ளேயிருந்து கொண்டே அமல் நடத்தப்
படுவது இயலாது. இஸ்ாலம், உண்மையிலே
நம்முடைய செயல்கள், நம்முடைய தொழில்

கள், நம்முடைய வாழ்க்கை லக்ஷியங்கள் ஆதியவனைத்தையும் ஒழுங்குடனே செப்பஞ் செய்து கொள்ளுதற்குரிய உயரிய மார்க்கத்தை நமக்கெல்லா எடுத்துக் காட்டியே யிருக்கிறது. நம்முடைய செயல்களுக்குரிய சூழ்நிலைகளை நம்மாலியன்றவரை நாம் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்; இவ்வாறில்லாவிடின், அச்சூழ்நிலைச் சுழலினுள்ளே நாம் சிக்கி மூழ்கிவிடுவோம். முஸ்லிம் என்பார் தந் தொழிலைத் தாமே ஆட்டிப் படைக்கும் ஆற்றல் படைத்தவரா யிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டுள்ளபடியுள்ள ஓரழகிய சமுதாயத்தைச் சிருஷ்டி செய்து வைத்தல் சாத்தியமாகும். அது பொழுதுதான் நாம் பொது மக்களைத் தேவை, துன்பம், துயரம், மேன்மை தாழ்மை, கொடுங் கோன்மை ஆதியவற்றை விட்டு அக்கரை ஏற்றுதல் சாத்தியமாகும். ஆயின், நம் லக்ஷியத்தை நாம் அயலவர் மீது திருத்துவது தகாது; என்னெனின், எந் திருமறை எதிரியின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுக்குமாறு ஏவியிருக்கிறது. எதிர் மதவாதிகள் எவ்வளவுதான் இஸ்லாத்தின் சகிப்புத் தன்மையற்ற கொடுமை குறித்து வரைந்து, அல்லது பேசித் தள்ளினும், எம் முஸ்லிம்கள் எல்லாக் காலத்தும் எதிர்மதவாதிகளைச் சகிப்புத் தன்மையுடனும் தாராள சித்தத்துடனுமே தான் நடாத்தி வந்துள்ளார்கள். இஸ்லாம் எக்காலத்தும் மதத்தின் பேரால் கூட்டங் கூட்டமான மக்களை அழித்தொழித்தோ, கிறிஸ்தவர்களின் மதவிசாரணைச் சங்கம் (Inquisition) போன்ற கொடுங்கொலை புரிந்தோ, அல்லது முஸ்லிம் ராஜ்யத்தினின்று ஏனைச் சமய எளிய மக்களை நாடு கடத்தியோ கொடுமை யிழைத்தது கிடையாது. எதிர்மதவாதிகட் கெல்லாம் மத சுதந்தரமும், மனச்சாக்ஷி சுதந்தரமும், சமுதாய சுதந்தரமும் அளித்தற்குரிய நல்ல முறையிலே அரசாங்கம் எவ்வாறு நடாத்துவதென்பதற்கு வேண்டிய ஒழுங்கான அரசியல் சட்டதிட்டங்களை ஆதியிலே அமைத்து வைத்தவர்கள் எம்முஸ்லிம்களாகவே யிருந்து வருகிறார்கள். நம் முஸ்லிம் முன்னோர்களே முதன் முதலில் தர்ம யுத்தம் புரிதற்குரிய தாராளச் சட்டத்தை ஏற்படுத்தி வைத்தார்கள்; எதிரிகள் ஏமாற்றும் எண்ணத்துடனே நயவஞ்சகமாய் நடப்பதா யிருப்பினும், எம் முஸ்லிம்கள் தர்ம யுத்தமே புரியவேண்டியவர்களா யிருக்கிறார்கள். நாம் என்றுமே எவர்மாட்டும் ஜாதி வித்யாசம் நிறவேறுபாடு போன்ற அசுயைகளைக் கடுகளவும் பாராட்டியது கிடையாது. நாம் எவரையும் கறுப்பனென்றோ, ஹராம்ஜாதனென்றோ வேற்றுமை காட்டமாட்டோம். நம்முடைய அரசாங்கங்களும் எத்தனையோ இழிசனர்களைக் கண்டிருக்கிறது; எனினும், எவருக்கும் இஸ்லாமிய ராஜ்யம் அவர்கட்குரிய கேவலம் மானுஷீக உரிமைகளையும் மறுத்து, அவர்களை அதலபாதலத்திலே ஆழத்தில் அடிமைகளாகவே வைத்திருக்க விழைந்ததில்லை; இதற்குமாறாக, அத்தகைய இழிசனர்களை யெல்லாம் இஸ்லாமியர் அந்தஸ்திலே தங்களுக்குச் சமமாகவே செய்து வைத்துள்ளார்கள். முஸ்லிம் ராஜ்யம் தனதாட்சிக் கடங்கிய மக்களைப் பொருளாதார வறுமையுள்ளும், அவர்களது கலையை அழித்தொழிக்கத் தக்க பாதாளப் படுகுழியுள்ளும், அம் மக்களின் அரசியல் அல்லது ராணுவப் பழக்க வழக்கங்களை யெல்லாம் ஒழித்துக் கட்டுதற்குரிய அடிமைத் தளையுள்ளும் ஆழ்த்தித் தாழ்த்தி வைத்தற்குரிய விதத்திலே நடத்தி வைத்தது கிடையாது. இதற்கு மாறாக, முஸ்லிமல்லாத வர்த்தக கள் செவ்வனம் செழித்தோங்கச் செய்யப்பட்டார்கள்; இன்னம், அன்னவர்கள் முஸ்லிம்களுடனே சேர்ந்து ராணுவத்தில் பயிற்சிபெறச் செய்யப்பட்டார்கள்; ஆகவே, அவர்களுள்ளிருந்து அநேக கம்மாண்டர்களும், மேஜர்களும், ஜெனரல்களும் உற்பத்தியாகி யுள்ளார்கள். முஸ்லிம் ராஜ்யங்களில் பற்பல அரசியல் ஞானிகளும், அமீர்களும், வஜீர்களும், கவர்னர்களும் தோன்றிப் பெயரும் புகழும் பெற்று விளங்கி யுள்ளார்கள், முஸ்லிமல்லாதார்களுள் ளிருந்து. இக்கூறிய திருஷ்டாந்தங்களிலிருந்து, இஸ்லாம் என்றுமே இவ்வுலகத்தையே சதமெனக் கொண்டது கிடையாதென்னும் மெய்ம்மையும், இப்பாருலக மக்களை முன்னேற்றிவிடுவதொன்றே இதன் முக்கிய நோக்கமென்னும் உண்மையும் நன்கு விளங்கக் கிடக்குமென்பது சரதமேயாம்.

முஸ்லிம்கள் முன்னேற்றத்துக் குரிய மக்களைச் சிருஷ்டிக்க வல்லவர்களே.

ஆகவே, நாம் முஸ்லிம்கள் இத்தாணியில் தரித்திருப்பதற்கே அருகதையற்ற அத்துணைப் பொல்லாத ஜாதியினராகவா இழிந்து கிடக்கிறோம்? நமக்கு இங்கே உயிர்வாழ உரிமை யில்லையா? நாம் இக்குவலயத்தில் நம்

முடைய லக்ஷியங்களைப் பின்பற்றி யொழுக வும், நாம் நலமெனக் கண்ட நம்முடைய அருமை லக்ஷியங்களை ஏனைமக்களுக்கு எடுத்துக் காட்டிப் பழக்கவும் நமக்குச் சுதந்தரமில்லையா? நாம் முஸ்லிம்கள். நம்முடைய லக்ஷியங்களில் முழுநம்பிக்கையும் வைத்துள்ளோம்; ஏனென்றால், எல்லா நன்மைகளும் நற்குணங்களும் அல்லா(ஹ்)வினிடத் திருந்தே உற்பத்தியாகி வருகின்றனவென்று நாம் முழு நம்பிக்கையும் வைத்துள்ளோம். இம் மேதினியில் காணக்கிடக்கும் சகலவிதத் தொல்லைகளுக்கும் ஆண்டவன் மீது வைக்கும் உறுதியே உறுதுணையா யிருந்துவருகிறதென்றும் நம்பியுள்ளோம். இவ்வாறு அவ்வொரே இறைவனது ஆணைக்கிணங்க நடப்பதே எல்லா இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் சர்வ மூலிகையா யிருக்கிறதென எம்பெருமானார் முஹம்மத் (சல்)நபியவர்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளார்கள். இஸ்லாத்தின் ஈமானுக்குரிய ஆணிவேர் அவ்வேக வல்லவனுக்கு இணை வேறெதுவுமேயில்லை யென்பதுதானாகும்; எனவே, எமது வணக்கங்களுக் குரியவன் அவ் ஏக இறைவனாகவே யிருக்கிறான். எங்கள் திரிகரண சுத்தியுடன்கூடிய வணக்கத்திற் குரியவன் அந்த அல்லா(ஹ்) ஒருவனே யென்பது “இஸ்லாம்” என்னும் இவ்வொரே சொல்லாலேயே விளக்கப்பட்டுள்ளது; “இஸ்லாம், என்பது, “இறைவனுக்கு முற்ற முற்ற அடிமுடிசாய்த்தல்” என்பதா யிருக்கிறது. இத்தகைய ஞானத்தைக் கைக்கொண்டு, நாம் மேன்மேலும் முன்னேறிச் செல்லலாம்; என்னெனின், நாம் முஸ்லிம்கள். முன்னேற்றத் துக் குரிய மக்களைச் சிருஷ்டிக்க வல்லவர்களா யிருந்துவருகிறோம்.

மலேயாவிலுள்ள அன்பர்களுக்கு

“ஷாஜஹான் புக் டெப்போ”வின் நூல்கள், “தாருல் இஸ்லாம்” முதலியவை தேவைப்பட்டால் நீங்கள் சென்னைக்கு எழுதத் தேவையில்லை. இங்கே மலேயாவிலேயே உடனுக்குடன் கிடைக்கும். தங்கள் தேவைக்குக் கீழ்க் கண்ட விலாசத்துக்கு உடனே எழுதுங்கள்.

இந்தியா நாவல் டிப்போ,
3, கிருபோ ரோடு, சிங்கப்பூர்.

(35-ஆம் பக்கத் தொடர்)

துவேஷமோ கிடையாது. ஷஜருத்துர் என்னும் மோசக்காரியை வீழ்த்த வேண்டுமென்பதொன்றேதான் கலீபாவின் குறிக்கோளாகும். மேலும், இந்த மலிக்குல் அஷ்ரபும் சுல்தானாக இருக்க வேண்டுமென்றே கலீபா விழைகின்றார். சற்று முன்னே சுல்தான் மூஈஜ் கூறியதேபோல் அவரும் இவரும் சேர்ந்தே ஆட்சி புரியலாம். ஆனால், அந்த ஷஜருத்துர்ரை மீண்டும் பதவிக்குக் கொண்டுவந்து விடாதீர்கள். நான் இப்போதே பாக்தாதுக்குச் சென்று, நடந்த விவரங்களைத் தெரிவித்து, இந்த இரண்டு சுல்தான்களும் சேர்ந்து ஆட்சி நடத்துவதற்கு கலீபா அவர்கள் அனுமதியளிக்கச் செய்து விடுகிறேன். நீங்களெல்லீரும் இதுமுதல் ஒற்றுமையா யிருந்து, இவ்விரு சுல்தான்களையும் வைத்துக்கொண்டு க்ஷேமமா யிருந்துவரக் கடவீர்களாக! அரசாட்சியை ஒழுங்காக நடத்துவதற்கு நீங்களெல்லீரும் உதவி புரிவீர்களாக! இத்தனை நாட்களாக ஒரு பெண்பிள்ளையின் ஆட்சியினால் மாசடைந்துபோய்க் கிடந்த மிஸ்ர் இந்த இரண்டு சுல்தான்களின் ஆட்சியைக் கொண்டு சுபிக்ஷமடையக் கடவதாக!”

உலக சரித்திரத்தில் நாம் அடிக்கடி காண நேரும் விசித்திரமான விந்தைகளுள், அன்று காஹிரா அரசவையில் நடந்த மாறுதலும் ஒன்றாகும். கலீபா நியமித்தனுப்பிய சுல்தானையும் கட்கந்தாங்கி பட்டத்தில் ஏற்றி வைத்துவிட்டான். ஏற்கெனவே ஷஜருத்துர்ரால் சுல்தானாக்கப்பட்ட மூஈஜுத்தீனும் சுல்தானாகவே இருந்து வந்தார். கட்கந்தாங்கியின் சமயோசித புத்தியால், விபரீதமாகப் போய் முடிந்திருக்கக்கூடிய கலகமும் நின்று போனதுடன், எந்தக் கட்சிக் காரருக்கும் மனஸ்தாபமில்லாத முறையிலே இரு சுல்தான்களை அமர்த்திவைத்து, மத்தியஸ்தம் செய்துவிட்டார். சூழ்நிலை இருந்த அந் நெருக்கடியான நிலைமையில் ஒருவரும் ஒன்றும் பேசாது, இந்த வேடிக்கையான ஈரரசு ஏற்பாட்டை மௌனமாய் ஏற்றுக் கொண்டு விட்டனர்.

எனவே, கலீபா போட்ட திட்டம் நிறைவேறி' ஷஜருத்துர்ரின் ஸ்தானம் காலி செய்யப்பட்டதுடன், அங்கே ஐயூபிச் சிறுவராகிய மூஸாவும், சுல்தானுல் மலிக்குல் அஷ்ரப் என்னும் நாமத்துடனே அமர்த்தப்பட்டு விட்டார். இன்று முதல் மிஸ்ரை இரு சுல்தான்கள் சேர்ந்து ஆட்சி செலுத்த நேர்ந்தது. (தொடரும்)

கிறிஸ்துமத ஸ்தாபகர் ஏசுநாதரா?

(ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல்)

அறிஞர் லத்தீப் என்பவர் மிகுந்த ஆராய்ச்சியின் மீது தயாரித்த மிக அபூர்வமான நூல் இது. ஹிந்து, கிறிஸ்தவ முஸ்லிம் நண்பர்கள் அனைவரும் உண்மையை உணர அவசியம் படிக்கவேண்டிய அற்புதமான நூல்.

விலை ரூ. 1-0-0 தான் வி.பி. வேறு

ஷாஜஹான் புக் டெப்போ, சென்னை - 5.

கம்யூனிஸ்ட்கள் என்றைக்குமே நேர்மையுடன் நடந்து கொள்ள முடியாது. ஏனென்றால், அவர்கள் எந்த நாட்டி லிருந்தபோதினும், ருஷ்யா மீதே பற்றுதல் மிக்கவர்களாக வும் தங்கள் நாடுகளின் மீது சற்றும் அபிமானமற்றவர்களாகவும் காணப்படுகிறார்க ளென்பதை இக் கட்டுரை இனிது விளக்குகிறது.

கம்யூனிஸ்ட்களின் தகடுதத்தம்

கம்யூனிஸக் கக்ஷியைச் சார்ந்தவனொருவன் எந்த நாட்டிலே பிறந்திருந்தாலும் அவன் தன்னுடைய நாட்டை மேலானதாகக் கருதுவது அவனுடைய வழக்கத்திலேயே கிடையாது. ஏனென்றால், ருஷ்ய நாடு கடைப் பிடிக்கிற வழிகள் ஒன்று மட்டுமே உலகை உய்விக்க வல்லதென்றும், தன்னுடைய தாய்நாடு கடைப் பிடிக்கும் மார்க்கமெதுவுமே ஒழுங்கானதன்று என்றுமே அவன் சதா கருதுகிறான். அவனுடைய தாய்நாடு ருஷ்யாவின் எந்த எந்தக் கொள்கைகளை ஒட்டி நடக்கிறதோ அவ்வவற்றையெல்லாம் அவன் பாராட்டிப் புகழ்கிறான். அதே சமயத்தில் ருஷ்யாவின் கொள்கைகளை எவ்வெப்போது அவனுடைய நாடு ஒதுக்கித் தள்ளிவிடுகிறதோ அப்போதெல்லாம் அவன் தன் நாட்டின் அரசாங்கத்தை எதிர்க்கிறான். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு கம்யூனிஸ்டின் அபிப்பிராயத்தில், ருஷ்யா தேசம் ஒன்று மட்டுமே மிக ஒழுங்கான, நேர்மையான, கொஞ்சமும் தோஷமற்ற பாதையைக் கடைப் பிடிக்கிறதாம். எனவே, உலகின் மற்றெல்ல நாடுகளும் ருஷ்யாவைப் பின்பற்ற வேண்டுமாம். அப்படிப் பின்பற்றத் தவறிவிட்டால், அவை தவறான பாதையைப் பின்பற்றுவதாக அர்த்தமாம். இதில் மற்றொரு விசேஷம் என்னவென்றால், ருஷ்யா 'இரும்புத் திரை'க்குள்ளே மறைந்து ஒளிந்து கொண்டு தன் நாட்டு மக்களை அடிமைகளினுங் கேவலமாய் நடத்தி, அபரிமிதமான வேலையை வாங்கி உற்பத்தியை மிகவாகப் பெருக்கி யுத்தத்துக்கு ஆயத்தமாவதைப் பற்றி மற்ற நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட்கள் கடுகளவும் தங்கள் வெறுப்பைத் தெரிவிக்க மாட்டார்கள். ஏனென்றால், ருஷ்யா எடுக்கிற நடவடிக்கை எதுவும் தான் நேர்மையானதாயிற்றே! ஆனால், வேறு நாடுகளில் நல்ல காரியத்துக்காக உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று அரசாங்கம் சொல்லும்போது அந்த நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வார்கள்; நாச வேலை செய்வார்கள்; வேலை நிறுத்தம் செய்வார்கள்; இன்னம் எதுவேண்டுமானாலும் செய்வார்கள்; எல்லாவற்றுக்கும் மேலாக, விளைக்க வேண்டிய படுநாசங்களையெல்லாம் விளைத்துவிட்டுத் தலைமறைவாக ஒளிந்து கொண்டு விடுவார்கள். இதுதான் கம்யூனிஸ்ட்களின் பொதுப்படையான குண விசேஷமாகக் காணப்பட்டு வருகின்றது.

விக்டர் (F) பெதர் என்பவர் சிறு பிராய முதல் கம்யூஸ்ட்களுடன் நெருங்கிப் பழகியவர். பல தொழிற் சங்கங்களில் பிரதான ஸ்தானங்களை வகித்தவர். 1943-இல் பிரிட்டனிலிருந்து ருஷ்யாவுக்குச் சென்ற வர்த்தக யூனியன் காங்கிரசுக்குக் காரியதரிசியாய் விளங்கியவர். தொழிலாளிகளின் தலைவராகப் பல ஆண்டுகள் சேவை செய்ததன் பயனாய், கம்யூனிஸ்ட்களின் அந்தரங்க நோக்கங்களையும் பகிரங்கக் கொள்கைகளையும் பற்றி நன்றாய் அறிந்திருப்பவர். இவர் சமீபத்தில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிடும் முக்கிய வாசகங்களை மட்டும் இங்கெடுத்தெழுதுகிறோம்:—

"1939 ஸெப்டம்பரில் பிரிட்டன் ஹிட்லரை எதிர்த்து யுத்தத்தைத் தொடங்கியபோது, பிரிட்டனிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி யங்கத்தினர்கள் அதுதான் சரியான காரியமென்று சபாஷ் பட்டம் வழங்கினார்கள். ஆனால், யுத்தம் ஆரம்பித்து மூன்று வாரங்கள் முடிவதற்குள் அவர்கள் யுத்தத்தை உடனே நிறுத்திவிட வேண்டும் என்று கத்தினார்கள். ஏனென்றால், அப்போது (1939 அக்டோபரில்) மாலடோவ் பெர்லினி விருந்த ரிப்பன்ட்ராப்புடன் ஓர் உடன்படிக்கையொப்பந்தத்தை (பின்லாந்து விஷயமாக)க் கையொப்ப மிட்டார். மாலடோவ் ஒரு ருஷியர்; எனவே, உலகின் எந்த நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி யங்கத்தினனும் ஸோவியத் அரசாங்க மேலதிகாரி மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் மிகச் சரியானதென்றும் மற்றவர் செய்வதெல்லாம் மிகமிகத் தவறென்றுமே நம்பியாக வேண்டும்.*

* சென்ற யுத்தம் ஆரம்பித்தபோது பிரிட்டன் ஜெர்மானி மீது போலந்து விஷயமாகப் போர் தொடுத்தது. அப்போது ருஷ்யா பிரிட்டன் செய்வது சரியென்று இருந்தபடியால், அந்த ருஷ்யக் கொள்கையைத் தழுவி, பிரிட்டனிலுள்ள எல்லாக் கம்யூனிஸ்ட்களும், ஹிட்லர்மீது யுத்தம் தொடுக்கப்பட்டது நியாயமே என்று முழங்கினார்கள். ஆனால், பின்லாந்தை ஆக்ரமிக்கிற விஷயத்தில் ருஷ்யா ஜெர்மானியின் ஒத்துழைப்பை வேண்டி நின்றபடியால், யுத்தம் தொடங்கிய மூன்று வாரங்களுக்குள் ருஷ்யாவும் ஜெர்மானியும் நேச உடன்படிக்கை செய்து கொண்டுவிட்டன. இவ்வுடன்படிக்கைப்படி ருஷ்யா ஹிட்லரின் நடத்தைகளை ஆமோதித்து விட்டபடியால், பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்களும் பல்டி யடித்தார்கள். ஹிட்லர் செய்வதெல்லாம் நேர்மை என்று ருஷ்யா அங்கீகரித்து விட்டபடியால், பிரிட்டனும் யுத்தத்தை உடனே நிறுத்தவேண்டுமென்று அவர்கள் துடித்தனர். ப-ர்.

“பிறகு 1941-இல் ஹிட்லர் ருஷ்யாமீது படையெடுத்தான். உடனே பிரிட்டிஷ் கம்யூனிஸ் கட்சியினர் இதுவரை போதித்து வந்த, யுத்தம் இப்போதே நிற்கவேண்டும் என்னும் கர்ஜனையைச் சட்டென்று நிறுத்திக் கொண்டு விட்டனர். அதற்குப் பதிலாக, யுத்தத்தை ஜெயிப்பதற்கு நாம் என்னென்ன வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று உபதேசிக்கத் தொடங்கினார்கள்; உடனே ஹிட்லரின் முதுகுப் புறமாக இரண்டாவது போர் முனையை உற்பத்தி செய்ய வேண்டுமென்று அலறித் துடித்தார்கள். பொது மக்கள் சமாதானமாக வாழவேண்டுமென்று இப்போது அவர்கள் விழையவில்லை; ஆனால், ஒரு பக்கா மும்முரா யுத்தத்தை—பொதுஜன யுத்தமாயினும் ஸ்திரீகள் நிரம்பிய யுத்தமாயினும், எஞ்சினீயர்கள் நிரம்பிய யுத்தமாயினும், அல்லது ஒரு சாம்ராஜ்ய மனப்போக்குள்ள யுத்தமேயாயினும் அப்படிப்பட்ட முரட்டு யுத்தத்தையே அவர்கள் வேண்டி நின்றார்கள்; அதற்காக எல்லாத் தியாகமும் புரிந்தார்கள். காரணம் என்ன? ஸோவியத் ருஷ்யாவை ஹிட்லர் இப்போது தாக்குகிறானென்பதற்காக!

“1942-இல் நம் (பிரிட்டிஷ்) நாட்டின் உற்பத்தியைப் பெருக்கித் தள்ளவேண்டும் என்று அவர்கள் நம்மை வன்மையாய்த் தூண்டிவிட்டார்கள். வேலை நிறுத்தம் செய்யாதே! என்று கதறினார்கள். இவ்வாறெல்லாம் நெடுக நடந்து கொண்டே சென்றது. 1945-இல் யுத்தம் முடிந்து உற்பத்தியும் பெருகிக் கொண்டே செல்லச் செல்ல, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் நம்மை மேலும் மேலும் ஊக்கிவிட்டு இன்னம் அதிகமாக உற்பத்தியைப் பன்மடங்காக அதிகரிக்கும்படி ஏவி வந்தார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்திப் பெருக்குக் கமிட்டியொன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், நம் ஏற்றுமதி வர்த்தகத்தை மிகவாக அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் உபதேசித்தார்கள்.

“ஆனால், 1947 பிறந்த பின்னர் அவர்கள் முன்பு 1939-இலும் 1941-இலும் பல்டியடித்ததைப் போல் மீண்டும் பெரிய பல்டியடித்தார்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கர்ஜிப்பதை நிறுத்திக் கொண்டு, தொழிற்சாலைகளில் வேலை செய்கிற வேகத்தை மட்டுப் படுத்தவும் முற்பட்டுவிட்டார்கள்.”

இந்த மேற்கோளிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? ருஷ்யா எப்போது யார் யாருடன் போர் தொடுக்கிறதோ அப்போதெல்லாம் உலக நாடுகள் யாவும் ருஷ்யாவைப் பின்பற்றி, ருஷ்யாவின் எதிரிகளுடன் போர் புரிய வேண்டும். அவ்வாறே, அந்நாடு எப்போது யார் யாருடன் சமாதானம் செய்து கொள்கிறதோ அப்போதெல்லாம் மற்ற நாடுகளும் அவ்வாறே சமாதானம் செய்து கொள்ள வேண்டும்.

பல்டிக்குப் பல்டி

ருஷ்யாவை எதிர்க்கிற விரோதியையொழிப்பதற்காக மற்றெல்லா நாடுகளும் எவ்வளவு வேண்டுமானாலும் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளலாம். அப்போது கம்யூனிஸ்ட்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றி மூச்சுக்கூட விடமாட்டார்கள். ஸோவியத்தின் விரோதியாகிய ஹிட்லரை ஒழித்துக் கட்டுவதற்காக இரவுபகலாக வேண்டுமானாலும் இவர்கள் அரும்பாடு படுவார்கள். ஸோவியத் அரசாங்கத்தின் நேசக் கக்ஷியினரின் கைகளைப் பலப்படுத்துவார்கள். வேலை நிறுத்தம் செய்வது தேசத் துரோகமென்பார்கள். உற்பத்தி பெருகாமல் எவ்விதத்தில் தடை செய்வதும் மாபாதகமென்பார்கள். எத்தனை மணி நேரமும், எந்தவித போனஸும் இல்லாமல், உண்மையான நோய்நொடி வந்துற்றபோதும் அவற்றை மறந்து வேலை பார்ப்பார்கள். ஏன்? எப்படியாவது ருஷ்யாவைக் காப்பாற்ற வேண்டுமே என்னும் நோக்கத்தோடு!

தெய்வாதீனமாகச் சென்ற யுத்தத்தில் நேசக் கட்சியினரும் ஸோவியத் கட்சியும் ஜெயம் பெற்றார்கள். ஹிட்லர் தொலைக்கப்பட்டான். கம்யூனிஸ ஆட்சி அப் பெரும் புயலில் தப்பிப் பிழைத்தது. இனிமேல் ருஷ்யாவுக்கு அபாயமில்லையென்னும் நிலைமை வந்தவுடனே மற்ற நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் மீண்டும் திருப்பி ‘பல்டி’யடித்தார்கள். விக்டர் (F) பெதர் கூறுவதைப் பாருங்கள்:—

ஓர் அறிவிப்பு

என் தம்பி அ. முஹம்மது இஸ்மாயீல் என்பவர் இந்தியாவில் விவாகம் செய்து கொள்ளாமையால், இங்கே வியட்நாமிலுள்ள நம்டின் என்னுமிடத்திலேயே 1943-இல் விவாகம் செய்து கொண்டார். அவருக்கு 3-5-45 அன்று கைருன்னிஸா என்னும் பெண் குழந்தை ஜனனமாயிற்று. அக்குழந்தைக்கு அன்னம் பாஷைதான் தெரியுமன்றி, தமிழ் தெரியாது. இவ்வூருக்குச் சிதம்பரம் தாலுக்காவிலுள்ள லால்பேட்டை மௌல்வீ ஒ. ப. அபூபக்கர் பாக்கவி என்பவர் வந்து சேர்ந்தார். இவருக்குத் தமிழ்தான் தெரியுமன்றி அன்னம் பாஷை தெரியாது. இவர் இங்கு வந்து $2\frac{3}{4}$ வருஷங்களாகின்றன. இவர் முற்சொன்ன கைருன்னிஸா என்னும் $7\frac{3}{4}$ வயதுள்ள என் சகோதரர் மகளுக்கு 13-10-1951-இல் குர்ஆன் போதிக்க ஆரம்பித்து 16-10-52 அன்று பூரணமாக ஓதக் கற்றுக்கொடுத்துவிட்டதுடன், நபிநாயகத்தின் மௌலூதும் புர்தாக்களும் ஓதிக் கொடுத்து முடித்தார். அன்றியும் நமது மார்க்க பர்ல், வாஜிப், சுன்னத்களையும் ஒழுங்காகக் கற்றுக் கொடுத்துவிட்டார். 50 ஆண்டுகளாக இந்த நம்டினில் முஸ்லிம்களிருந்தும் இவ்வளவு குறுகிய காலத்துக்குள், உள்ளூர்ப் பாஷை தெரியாத ஒருவர் இப்படி வெற்றிகரமாய் அரப் ஓதக் கற்றுக் கொடுத்ததில்லை. இந்தச் சாமர்த்திய மிக்க மௌல்வீ அவர்களுக்கு ஆண்டவன் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பதவியைத் தந்து ரக்ஷிப்பானாக! ஆமீன்.

A. ஷேக் தாவூத்,

(ADVT.) 171, ருய் மார்ஷால் போச், நம்டின்.

"கிளாஸ்கோவிலும், லிவர்பூலிலும், பர்மிங்ஹாமிலும், லண்டனிலும் உற்பத்திப் பெருக்கத்துக்கு முட்டுக்கட்டை போட பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்கள் மும்முரமாகப் பாடுபட்ட அதே நேரத்தில் (1947), பல்கேரியாவிலும், ருமேனியாவிலும், போலந்திலும் ஹங்கேரியிலும் உள்ள கம்யூனிஸ்ட்கள் அந்நாட்டுத் தொழிலாளிகளைப் பார்த்து, இன்னம் அதிகமாக, மிக அதிகமாக உற்பத்தியைப் பெருக்கித் தள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளத் தொடங்கினார்கள். கேட்டுக் கொண்டார்களா? இல்லை, இல்லை. அந்தக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தங்கள் கீழுள்ள தொழிலாளிகளை விரட்டி விரட்டியடித்தார்கள். வேலை செய்யும் நேரத்தை நீடித்துக் கொள்ள வேண்டுமென்றும், கூலியைக் குறைத்துப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், விடுமுறைத் தினங்களைத் தியாகம் பண்ணிவிட வேண்டுமென்றும் மிகக் கடுமையாய் வற்புறுத்தினார்கள். பிரிட்டனிலும் நம்முடைய தேவை அவ்வளவு முக்கியமானதாகவும் பெரிதாகவுந்தான் இருந்து வருகிறது. ஆனால், பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி நம் உற்பத்திப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டுமென்று உபதேசிப்பதேனோ? ஏனென்றால், இரும்புத் திரை நாடுகளுக்குள்ளே உற்பத்தியைப் பெருக்குவதால் ஸோவியத் அரசாங்கம் நன்மையடையும். பிரிட்டனில் உற்பத்தியைப் பெருக்குவதென்பது உலக நன்மைக்காகவும் எவ்விடத்திலுள்ள பஞ்சத்தையும் போக்குவதற்காகவுமாகும். உலகத்திலுள்ள கம்யூனிஸ்ட்கள் ஸோவியத் சாம்ராஜ்யத்தைத் தவிர்த்து வேறெப் பகுதியிலுள்ள பற்றாக் குறையையும் நிவர்த்தி செய்யக் கூடாது என்கிறார்கள். ஜனநாயக நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் இப்படித்தான் பக்ஷபாதம் காண்பிக்கிறார்கள். பிரிட்டனிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி, நாட்டுத் தற்காப்புக்காக பிரிட்டன் செலவழிக்கும் நிதியைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று போராடுகிறது. ஆனால், ஸோவியத் யூனியன் கோடிக் கணக்கான ரூபிள்களைத் தற்காப்புக்காகச் செலவிடுவது பற்றி இக் கட்சி ஒன்றுமே வாய் திறப்பதில்லை."

வாஸ்தவந்தான்! ருஷ்யாவுக்கு எதிரிகள் இருக்கக்கூடாது; ருஷ்யாவின் நன்மைக்காக அந்நாடு எதுவேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்; அந் நாட்டைக் காப்பாற்றுவதற்காக எல்லா நாடுகளும் தத்தம் உற்பத்தியைப் பெருக்க உதவி புரிய வேண்டும்; ஆனால், அந்நாட்டுடன் போட்டியிடக் கூடிய வகையிலோ, அல்லது அதை மிகைத்துவிடக் கூடிய அளவிலோ வேறு நாடுகள் உற்பத்தியைப் பெருக்கக் கூடாது; ருஷ்யா தன்னுடைய தற்காப்புக்காகவும் தன்னுடைய கம்யூனிஸ லட்சியத்தைப் பரத்துவதற்காகவும் எவ்வளவு நிதியை வேண்டுமானாலும் எப்படியும் செலவிட்டுக் கொள்ளலாம். ஆனால், கம்யூனிஸத்தை எதிர்க்கிற ஜனநாயக நாடுகள் ஒருவிதமாகவும் தற்காப்புக்கு முற்படாமல், கம்யூனிஸத்துக்குக் கதவுகளைத் திறந்து விடவேண்டும். இரும்புத்திரை நாடுகளுக்குள் தொழிலாளிகள் அடிமைகளாக நடத்தப்பட்டாலும், அற்பக் கூலி கொடுக்கப்பட்டாலும், எத்தனை மணிநேரம் வேலை வாங்கப் பட்டாலும் வேறெத் தேசத்திலுள்ள ஒரு கம்யூனிஸ்டும் வாய் திறக்கமாட்டான். ஆனால், இரும்புத் திரைக்கு இப்பாலுள்ள ஜனநாயக நாடுகளில் 8 மணி நேரம் வேலை வாங்கி, செய்கிற வேலைக்கு மூன்று பங்கு கூலியையும் கொடுத்து, மிகத்தாராளமான விடுமுறை நாட்களை வழங்கி, வியாதிக்கு லீவென்றும், வயிற்றுவலிக்கு லீவென்றும், தலைவலிக்கு லீவென்றும், காரணமில்லாததற்கு 'காஷுவல் லீவ்' (Casual leave) என்றும் சயாளமாகச் சம்பளத்துடன் முழு லீவ் கொடுத்து, பற்றாக்குறைக்கு 'போனஸ்' (Bonus) என்னும் உம்பளமும் கொடுக்கிற முதலாளிகளைப் பார்த்து, "முதலாளி ஒழிக! முதலாளித்துவ சர்க்கார் ஒழிக! உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்! புரட்சி ஓங்குக!" என்று அன்னமிட்ட கையையே இங்குள்ள கம்யூனிஸ்ட்கள் வெடுக்கென்று விழுந்து பிடுங்கிக் கடிப்பார்கள். ஏனென்றால், கம்யூனிஸ நாடுகளில் நடப்பன வெல்லாம் நேர்மையானவை; ஜனநாயக நாடுகளில் நடப்பன அனைத்தும் மாற்றமானவை என்பது உலக கம்யூனிஸ்ட் ஒவ்வொருவனின் அபிப்பிராய மாகும்.

ஸ்டாலினும் அணுக்குண்டும்

கம்யூனிஸ்ட் ஒவ்வொருவனும்—அவன் ஸ்டாலினாயிருப்பினும், அல்லது மிகக் கீழ்த்தரப்படியிலிருப்பினும்—சுயநலமும், பேராசையும், ருஷ்யாவின் க்ஷேமமொன்றே பெரிய பாக்கியமென்னும் தவறான கொள்கையும் உடையவனென்பதை முத்கூறிய விக்டர் (F) பெதர் விளக்கிக் காட்டுகிறார்:

"கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினனொருவன், அவன் எந்தப் பாகத்தில் வசிப்பவனாயிருப்பினும், ருஷ்யாவின் நலனொன்றை மட்டுமே தன் லக்ஷியத்தில் எங்ஙனம் பிரதான ஸ்தானங் கொடுத்து வைத்துக்கொண்டிருக்கிறானென்பதற்கு அணுக்குண்டு விஷயம் மற்றோர் உதாரணமாகும். ஹிரோஷிமாவின் மீது அணுக்குண்டை வீசுவதற்கு முன்னர் ஸ்டாலினை ஜனாதிபதி ட்ரூமன் சந்தித்தபோது, ஐக்கிய அமெரிக்கா ஒரு புதுமாதிரியான பொல்லாத வெடிகுண்டைக் கண்டுபிடித்திருப்பதாக இரகசியமாகத் தெரிவித்தார். 'அதைத் தடை செய்து ஒழித்து விடுங்கள்!' என்று ஸ்டாலின் சொன்னாரா? இல்லை, ஆனால், 'உடனே அந்தக் குண்டை ஜப்பானில் வீசுங்கள்!' என்றுதான் துடிதுடித்து வேண்டிக் கொண்டார். அமெரிக்கா அந்த மாதிரியாக ஜப்பான் மீது அணுக்குண்டை வீசுவது ருஷ்யாவின் நன்மைக்காகவே யாதலால், உலகத்திலுள்ள எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சியினரும்—ஜப்பானிலேயே உள்ள கம்யூனிஸ்ட்களுங்கூட அப்படிக் குண்டு வீசித்தான் ஆகவேண்டும் என்று ஒருமுகமாய் ஏற்றுக் கொண்டார்கள். ஏன்? ஸோவியத் சர்வாதிகாரியாகிய ஸ்டாலினே 'சரி' என்று சொல்லிவிட்ட பிறகு அதை எந்தக் கம்யூனிஸ்ட் எதிர்ப்பான்?

(44-ஆம் பக்கம் பார்க்க)

"என் வீடு"

சென்னை "அவர் இந்தியா பிலிம்ஸ்" காரர்களின் புதிய வெளியீடாகிய **"என் வீடு"** என்னும் படம் சென்ற 18-1-53 அன்று வாஹினி ஸ்டுடியோவின் திரைப்பட அறையில் பத்திராதிபர்களுக்கென்று பிரத்தியேகமாகக் காட்டப்பட்டது.

ஸ்ரீ நாகையாவின் டைரெக்ஷனைக் கொண்டும், அவரே ஏற்று நடிக்கும் பிரதம கதாநாயகர் பாகத்தைக் கொண்டும் "என் வீடு" என்னும் (சுமார் 17½ ஆயிரம் அடி நீளமுள்ள) அபூர்வமான அழகிய படம் மிகவும் சோபையுடன் திகழ்கிறது. மனைவி மக்களுடன் சுகபோக வாழ்க்கை நடத்திவந்த சிவராம் (நாகையா) என்னும் ஒரு பாங்க் மானேஜர் தம் முதலாளிக்கு தங்கம் வாங்கிவரப் பாம்பாய் சென்ற போது, அங்கே ஒரு தாசியின் மோக வலையுள் சிக்கி, தங்கத்தை யெல்லாம் இழந்து, கொலைபாதகர்களிடம் அகப்பட்டு, தெய்வாதீனமாகத் தப்பிவிடுகிறார். ஆனால், அவரைக் கொலை செய்ய எத்தனித்த கயவனே கொல்லப்படுகிறான். செத்தவன் சிவராம் என்று எங்கும் செய்தி பரவிவிடுகிறது. உயிருடனிருக்கும் சிவராம் மானத்துக்கு அஞ்சியும், தம் குடும்ப கௌரவத்தைக் கருதியும் தலைமறைவாய் உயிர்வாழ்கிறார். சிவராமின் மனைவியாகிய சாரதா (T. R. ராஜகுமாரி) அரும்பாடு பட்டுத் தன் குடும்பத்தைக் காப்பாற்றி, குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வருகிறாள். இக்குடும்பம் குட்டிச்சுவராய்ப் போவதற்குச் சூழ்ச்சி செய்து தீங்கு விளைத்தனபால் (T. S. பாலையா) இறுதியில் தண்டனைக்கு உள்ளாகிறான். சிவராமின் குடும்பம் மீண்டும் ஒன்றுபட்டு மகிழ்வடைகிறது. இது தான் கதைச் சுருக்கம்.

இந்த வெற்றிகரமான சோகக் கதையின் பிரதம கதாபாத்திரமாக வரும் நாகையாவுக்கு நாம் எவ்வளவு புகழ்மாலை சூட்டுகிறோமோ, அதே அளவுக்கு இக் கதையின் பொல்லாதவனை (வில்லன்) பாகத்தை ஏற்று நடிக்கும் பாலையாவுக்கும் நாம் நற்கியாதியை வழங்க வேண்டும். நாகையாவும் பாலையாவும் எதிரெதியான குணம் படைத்தவர்களாக இப்படத்தில் எவ்வளவு தத்ரூபமாகவும் உண்மையாகவும் மெய்ம்மறந்தும் நடித்திருக்கிறார்களென்றால், இந்த "என் வீடு" என்னும் சினிமாவைப் பார்க்கிறவர்களின் நெஞ்சு உருகும்படி படத்தின் வனப்பு அமைந்து விட்டது. கதாநாயகி ராஜகுமாரியின் நடிப்பும் அபரிமிதமாகக் காட்சியளிக்கிறது.

தலைமறைவாய் ஒரு தோட்டியாக உயிர் வாழும் சிவராமன் தன் மக்கள் புரியும் உன்னதமான சங்கீதக் கச்சேரியைக் கேட்கும் போது அவர் படுகிற பாடும், பொங்கியெழும் வாத்ஸல்ய உணர்ச்சியும், அப்போது முகத்தில் தோன்றும் பாவங்களும் பார்ப்பவர் உள்ளத்துள் ஊடுருவிப் பாய்ந்து ஓரிரு கண்ணீர்த் துளிகளைச் சிந்தச் செய்கின்றன. இதுவரை எத்தனையோ படங்களில் தம் அற்புத நடிப்பைக் கொண்டு பக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இவர் இப்படத்தின் மூலம் நிச்சயமாக இன்னம் பெரிய புகழையே பெற்றுக்கொண் டிருக்கிறார். இவர் நடிப்பில் உள்ள உணர்ச்சிகள் யாவும் ஜீவன் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால், கதையாரம்பத்தில் இவர் தம் குழந்தைகளுடன் சிறு பிள்ளை போல் விளையாடும் சில காட்சிகள் அவ்வளவு இயற்கையாய்க் காணப்படவில்லை யென்றுதான் குறிப்பிட வேண்டும்.

பாலையாவின் "பொல்லாதவன்" பாகத்தைப் பார்த்துப் பார்த்துப் பழகிய நாம் இப்படத்தில் பல புதிய மாறுதல்களைக் காணுகிறோம். மற்றப் படங்களில் அவர் நடிப்பதில் அவர் மீது எவ்வளவு வெறுப்புணர்ச்சி ஏற்படுமோ அவற்றை யெல்லாம்விட இப்படத்தில் வரும் தனபாலைப் பார்த்து நாம் அதிக வெறுப்பும் ஆத்திரமும் அடையும்படி அபரிமிதமாக நடித்துத் தீர்த்துவிட்டார். சரளமாகப் பேசுவதும், பேச்சுக் கேற்றபடி முகத்தோற்றங் காட்டி நடிப்பதும் கொஞ்சங்கூடச் செயற்கையா யில்லாதபடி அவர் இதில் தோற்றமளிக்கிறார். இம் மாதிரியான முற்றும் பொருத்தமான — கூடுதலோ குறைச்சலோ இல்லாமல் ஒழுங்கான 'வில்லன்' பாகம் நம் தமிழ்ப் படங்களில் அமைவது துர்லபம்

மொத்தத்தில் இப்படம் உணர்ச்சி ததும்பும், உயிர்ப்பு நிறைந்த, குற்றமற்ற அழகிய அபூர்வப் படம் என்று நற்சாட்சி வழங்கலாம்.

ஆனால், படத்தின் நீளம் சற்று அதிகமாக இருப்பதால் சிற்சில இடங்களில் பார்ப்பவர் உள்ளத்துள் கொஞ்சம் எரிச்சல் எழுகிறது. இவ்வளவு உணர்ச்சி ததும்பி வழியும் உன்னதப் படம் சுமார் 12 அல்லது 13 ஆயிரம் அடி நீளத்துக்குள் அமைக்கப்பட்டிருந்தால் இன்னம் மிகமிக விசேஷமாக உயர்ந்தோங்கியிருக்கும்.

சில உயர்தரமான கர்நாடக சங்கீதங்களும், பல அழகிய மெட்டுள்ள இனிய கீதங்களும், குறிப்பாக எல்லார் மனத்தையும் கலங்க வைக்கும் "கொஞ்சு மொழி மைந்தர்களே" என்னும் பாட்டும் இப்படத்தின் விசேஷ அம்சங்கள். இப் புதிய 1953-ஆம் ஆண்டின் ஆரம்பத்தையே மிக அழகாக அலங்காரம் செய்து வைக்கும் இப்படம் பொதுமக்களிடையே இவ்வாண்டு முற்றும் மிகப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

(42-ஆம் பக்கத் தொடர்)

"பிறகு வெகு காலஞ்செல்வதற்குள் கம்யூனிஸ்ட் கட்சி யங்கத்தினர்கள் பிரிட்டிஷ், அமெரிக்க அணுக்குண்டு ஆராய்ச்சி விஞ்ஞானிகளை யண்மி, ஸோவியத் ருஷ்யாவும் இந்தக் குண்டுகளை உற்பத்தி செய்வது எப்படி யென்று தெரிந்து கொண்டால் உலக சமாதானம் நன்றாய் வலுப்படு மென்று போதித்தார்கள். அவ் விஞ்ஞானிகளுள் ஓரிருவர் அறியாமையால் அக் கம்யூனிஸ்ட்களின் பசப்பு வார்த்தைகளுக்கு மயங்கி, அணுச் சக்தி இரகசியத்தை ருஷ்யாவுக்கு வெளிப் படுத்துவதால், நிஜமாகவே உலக சமாதானத்துக்குப் பாடுபட்டதாகத்தான் போய்முடியு மென்று நம்பி, தங்கள் நாட்டுக்கே துரோகிகளாகி விட்டார்கள். லண்டனிலும் வாஷிங்டனிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சி உடனே தீவிர நடவடிக்கை யெடுத்து அணுக்குண்டு உற்பத்தியைத் தடைசெய்து தடுத்து நிறுத்திவிட வேண்டு மென்று அகில உலக கம்யூனிஸத் தலைமைக் காரியாலயம் புக்காரெஸ்டி விருந்து துண்டு பிரசுரங்களையும், பிரேகி விருந்து பிரசார பத்திரங்களையும் இப்போது கிளப்பிவிட்டுக்கொண் டிருக்கிறது. ஆனால், அத் தலைமைக் காரியாலயம் மாஸ்கோவுக்கு இப்படிப்பட்ட விண்ணப்பத்தை விடுப்பதில்லை. ஏனென்றால், ஸோவியத் அரசாங்கமேதான் ஸோவியத் கம்யூனிஸ கக்ஷியை ஆக்ரமித்துக்கொண்டிருக்கிறது. இந்த ஸோவியத் கம்யூனிஸ கக்ஷியேதான் அகில உலக கம்யூனிஸத் தலைமைக் காரியாலயத்தை ஆட்டிப் படைக்கிறது. இந்த அகில உலக கம்யூனிஸத் தலைமைக் காரியாலயம் ஒவ்வொரு நாட்டிலுள்ள எல்லாக் கம்யூனிஸக் கக்ஷியையும் ஆக்ரமித்துக் கொண் டிருப்பதால், அவற்றின் அங்கத்தினராக இருக்கும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும், 'ஸ்டாலின் சொல்லி விட்டால் அதற்கு அப்பீலே கிடையாது!' என்று மிகவும் கீழ்ப்படிதலுடன் ததாஸ்து பாடி விடுகிறான்.

"எனவே, இவ்வுலகின் பல்வேறு நாடுகளிலும் காணப்படுகிற அத்தனை கம்யூனிஸ்ட் கக்ஷியின் ஒவ்வோர் அங்கத்தினனும், தனக்குப் புரிந்தாலும் சரி, புரியாமலே போய்விட்டாலும் சரி, ஸோவியத் அரசாங்கத்தின் நலன்களுக்காக மட்டுமே பாடுபடுகிறான். அவன் எப்போதும் மறவாமல் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய சுலோகம் என்ன வென்றால், 'ருஷ்யா எப்போதும் சரியாகவே நடந்து கொள்கிறது' என்பதுதா னாகும்."

பாருங்கள்! ஸ்டாலின் சொல்லி விட்டபடியால், தன் தலைமீது அணுக்குண்டு வீழ்ந்து வெடித்தாலும் பரவாயில்லை யென்று ஒரு ஜப்பானிய கம்யூனிஸ்ட் 1945-இல் கருதின னென்றால், அவன் தன்னை விடவும் தன் நாட்டைவிடவும் ஸ்டாலினையும், ஸோவியத் அரசாங்கத்தையும், அந்நாட்டையும் மட்டுமே மேலானவர்களென்று கருதினனென்பது விளங்கவில்லையா? உலகம் பூராவும் கெட்டுக் குட்டிச் சுவராகி விட்டாலும் ருஷ்யா ஒன்று மட்டும் எப்படியாவது காப்பாற்றப்பட்டால் போது மென்று ஒவ்வொரு நாட்டிலுள்ள ஒவ்வொரு கம்யூனிஸ்டும் கருதுகிறா னென்றால், அவனுடைய "தேசபக்தி" எந்தத் திக்கை நோக்கி யிருக்கிறதென்று விளக்கவும் வேண்டுமோ?

ருஷ்யாவில் நடப்பன வெல்லாம் அநியாயம், அக்கிரமம்; ஜனநாயக நாடுகளில் நடப்பன வெல்லாம் மட்டுமே மிகவும் நியாயம், நேர்மை என்று நாம் இங்குக் குறிப்பிட வரவில்லை. அங்கேயும் சில நன்மைக ளிருக்கலாம்; இங்கேயும் பல தீமைக ளிருக்கலாம். ஆனால், அதனிமித்தம் ஸ்டாலின் சொல்கிறபடியே எல்லாரும் தலையசைக்க வேண்டும்; ஸோவியத் அரசாங்கம் கடைப் பிடிக்கிற மார்க்கங்களையே நாமும் கடைப்பிடிக்க வேண்டும். என்று உலக கம்யூனிஸ்ட்கள் விபரீத பிரசாரம் புரிவது கொஞ்சமாவது நியாயமாகப் படுகின்றதா? "ஆசையும் நேசமும் ஆனந்த மங்கே, பேசமும், பாசமும் பிதற்றலும் இங்கே!" என்று நந்தனார் பாடியதாக ஒரு பாட்டு இருக்கிறதல்லவா? அவராவது தில்லையம்பலத்தில் நடம் புரிகின்ற தம் தெய்வத்தின்மீது பற்றுக் கொண்டுவிட்டதால் அப்படிப் பாடினார். ஆனால், நம்முடைய கம்யூனிஸ்ட் தோழர்களிருக்கிறார்களே அவர்கள், "ஆசையும் நேசமும் ஆனந்தம் மாஸ்கோவிலே, பேசமும் பாசமும் பிதற்றலும் இந்த இரும்புத்திரை யல்லாத நாட்டிலே!" என்று பாட்டுப் பாடிக் கூத்தடிக்கிறார்கள்.

எனவே, உலகத்தின் எந்த நாட்டில் ஒரு கம்யூனிஸ்ட் வசித்தபோதினும் அவனுடைய எண்ணமும், தேச பக்தியும் சதா மாஸ்கோவின் திக்கிலேயே இருக்கின்றன என்பது தெளிவாகவில்லையா? கம்யூனிஸ்ட்களுக்கு இவ்வுலகத்திலுள்ள எல்லா நாடுகளும் அழிந்துவிட்ட போதினும், ருஷ்யாமட்டும் சாசுவதமாய் நிலைத்து நிற்கவேண்டுமென்றும், எவர் தொலைவதாயிருந்தாலும் ஸ்டாலின் மட்டும் நிரந்தர சர்வாதிகாரியாக இருக்கவேண்டு மென்றும் பேராசை குடிகொண்டிருக்கிறது.

199009

ஏ தமிழ் நாட்டு முஸ்லிம் சகோதரர்காள் !

உங்கள் புத்திரர்களும் புத்திரிகளும் சுலபமான முறையில் இஸ்லாத்தின் அனுஷ்டானங்களைப் படித்துணர வேண்டாமா ?

இதுவரை பத்துப் பதிப்புக்கள் வரை விற்று முடிந்த எமது "இஸ்லாம்" என்னும் அபூர்வமான அழகிய செந்தமிழ் நூலின் புத்தப் புதிய பதினொன்றும் பதிப்பு, இன்னம் பல மாறுதல்களுடனும் கூடுதலான படங்களுடனும் இப்போது வெளிவந்திருக்கிறது. மிகப் பெரும்பாலான தமிழ் நாட்டு முஸ்லிம்கள் சென்ற முப்பதாண்டுகளாக ஈமான், தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் என்னும் ஐந்து பாலான கடமைகளையும் பிறர் உதவியின்றித் தமிழில் கற்றுத் தேர்வதற்கு எமது இஸ்லாம் ஒன்றுமட்டுமே பேருதவியா யிருக்கிற தென்பதை எல்லாரும் நன்குணர்வர். ஷாபி, ஹனபீ ஆகிய இரு மதுஹபுக்குரியவர்களும் இப் புஸ்தகத்தின் துணை யொன்றைமட்டுமே வைத்துக் கொண்டு, எல்லா பர்லான, வாஜிபான, சுன்னத்தான சகல தத்துவங்களும் மஸ்அலாக்களுடன் இந்நூலில் இனிது வர்ணிக்கப்பட் டிருக்கின்றமையால், முழுப பயனையும் பெற்றுக்கொண்டு விட முடியும். பள்ளியிற் படிக்கும் சிறுவர் சிறுமியர் முதல், ஹஜ்ஜென்னும் இறுதிக் கடமையை முடிக்கச் செல்லும் வயோதிகர் ஈறுக ஒவ்வொருவரும் இதைத் துணையாகக் கொண்டு நன்மை பெற முடியும். தொழுகையின் ஒவ்வோர் அச்சமும் எப்படிப்பட்டவரும் நன்கு விளங்கிக் கொள்ளத் தக்கவாறு இனிது விளக்கப்பட் டிருப்பதைப்போல், ஹஜ் சம்பந்தமான ஒவ்வொரு கடமையும் விளக்கமாகவும், விவரமாகவும், நுணுக்கமாகவும் தீட்டப்பெற் றிருக்கின்றன. நம் முஸ்லிம்களுக்கும், தொழுகையைக் கற்க விரும்பும் பாலியர்களுக்கும் ஹஜ் செய்ய நாடி யாத்திரை புறப்படுகிற இருபாலார்களுக்கும் மிகப்பெருந் துணைவனு யிருக்கக்கூடிய நூல் இஃது ஒன்றே யாகும். கண்கவரும் ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டுள்ள இந்தப் புத்தப் புதிய பதினொன்றும் பதிப்பின் விலை ரூ. 3 தான். இவ்வளவு சிறு விலையில் அவ்வளவு பெரிய விஷயங்களைப் போதிக்கும் வேறு தமிழ் நூல் ஒன்றுமே நம் நாட்டிலில்லை. தபால் செலவு 10 அணு.

"நபிகள் நாயக மான்மியம்"

(முதற் பாகம்)

29 அதிகாரங்கள்: ஹி. ஆருவதாண்டு, அஹ்ஜாப் யுத்தம் முடிய.

இலக்கிய உலகில் தனிப் பெரும் புரட்சி!

பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் அள்ளிச் சொரியப்பட்டு, அழகினும் அழகிதாய் வனப்பினும் வனப்பதாய், பல மூவர்ணக் கலர்ப் படங்களுடன் இந்த "தாருல் இஸ்லாம்" பத்திரிகை எந்த அளவில் இருக்கிறதோ அதே ஸைஸில் 600 பக்கங்களுடன், தையாரிக்கப் பட்டுள்ளது. மிகப் பிரமாதமான பைண்டு செய்யப்பட்டது. 3-வர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. பார்ப்போர் கண்ணைப் பறிக்கத்தக்கது!

இப் பாருலகின் கீர்த்தி மிக்க ஜயதிலகமாய் விளங்கும் எம்பிரான் முஹம்மது நபி (சல் அம்) அவர்களின் மெய்யான, ஆதார பூர்வமான அபூர்வ சரித்திரம். நாம் முன்னம் வெளியிட்ட முதல் பதிப்பைவிட, இதில் 9 அதிகாரங்கள் அதிகமாகச் சேர்க்கப்பட் டுள்ளன. அறுசுவையுடன் கூடிய இனிய விருந்தில் வயிறு நிரம்ப உண்டு விட்டு மெய்ம்மறந்து திரியும் மனிதனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியைவிட, இலக்கிய உலகில் இந்நூல் அளிக்கும் இணையற்ற இன்பத்தை வாயால் வருணிக்க இயலுமோ, இயலுமோ?

இவ்வபூர்வ இலக்கிய சரித்திர ஆராய்ச்சி பொக்கிஷம் ஒவ்வொரு நூல் நிலையத்திலும், மத்ரஸா விலும், கல்லூரியிலும், வாசக சாலைகளிலும் பொது மக்கள் நற்பயனடைவதற்காக அத்தியாவசியமாய் இருக்கவேண்டிய அரும் பெரும் பாக்கியமாகும்.

விலை ரூ. 12. தபாற் செலவு 1-6-0 தனி.

ஷாஜஹான் புக் டெப்போ,

460, திருவல்லிக்கேணி ஹைரோட் :: சென்னை-5.

Regd. No. M. 4950 DARUL ISLAM February 1953

என்ன நேர்த்தி பாருங்கள்



கிளை :—84, கீழ வெளி வீதி, மதுரை.

இலங்கை ஏஜெண்ட்:

அபூபக்கர் டெக்ஸ்டைல்ஸ், 25-1/4, டாம் வீதி, கொழும்பு.

Printed by Sri K. Sundaresan at Photo Litho Press, Madras—5
Published by I. Abdur Rahman, at "DARUL ISLAM," 460, Triplicane High Road, Madras—5